www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

செப்டம்பர் 2010
ரூ. 7.00



# காஷ்மீர்

## இந்திய இராணுவமே வெளியேறு!

படிப்பகம்

www.padippakam.com



ஆண்டுதோறும் 21 இலட்சம் குழந்தைகள் தண்ணீர் தொடர்பான நோய்களால் மாண்டு போகின்றன.



உலகின் 40% மக்களுக்கு குடிநீர் வசதியும் சுகாதார வசதியும் இல்லை.

# இதைவிட வக்கிரம் இருக்க முடியுமா?

இதைவிட கொடூரம் ஏதாவது இருக்க முடியுமா? இதைவிட வக்கிரம் ஏதாவது இருக்கத்தான் முடியுமா? மனித இனம் குடிக்கத் தண்ணீர்பெறும் மிகச்சாதாரண உரிமையைக் கூட எதிர்க்கிறார்கள், மனித இனத்தின் கொடிய எதிரிகளான ஏகாதிபத்தியவாதிகள்.

கடந்த ஜூலை 28-ஆம் தேதியன்று அனைத்து மக்களும் தூய குடிநீரும் சுகாதார வசதியும் பெற வேண்டும் என்று ஐ.நா. மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தூய குடிநீர் பெறுவதென்பது அடிப்படை மனித உரிமை என்றும், அனைத்து நாடுகளும் இம்மனித உரிமையைக் காக்க வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது.

2000 மற்றும் 2005-ஆம் ஆண்டுகளில் பொலிவியாவின் மூன்றாவது பெரிய நகரமான கோச்சபம்பாவில் தண்ணீர் தனியார்மயத்தை எதிர்த்து மக்கள் மாபெரும் பேரெழுச்சியில் இறங்கினர். அப்போராட்டத்தை வழி நடத்திய ''சோசலிசத்துக்கான இயக்க''த்தின் தலைவரான இவா மொரேல்ஸ், 2005-இல் பொலிவியாவின் அதிபரானார். பொலிவிய மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை எதிரொலிக்கும் வகையிலும், தண்ணீரை மனித இனத்தின் அடிப்படை உரிமையாக்கும் உணர்விலும் அவர் ஐ.நா.வில் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். 192 நாடுகள் கொண்ட ஐ.நா.மன்றத்தில், பொலிவியா அதிபர் கொண்டுவந்த இத்தீர்மானத்தை ஆதரித்து இந்தியா உள்ளிட்டு 122 நாடுகளும், எதிராக 41 நாடுகளும் வாக்களித்துள்ளன. உலகின் ஏகாதிபத்திய நாடுகளும் பணக்கார நாடுகளுமான அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், ஆஸ்திரியா, இஸ்ரேல், நெதர்லாந்து, டென்மார்க் முதலான நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இதர நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை நாடகமாடியுள்ளன.

இத்தீர்மானத்தை நிறைவேற்றக் கூடாது என்றும், தீர்மானத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று கூறி அதை நீர்த்துப்போக வைக்கவும் ஏகாதிபத்திய நாடுகளும் தண்ணீர் ஏகபோக நிறுவனங்களும் கடும் முயற்சி செய்தன. ஏனெனில், இன்று உலகின் வேகமாக வளர்ந்து வரக்கூடிய, கொள்ளை இலாபம் தரக்கூடிய தொழிலாக தண்ணீர் வியாபாரம் முன்னணிக்கு வந்துள்ளது. இதனாலேயே தண்ணீரை ''நீலத் தங்கம்'' என்று பன்னாட்டு ஏகபோகக் கம்பெனிகள் அழைக்கின்றன. கடந்த ஆண்டில், எண்ணெய்க் கம்பெனிகளின் இலாபத்தில் ஏறத்தாழ 40 சதவீதத்தை தண்ணீர் கம்பெனிகள் அடைந்துள்ளன. இந்தக் கம்பெனிகள், உலகின் தண்ணீர் ஆதாரங்களில் 5% அளவுக்கு சொந்தம் கொண்டாடுகின்றன. இதிலேயே இவ்வளவு இலாபம் என்றால், இதர நீர் ஆதாரங்களையும் அவைக் கைப்பற்றிக் கொண்டால் அவற்றின் இலாபம் எவ்வளவு மடங்கு அதிகரிக்கும் என்று சொல்லத் தேவையில்லை.



உலகின் 200 கோடி மக்கள் குடிநீர் பற்றாக்குறையால் அவதிப்படுகின்றனர்.

விவெண்டி, சூயஸ், பெக்டெல் முதலான உலக அளவில் தண்ணீர் வியாபாரத்தில் முதன்மையாக உள்ள பத்து நிறுவனங்கள், 150 நாடுகளில் 200 கோடி வாடிக்கையாளர்களுக்குத் தண்ணீர் விநியோகம் செய்து வருகின்றன. உலக வர்த்தகக் கழகம் தண்ணீரையும் ஒரு சரக்காகவே ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே தண்ணீரும் ஏற்றுமதி வியாபாரமாகிறது. ஏழை நாடுகளில் உலக வங்கியின் கடன் திட்டங்களில் பெரும்பாலானவை

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்: 11
செப்டம்பர் 2010

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

### அணு விபத்து கடப்பாடு சட்டம்:

# சந்தி சிரித்தது மன்மோகனின் களவாணித்தனம்!

அணு விபத்துக் கடப்பாடு மசோதாவை, பா.ஜ.க.-வின் ஆதரவோடு நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றியிருக்கிறது, காங்கிரசு கூட்டணி அரசு. அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே கையெழுத்தாகி, ஏற்கெனவே நாடாளுமன்றத்தின் ஒப்புதலைச் சதித்தனமான முறையில் பெற்றுவிட்ட அணுசக்தி கூட்டுறவு ஒப்பந்தத்தின் (123 ஒப்பந்தம்) இளைய பங்காளிதான் இந்த அணு விபத்துக் கடப்பாடு சட்டம்.

இச்சட்டத்தை நிறைவேற்றினால்தான், அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து அணு உலைகளை இந்தியா இறக்குமதி செய்ய முடியும். ஏனென்றால், அமெரிக்காவோடு கூட்டுச் சேர்ந்து நிறுவப்படும் அணு மின் நிலையங்களில் ஏதேனும் விபத்து ஏற்பட்டால், அவ்விபத்திற்கு அணு உலைகளை/தொழில்நுட்பத்தை விற்ற அமெரிக்க நிறுவனங்கள் மீது நட்ட ஈடு கேட்டோ, கிரிமினல் குற்றம் சுமத்தியோ வழக்குத் தொடரக் கூடாது; அந்த அணு உலைகளை இயக்கும் நிறுவனங்கள்தான் விபத்திற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் அமெரிக்கா விதிக்கும் நிபந்தனை. இச்சட்டம் இப்படிபட்ட பாதுகாப்பை அமெரிக்காவிற்கு மட்டுமல்ல, அணு உலை இயந்திர பாகங்களை இந்தியாவிற்கு விற்க முன்வரும் பிற நாடுகளின் நிறுவனங்களுக்கும், உள்நாட்டு நிறுவனங்களுக்கும் அளிக்கிறது.

மன்மோகன் சிங் இச்சட்டத்தை நிறைவேற்றிய கையோடு, ''அமெரிக்காவின் நலன்களுக்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை'' எனச் சத்தியம் செய்யாத குறையாக நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார். ஆனால், இப்படிபட்ட சட்டம் எதுவுமில்லாமல் ரசிய உதவியோடு கூடங்குளத்தில் நிறுவப்பட்டு வரும் அணு உலைகள், மன்மோகன் சிங்கின் புளுகுணித்தனத்தையும், இச்சட்டம் அமெரிக்காவின் நிர்பந்தத்தால்தான் கொண்டு வரப்படுகிறது என்பதையும் ஒருசேர நிரூபிக்கின்றன. இது மட்டுமல்ல, அமெரிக்க முதலாளிகளின் விருப்பத்தை நிறைவேற்ற காங்கிரசு அரசு அடுத்தடுத்து மேற்கொண்ட தகிடுதத்தங்கள் திருவாளர் மன்மோகன்சிங் கோட்டு சூட்டுப் போட்டு திரியும் ஒரு நாலாந்தர கிரிமினல் போர்ஜரி பேர்வழி என்பதை நிரூபித்துள்ளன.

அணு விபத்துக் கடப்பாடு மசோதா நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுவதற்காக கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்டது. பா.ஜ.க. உள்ளிட்ட பெரும்பாலான எதிர்க்கட்சிகள் இம்மசோதாவை எதிர்த்ததால், அம்மசோதா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சக நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

''அணு உலையை விற்ற நிறுவனம் அல்லது அதன் ஊழியர்களின் திட்டமிட்ட கவனக்குறைவின் காரணமாக விபத்து நடந்திருந்தால், அணு உலையை இயக்கும் நிறுவனம் உலையை விற்ற நிறுவனத்திடமிருந்து நட்ட ஈடு கோரலாம்'' என்ற விதி (17ஆ) அம்மசோதாவில் சேர்க்கப்பட்டிருந்ததால், அமெரிக்காவும் இம்மசோதாவை எதிர்த்தது. இந்த விதியை நிரூபித்து நட்ட ஈடு பெறுவது கடினம் என்ற போதிலும் அமெரிக்கா இந்த விதி சேர்க்கப்பட்டதை விரும்பவில்லை.

அமெரிக்கா முகஞ்சுளிப்பதை மன்மோகன் சிங்கால் பொறுத்துக் கொள்ள முடியுமா? அதனால் இந்த விதியை நீக்கக் கோரும் அறிக்கையொன்றைத் தயாரித்து, அதனை நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பி வைத்தார். உறுப்பினர்கள் இந்த நீக்கத்தை எதிர்த்தது ஒருபுறமிருக்க, மன்



படிப்பகம்

www.padippakam.com

மோகன் சிங்கின் அமெரிக்க அடிவருடித்தனமும் அம்பலப்பட்டுப் போனதால், அவரது அரசு, ''இது எங்களின் ஆலோசனைதான்'' என்று கூறி இந்நீக்கத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டது.

இம்மசோதா மீது நாடாளுமன்ற நிலைக்குழுவில் நடந்த விவாதத்தின் அடிப்படையில் அணு உலை மற்றும் இயந்திர பாகங்களை விற்கும் நிறுவனங்களிடமிருந்து நட்ட ஈடு பெறுவதற்கான விதி 17(ஆ)-வில் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டன. இதன்படி, தொழில்நுட்ப ரீதியாகக் குறைபாடுடைய சாதனங்களை, பழுதான சாதனங்களை விற்றதால் விபத்து நேர்ந்ததாக நிரூபிக்கப்பட்டாலும், அணு உலையை இயக்கும் நிறுவனம் இயந்திரங்களை விற்ற நிறுவனங்களிடமிருந்து நட்ட ஈட்டுத் தொகையைப் பெற முடியும் என்பது உள்ளிட்ட 18 திருத்தங்களை முன்வைத்தது, நாடாளுமன்ற நிலைக்குழு. போலி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் தவிர, பா.ஜ.க. உள்ளிட்ட பிற கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் இந்தத் திருத்தங்களோடு, மசோதாவைச் சட்டமாக்க ஒப்புக் கொண்டனர்.

இப்படி நாடாளுமன்ற நிலைக்குழுவின் ஒப்புதலைப் பெற்று விட்டு, அவ்வாறு ஒப்புதல் பெறப்பட்ட ஆவணத்தில் அந்தக் குழுவின் உறுப்பினர்களுக்கே தெரியாமல், ஒரு போர்ஜரி வேலை செய்தார் மன்மோகன் சிங். அம்மசோதாவில் தனித்தனியாக இருந்த 17(அ) என்ற விதிக்கும், 17(ஆ) என்ற விதிக்கும் இடையில் ''மற்றும்'' (and) என்ற விகுதியைச் சேர்த்து இரண்டையும் இணைத்தார். இதன் மூலம், அணு உலை இயந்திர பாகங்களை விற்கும் நிறுவனங்களிடம், அணு உலையை இயக்கும் நிறுவனம் 17(ஆ) பிரிவில் காணப்படும் அம்சங்கள் குறித்துத் தனியாக ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொண்டிருந்தால் மட்டுமே, நட்ட ஈடு பெற முடியும் என்ற நிபந்தனை நைச்சியமாக உருவாக்கப்பட்டது. நாடாளுமன்ற நிலைக்குழு தயாரித்துக் கொடுத்த அறிக்கையில் ''மற்றும்'' (and) என்ற வார்த்தை மட்டும் அச்சிடப்பட்ட தாளை யாருக்கும் தெரியாமல் செருகியதன் மூலம் இந்த ஃபோர்ஜரி வேலையை நடத்தி முடித்தது, மன்மோகன் சிங் கும்பல்.

இந்த விசயத்தை இந்து நாளிதழ் அம்பலப்படுத்தியதன் விளைவாக மன்மோகன் சிங் அரசின் போர்ஜரி வேலை சந்தி சிரித்தது. இதனையடுத்து மசோதாவிற்கு ஆதரவளிக்கச் சம்மதித்திருந்த பா.ஜ.க. அந்த வார்த்தையை நீக்க வேண்டும் என அறிவித்தது. ஃபோர்ஜரி அம்பலமாகி மாட்டிக் கொண்ட மன்மோகன் சிங் கும்பலோ, அதற்காக வெட்கப்படாமல், ஏதோ நாணயஸ்தர்கள் போல, ''உறுப்பினர்களுக்கு விருப்பமில்லையென்றால், அந்த வார்த்தையை விலக்கிக் கொள்கிறோம்'' எனக் கூறி அந்த வார்த்தையை நீக்கியது.

ஆனாலும் அக்கும்பல் அசராமல் அடுத்த சதியில் இறங்கியது. நாடாளுமன்ற நிலைக்குழு முன்மொழிந்த திருத்தங்களைப் பரிசீலனை செய்வது என்ற பெயரில், ''அணு விபத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் அணு உலை உபகரணங்கள் வழங்கும் நிறுவனங்கள் அல்லது அதன் ஊழியர்கள் செயல்பட்டுள்ளனர் என அணு உலையை இயக்கும் நிறுவனங்கள் நிரூபிக்க வேண்டும்'' என்ற விதியை 17(ஆ) பிரிவில் சேர்த்தது மைய அமைச்சரவை. மன்மோகன் சிங் கும்பலால் முன்னர் புகுத்தப்பட்ட இடைச்செருகல்களைவிட அயோக்கியத்தனமானது இது. ஏனென்றால், 'விபத்து' நேரிடும் எனத் தெரிந்திருந்தும், தனது இலாபத்திற்காக பாதுகாப்பு விதிகள் அனைத்தையும் யூனியன் கார்பைடு நிறுவனம் திட்டமிட்டே புறக்கணித்தது என்பதை நிரூபிக்க ஏராளமான சாட்சியங்கள் இருந்தபோதும், அதனை வாரன் ஆண்டர்சன் மட்டுமல்ல, இந்திய உச்சநீதி மன்றம்கூட ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டது என்பதுதானே துரோக வரலாறு.

மன்மோகன் சிங் கும்பல் புகுத்திய இந்தப் புதிய விதியையும் பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்த்ததால், அந்த விதியையும் கைவிட்டு, பின் பா.ஜ.க.-வின் ஆதரவோடு இச்சட்டத்தை நிறைவேற்றி விட்டது, காங்கிரசு. இந்தச் சட்டத்தை நிறைவேற்ற அடுத்தடுத்துப் பல மோசடிகளையும், சதிகளையும், பொய்களையும் அவிழ்த்துவிட்டு அம்பலமாகி நிற்கும் மன்மோகன் சிங், அதற்காக யாரிடமும் மன்னிப்புக் கோரவில்லை. எதிர்க்கட்சிகளும் அவருடைய நாணயத்தைக் கேள்விக்குள்ளாக்கவில்லை. ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே நிலவி வரும் இந்த ஒற்றுமைதான், எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் இறங்கி அமெரிக்காவிற்காக மாமா வேலை செய்யலாம் என்ற துணிவையும், திமிரையும் மன்மோகனுக்கு வழங்கயிருக்கிறது.

சி.பி.எம். கோரியதைப் போல் நட்ட ஈட்டு வரம்பை 10,000 கோடி ரூபாய்க்கு உயர்த்தியும் விபத்துக்கான முழு பொறுப்பை அணு உலைகளை விற்கும் நிறுவனங்கள் மீது சுமத்தியும் திருத்தங்கள் செய்யப்பட்டு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் கூட, இச்சட்டத்தை நாட்டு நலனை விரும்புவோர் ஆதரித்துவிட முடியாது. ஏனென்றால், அமெரிக்க முதலாளிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது மட்டுமல்ல இச்சட்டத்தின் நோக்கம். இந்திய அணுசக்தித் துறையின் சுயசார்பான வளர்ச்சியை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதுதான் அமெரிக்கா மற்றும் மன்மோகன் சிங் கும்பலின் நோக்கம்.

அணுஉலை விபத்துத் தொடர்பாக அமெரிக்கா உருவாக்கியுள்ள சர்வதேச உடன்படிக்கையொன்றில் கையெத்துப் போட சம்மதம் தெரிவித்திருக்கிறது மன்மோகன் சிங் அரசு. இந்த உடன்படிக்கை அணு விபத்திற்கு அணு உலை உபகரணங்களை விற்கும் நிறுவனங்களைப் பொறுப்பாக்குவதைத் தடை செய்கிறது; 2,100 கோடி ரூபாய்க்கு மேல் நட்ட ஈடு கோருவதைத் தடை செய்கிறது. அந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டு விட்டால், இந்தியச் சட்டம் வழங்கியிருக்கும் அற்ப பாதுகாப்புகளும் கொல்லைப்புற வழியில் ஒழித்துக்கட்டப்படும். அமெரிக்கக் கைக்கூலி மன்மோகன் சிங் ஆசையும் பிசகில்லாமல் நிறைவேறிவிடும்.

•



படிப்பகம்

www.padippakam.com



# போபால்:

# கொலைகார ‘டௌ’-வே வெளியேறு!

## புரட்சிகர அமைப்புகளின் முற்றுகை

**போ**பால் நச்சுவாயுப் படுகொலையை விபத்தாகச் சித்தரித்துக் குற்றவாளிகளை ஒருநாள்கூடச் சிறைக்கு அனுப்பாமல் பிணையில் விடுவித்திருக்கிறது, போபால் நீதிமன்றம். 23,000 இந்திய மக்களைப் படுகொலை செய்து, 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோரை ஊனமாக்கியிருக்கும் பயங்கரவாதியான யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைவர் ஆண்டர்சனை இந்தியாவிடம் ஒப்படைக்க மறுக்கிறது, அமெரிக்க அரசு.

2001-இல் யூனியன் கார்பைடை விலைக்கு வாங்கிய டௌ கெமிக்கல்ஸ் எனும் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனம், போபால் ஆலையில் 26 ஆண்டுகளாகக் குவிந்து கிடக்கும் இரசாயனக் கழிவுகளை அகற்றுவதற்கும், போபால் மருத்துவமனையை நடத்துவதற்கான செலவுகளுக்குப் பொறுப்பேற்பதற்கும் மறுத்து வருகிறது. டௌ-வின் கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது, மன்மோகன் சிங் அரசு.

இந்திய அரசு அமெரிக்காவிடம் வாங்கவிருக்கும் அணு உலைகள் வெடித்து, நாளை இலட்சக்கணக்கான இந்தியர்கள் செத்தாலும், அதற்காக அணுசக்தி கம்பெனிகளைப் பொறுப்பாக்கக் கூடாது என்று கூறும் மசோதாவை நிறைவேற்ற சூழ்ச்சி மேல் சூழ்ச்சிகளை அரங்கேற்றி வருகிறுது, காங்கிரசு அரசு.

‘‘பன்னாட்டு முதலாளிகளின் இலாபத்துக்காக இந்திய மக்களைக் கொல்வதும், மண்ணைவிட்டு விரட்டுவதும், நம் தொழில்களை அழிப்பதும், உரிமைகளைப் பறிப்பதும்தான் நீதி. பன்னாட்டு முதலாளிகள் சொல்வதுதான் சட்டம். அவர்கள் கொழுப்பதுதான் நாட்டின் முன்னேற்றம்’’ என்ற இந்திய அரசின் மறுகாலனியாக்கக் கொள்கையை எதிர்த்தும், ‘‘போபால் படுகொலைக்கு நீதி வேண்டுமா? நக்சல்பாரி புரட்சி ஒன்றுதான் பாதை!’’ என்பதை உணர்த்தியும், கொலைகார டௌ கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட அறைகூவி மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து போலி சுதந்திர நாளான ஆகஸ்ட் 15 அன்று போராட்டத்தை அறிவித்திருந்தன.

இதையொட்டி ஏறத்தாழ ஒரு மாதத்துக்கும் மேலாக, தமிழகமெங்கும் 2 இலட்சத்துக்கும் மேலான துண்டுப் பிரசுரங்கள், 70,000 சிறு வெளியீடுகளுடன் ஆலை வாயிற்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், புகைப்பட கண்காட்சிகள் வாயிலாகவும் பேருந்துகள்-இரயில்கள், குடியிருப்புப் பகுதிகள், கடைவீதிகள், கல்லூரிகள்-பள்ளிகளிலும் வீச்சாகப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. ‘‘ இப்படியொரு கொடுமை நடந்துள்ளதா?’’ என்று அதிர்ச்சியடைந்த உழைக்கும் மக்கள், இப்பிரச்சார இயக்கத்தையும் போராட்டத்தையும் ஆதரித்து நன்கொடைகள் அளித்ததோடு, கொலைகாரர்களுக்கு எதிராக தமது வெஞ்சினத்தையும் வெளிப்படுத்தினார்கள்.

இம்முற்றுகைப் போராட்டத்துக்கு அனுமதி மறுத்து தடைவிதித்ததுடன், போராட்டத்துக்குத் திரண்டுவந்தவர்களை ஆங்காங்கே வழிமறித்துக் கைது செய்தது, போலீசு. எனினும், தடையை மீறி சென்னை - காசி திரையரங்கம் அருகிலிருந்து டௌ கெமிக்கல்சின் சென்னை அலுவகத்தை நோக்கி ஊர்வலமாகச் செல்ல காலை 10 மணியளவில் இவ்வமைப்பினர் செஞ்சட்டையுடன் செங்கொடி ஏந்திக் குடும்பம் குடும்பமாக அணிதிரண்டு, தடையை மீறி அங்கேயே ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இவ்வமைப்புகளின் தோழர்கள் நடத்திய வீதி நாடகம் போபால் படுகொலைக் கொடூரத்தை கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தி, அனைவரது நெஞ்சங்களையும் குமுறியெழச் செய்தது. மழையைப் பொருட்படுத்தாமல், பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் பறை முழக்கத்துடன் தொடங்கிய இந்த ஆர்ப்பாட்டம், விண்ணதிரும் முழக்கங்களுடன் ஏறத்தாழ ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நடந்தது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 1500 பேரை போலீசு கைது செய்தது. பள்ளிகள் மற்றும் மண்டபங்களில் அடைக்கப்பட்டிருந்த இத்தோழர்கள் உற்சாகத்துடன் விளக்கவுரை, கலைநிகழ்ச்சிகளை நடத்தினர். தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் திரு.வெள்ளையன், போராடிக் கைதான தோழர்களைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார். கைதான தோழர்கள் இரவு விடுவிக்கப்பட்டனர்.

இந்த முற்றுகைப் போராட்டத்தைத் தடுத்ததன் மூலம் ஆகஸ்ட்-15 என்பது பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்குத்தான் சுதந்திர நாள் என்பது நிரூபணமானது. போலி சுதந்திர நாளில், நாட்டு விடுதலைக்கான ஒரு உண்மையான சுதந்திரப் போராட்டமாக இம்முற்றுகைப் போராட்டம் அமைந்தது.

● பு.ஜ.செய்தியாளர்கள்



படிப்பகம்

www.padippakam.com



# காஷ்மீர்
## இந்திய இராணுவமே
# வெளியேறு!

''இந்திய நாய்களே திரும்பிச் செல்லுங்கள்!'', ''இப்பொழுதே வேண்டும் விடுதலை!'' என்ற முழக்கங்கள் காஷ்மீர் பள்ளத்தாக்கு எங்கும் மீண்டும் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டன. ''இது இந்திய மக்களைப் பற்றியதல்ல; இந்திய இராணுவமும் துணை இராணுவப் படைகளும் காஷ்மீர் போலீசும் சாதாரண காஷ்மீர் மக்களுக்கு இழைத்த அநீதிகளைப் பற்றியது'' என காஷ்மீரில் நடந்துவரும் தெருப் போராட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார், இர்ஷத் என்ற இளைஞர். பெண்களும் தாய்மார்களும் இளைஞர்களும்தான் தற்பொழுது நடைபெற்றுவரும் போராட்டத்தில் முன்னணியாக நிற்கிறார்கள்.

காஷ்மீரில் கடந்த ஜுன் மாதம் தொடங்கி நடந்துவரும் அரசியல் ஆர்ப்பாட்டங்களை பாகிஸ்தான் தூண்டிவிடுவதாக இந்திய அரசு பழிபோட்டு வருகிறது. இந்தப் போராட்டத்தை யார் தூண்டிவிடுகிறார்கள் என்பதை அலசி ஆராயும் முன், காஷ்மீர் மாநிலம் கடந்த இருபது ஆண்டுகளில் எப்படி ஒரு திறந்தவெளி இராணுவ முகாமாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

டைம்ஸ் ஆஃப் இந்தியா என்ற ஆங்கில நாளிதழ் சமீபத்தில் வெளியிட்டுள்ள ஒரு புள்ளிவிவரத்தின்படி, காஷ்மீரில் 3,00,000 இந்திய இராணுவச் சிப்பாய்களும், தேசியத் துப்பாக்கி படைப் பிரிவைச் சேர்ந்த 70,000 சிப்பாய்களும், மத்திய போலீசு படையைச் சேர்ந்த 1,30,000 சிப்பாய்களும் - ஆக மொத்தம் 5,00,000 சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர். அம்மாநிலப் போலீசுப் படை இந்த எண்ணிக்கையில் சேராது.

காஷ்மீரில் 'அமைதி'யை ஏற்படுத்த இத்தனை இலட்சம் துருப்புகள் தேவை என்றால், எத்தனை ஆயிரம் தீவிரவாதிகள் அம்மாநிலத்தில் இருக்கக்கூடும் என உங்கள் மனம் கணக்குப் போடலாம். அதிர்ச்சி அடைந்து விடாதீர்கள், அங்கே வெறும் 660 தீவிரவாதிகள்தான் இருப்பதாக சமீபத்தில் இந்திய இராணுவம் அறிக்கை அளித்துள்ளது.

''தற்பொழுது நடைபெற்று வரும் போராட்டத்தை முசுலீம் தீவிரவாத அமைப்புகள் எதுவும் தலைமை தாங்கி நடத்துவதாகத் தெரியவில்லை; இளைஞர்களும் தாய்மார்களும் தன்னெழுச்சியாகத் திரண்டு போராடுகிறார்கள்; போராடுபவர்கள் கைகளில் துப்பாக்கிகள் கிடையாது; மாறாக, தங்களைத் தற்காத்துக் கொள்ள கற்களைத்தான் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றனர்; இப்போராட்டத்தை போலீசைக் கொண்டே கட்டுப்படுத்திவிட முடியும்; இராணுவம் தேவையில்லை'' எனச் சில நடுநிலையான பத்திரிகையாளர்கள் குறிப்பிடுகின்றனர். உண்மை இப்படியிருக்க, அம்மாநிலத் தலைநகர் சீறிநகரை இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டிய அவசியமென்ன?

ஈராக்கில் 166 பேருக்கு ஒரு சிப்பாய் என்ற எண்ணிக்கையில் அமெரிக்க இராணுவம் இறக்கிவிடப்பட்டிருக்கும்பொழுது, காஷ்மீரிலோ 20 காஷ்மீரிகளுக்கு ஒரு இந்தியச் சிப்பாய் என்ற எண்ணிக்கையில் இந்திய இராணுவம் இறக்கிவிடப்பட்டுள்ளது. அதனை அமெரிக்க ஆக்கிரமிப்பு எனும்பொழுது, காஷ்மீர் நிலையை இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு எனக் குறிப்பிடாமல் வேறெப்படிக் கூற முடியும்?

• • •

**தே**சிய ஒருமைப்பாடு என்ற பெயரிலும், பாகிஸ்தான் தூண்டிவிடும் தீவிரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரிலும் திணிக்கப்பட்டுள்ள இந்த ஆக்கிரமிப்பு, எப்படிபட்ட அநீதியை காஷ்மீர் மக்களுக்கு இழைத்து வருகிறது தெரியுமா?



படிப்பகம்




இந்திய இராணுவம் காஷ்மீரில் நடத்திவரும் போலி மோதல் கொலைகளையும்; கொட்டடிச் சித்திரவதைகளையும் கண்டித்துச் சிறுவர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

1990-ஆம் ஆண்டு தொடங்கி 2007-ஆம் ஆண்டு முடியவுள்ள 17 ஆண்டுகளில் இந்திய இராணுவமும் துணை இராணுவப் படைகளும் அம்மாநில போலீசும் நடத்திய துப்பாக்கி சூடுகள், போலி மோதல்கள், இரகசியக் கொலைகள், கொட்டடிச் சித்திரவதைகளில் ஏறத்தாழ 70,000-க்கும் மேற்பட்ட காஷ்மீரிகள் கொல்லப்பட்டுள்ளனர். அரசுப் படைகளால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 8,000 காஷ்மீரிகள் சுவடே தெரியாமல் 'காணாமல்' போய்விட்டனர். அப்படைகள் நடத்தியிருக்கும் பாலியல் வல்லுறவுகள் இந்தக் கணக்கில் அடங்காது.

அம்மாநிலத்தில் கடந்த இருபது ஆண்டுகளாக அமலில் இருந்துவரும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம், மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் இராணுவச் சிப்பாய்கள் மீது, இந்திய அரசின் அனுமதியின்றி அம்மாநில அரசு புகார் கூடச் செய்ய முடியாது என்ற பாதுகாப்பை வழங்கியிருக்கிறது. தேசிய நலன் என்ற பெயரில் இராணுவச் சிப்பாய்கள் நடத்தும் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு பற்றி காஷ்மீரத்தைச் சேர்ந்த யாராவது ஒருவர் புகார் கொடுக்க வேண்டும் என்றால், அவர் முதலில் ''தான் இந்திய தேசிய நலனுக்கு எதிராகச் செயல்பட்டதில்லை'' என்று நிரூபித்தாக வேண்டும்.

காஷ்மீர் மக்கள் ஒவ்வொரு நாளும் இந்திய இராணுவத்தின் அத்துமீறல்களைச் சந்தித்து வரும்பொழுது, மைய அரசோ கடந்த பதினேழு ஆண்டுகளில் இராணுவச் சிப்பாய்களுக்கு எதிரான வெறும் 458 வழக்குகளைத்தான் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது. இதே காலத்தில் இந்திய இராணுவத்தின் மனித உரிமைப் பிரிவு விசாரணைக்கு எடுத்துக்கொண்ட 1,321 வழக்குகளில் 54 வழக்குகளைத் தவிர பிற வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன.

காஷ்மீர் மக்கள் பல போராட்டங்களை நடத்திய பிறகுதான், இவ்வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதையும், இப்போராட்டங்களின்பொழுது -ற்றுக்கணக்கான காஷ்மீரிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இப்படி காஷ்மீர் மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தும் இந்திய அரசையும் அதனின் இராணுவத்தையும் வெளியேறக் கோரி அம்மக்கள் போராடுவது தேச விரோதச் செயல் என்றால், கொலையும், கொள்ளையும், பாலியல் வன்புணர்ச்சியும்தான் தேச நலனின் பொருளாகிவிடுகிறது.

• • •

இந்திய அரசுக்கு எதிராக காஷ்மீர் மக்கள் கடந்த இருபது ஆண்டுகளாக நடத்திவரும் போராட்டத்தில் பாகிஸ்தானின் ஆதரவு பெற்ற முசுலீம் தீவிரவாத அமைப்புகளின் பங்கு இருப்பதை மறுக்க முடியாது என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கும் இந்திய அரசின் இந்து தேசிய வெறிதான் இப்பிரச்சினையின் மூல காரணமாக இருக்கிறது என்பதும்.

இந்திய அரசு, ஐ.நா. மன்றத்தில் ஒப்புக்கொண்டபடி ஜம்மு-காஷ்மீரில் பொதுஜன வாக்கெடுப்பை நடத்தாமல் மறுத்தது; இந்திய அரசியல் சாசனத்தில் காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருந்த சில தனியுரிமைகளை நீர்த்துப் போகச் செய்தது; காங்கிரசு கும்பல் தனது சுயநலனுக்காக அம்மாநிலத்தில் நடத்திய ஆட்சி கவிழ்ப்புகள், தேர்தல் மோசடிகள் - இவைதான் 1980-களின் இறுதியில் காஷ்மீரில் ஆயுதந்தாங்கிய போராட்டம் வெடிப்பதற்கு அடிப்படையாக அமைந்தன.

வரலாற்றை அவ்வளவு பின்னோக்கிப் பார்க்கத் தேவையில்லை. இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளால் தீவிரவாதிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துபோய்விட்டதாகச் சொல்லப்பட்ட பின்னும், கடந்த இரண்டு ஆண்டுகளாக காஷ்மீரில் அடுத்தடுத்து இந்திய ஆதிக்கத்திற்கு எதிரான மக்கள் திரள் போராட்டங்கள் நடந்து வருகின்றன. அதற்குக் காரணம் பாகிஸ்தானா, இல்லை இந்திய தேசியவாதிகளா?

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரசு-மக்கள் ஜனநாயகக் கட்சி கூட்டணி அம்மாநிலத்தை ஆண்டு வந்தபொழுது, அமர்நாத் யாத்ரீகர்கள் தங்கிப் போவதற்காக 39.88 ஹெக்டேர் நிலத்தை ஒதுக்கப் போவதாக அக்

**660 தீவிரவாதிகளை வேட்டையாடிப் பிடிப்பதற்காகவா, இந்திய இராணுவம்-துணை இராணுவப் படைகளைச் சேர்ந்த 5 இலட்சம் துருப்புகள் காஷ்மீரில் குவிக்கப்பட்டுள்ளன?**

www.padippakam.com

## ஐந்து வயது சிறுவனைக் கூடக் கொன்றுவிடுவோம் என மிரட்டிவரும் இந்திய இராணுவம், காஷ்மீரில் யாரைக் காப்பாற்ற நிற்கிறது?

கூட்டணி ஆட்சி அறிவித்தது. அமர்நாத் யாத்திரை முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறியைத் தூண்டிவிடும் வருடாந்திர நிகழ்ச்சி நிரலாக மாறிப் போனதால், காஷ்மீர் மக்கள் பக்தியின் பெயரால் திணிக்கப்பட்ட இந்த நில ஒதுக்கீடு நடவடிக்கையைக் கடுமையாக எதிர்த்துப் போராடினர். உடனே, ஆர்.எஸ்.எஸ். கும்பல் வெளிமாநிலங்களில் இருந்து ஜம்முவிற்கு ஆட்களைத் திரட்டிவந்து எதிர் போரட்டத்தை நடத்தியதோடு, காஷ்மீர் பள்ளத்தாக்கு மீது ஒரு சட்டவிரோத பொருளாதார முற்றுகையைத் திணித்தது. காஷ்மீர் மக்கள் இம்முற்றுகையை முறியடிக்கும் வண்ணம் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைக் கடப்பது என்ற போராட்டத்தைத் தொடங்கினர். இப்போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பலர் பலியான பின்னர், நில ஒதுக்கீடு தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

இப்போராட்டத்திற்குப் பின் நடந்த தேர்தலில் எதிரெதிராகப் போட்டியிட்ட காங்கிரசும் தேசிய மாநாட்டுக் கட்சியும் தேர்தலுக்குப் பின் சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைத்து ஆட்சியைக் கைப்பற்றின. இந்தச் சந்தர்ப்பவாத ஆட்சிக்கு மக்கள் ஆதரவைத் திரட்டிக் கொள்ளும் முகமாக, ‘‘காஷ்மீரில் உள்ள இந்திய இராணுவத்தினரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்படும்; ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படும்; அத்துமீறல்கள் குறித்த உண்மை கண்டறியும் குழு நிறுவப்படும்’’ என்ற வாக்குறுதிகளை அள்ளி வீசினார், முதல்வர் ஒமர் அப்துல்லா. கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த வாக்குறுதிகளில் ஒன்றுகூட நிறைவேறவில்லை என்பது ஒருபுறமிருக்க, காஷ்மீர் மக்களின் மீதான இராணுவத்தின் பிடியும், அடக்குமுறையும் கொஞ்சம்கூடக் குறையவில்லை என்பதையும் மக்கள் கண்டனர்.

ஷோபியான் என்ற சிறுநகரைச் சேர்ந்த இரண்டு இளம்பெண்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டது; கிரிக்கெட் விளையாடிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ஜஹித் ஃபாரூக் என்ற 16 வயது சிறுவன் நடுத்தெருவில் நாயைச் சுடுவது போல எல்லைப் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம்; கடந்த ஏப்ரல் மாதம் தேசியத் துப்பாக்கிப் படைப் பிரிவினர், மூன்று தொழிலாளர்களை எல்லைப் பகுதிக்குக் கடத்திக்கொண்டு போய்ச் சுட்டுக் கொன்றுவிட்டு, அவர்களை எல்லை தாண்டி வரமுயன்ற தீவிரவாதிகளாக ஜோடனை செய்த சம்பவம் - இப்படி கடந்த இரண்டு ஆண்டுகளில் இராணுவத்தினரும், துணை இராணுவப் படைகளும், காஷ்மீர் போலீசாரும் நடத்திய பல பச்சைப் படுகொலைகள்தான் இப்போராட்டத்தின் தூண்டுகோலாக அமைந்தன.

‘‘துப்பாக்கி ஏந்திய தீவிரவாதிகள் ஒடுக்கப்பட்ட பிறகு, மக்களின் விடுதலை உணர்வும் செத்துவிடும்; அடுத்த தலைமுறை இளைஞர்கள் பாலிவுட் திரைப் படங்களிலும், பப் கலாச்சாரத்திலும் மூழ்கிப்போய் விடுவார்கள் என அவர்கள் நினைத்தார்கள். ஆனால், எங்களின் விடுதலை வேட்கை கொஞ்சம்கூடக் குறையாமல் இருப்பதைத்தான் இப்போராட்டம் காட்டுகிறது’’ என காஷ்மீர் மக்களின் மனோநிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார், பள்ளத்தாக்கைச் சேர்ந்த புகழ் பெற்ற புற்றுநோய் மருத்துவர் ஷாத் சலீம்.

காஷ்மீர் மக்களின் தேசிய இன விடுதலை உணர்வுதான் இப்போராட்டத்தின் அடிப்படையாக உள்ளது என்ற உண்மையை மூடி மறைக்க, இப்போராட்டம் பற்றிப் பலவித கட்டுக்கதைகளையும் அவதூறுகளையும் மைய அரசும் அதனை நத்திப் பிழைக்கும் தேசியப் பத்திரிகைகளும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு பரப்பி வருகின்றன. ‘‘விரக்தியடைந்த இளைஞர்களின் போராட்டம்’’ என ஒருபுறம் நையாண்டி செய்துவரும் அக்கும்பல், இன்னொருபுறமோ, ‘‘லஷ்கர்-இ-தொய்பாவிடம் 200 ரூபாயை வாங்கிக்கொண்டு நடத்தப்படும் கூலிப் போராட்டம்’’ என அவதூறு செய்து வருகிறது.

காஷ்மீர் பற்றிய உண்மை நிலவரம் வெளியே தெரியக்கூடாது என்ற நோக்கில், இந்திய இராணுவம் உள்ளூர் செய்தி ஊடகங்கள் மீது விதித்துள்ள கட்டுப்பாடுகளைக் கண்டித்து பத்திரிகையாளர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.



சோபுர் நகரில் கடந்த ஜூன் 29 அன்று நடந்த ஆர்ப்பாட்டத்தின் மீது மத்திய ரிசர்வ் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்



படிப்பகம்

www.padippakam.com



விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு 'காணாமல் போனவர்களின்' புகைப்படங்களைப் பார்த்து விம்மியழும் காஷ்மீரத்துத் தாய்.

டில் 9 வயது சிறுவன் கொல்லப்பட்டான். ''அவன் அப்பாவி கிடையாது; கூலிக்காக வேலை செய்யும் போக்கிரி'' என அச்சிறுவனைப் பற்றிக் கூறியிருக்கிறார், உள்துறை அமைச்சகச் செயலர். இப்படி வக்கிரமும், காலனியாதிக்க ஆணவமும் நிறைந்த இந்திய அரசை வெளியேறக் கோருவது எந்த விதத்தில் தவறாகிவிடும்?

பதாமாலூ என்ற ஊரைச் சேர்ந்த ஐந்து வயது சிறுவன் தனது வீட்டை விட்டு வெளியே வருவதைப் பார்த்த இராணுவச் சிப்பாய்கள், துப்பாக்கியை நீட்டிய படியே அவனை நோக்கிப் பாய்ந்து வந்து, ''உன்னைக் கொன்று விடுவோம்'' என மிரட்டியுள்ளனர். அரண்டு போய் வீட்டுக்குள் ஓடிப்போன அந்தச் சிறுவன் பயத்தில் அடுத்த பத்து நிமிடங்களுக்கு ஒரு வார்த்தைகூடப் பேச முடியாத ஊமையாகிப் போனான். ஐந்து வயதுச் சிறுவனைக் கொன்றுவிடுவோம் என மிரட்டும் இந்திய இராணுவம் காஷ்மீரில் யாரைக் காப்பாற்ற நிற்கிறது?

இந்தக் கேள்வியை காஷ்மீருக்கு வெளியேயுள்ள பெரும்பாலான ''இந்தியர்கள்'' எழுப்ப மறுக்கிறார்கள். ''அவர்கள் காஷ்மீர் பற்றி பொய் சொல்கிறார்கள்; தங்களின் சொந்தப் பொய்யைத்தான் அவர்கள் நம்புகிறார்கள்'' என இத்தகைய இந்தியர்களைப் பற்றிக் கூறுகிறார், டெல்லியில் வாழும் காஷ்மீரைச் சேர்ந்த இளைஞர்.

• • •

**கா**ஷ்மீர் பள்ளத்தாக்கின் பல பகுதிகளில் கடந்த ஜூன் மாதம் தொடங்கி ஆகஸ்ட் முதல் வாரத்திற்குள் 800-க்கும் மேற்பட்ட அரசியல் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. பாலஸ்தீன மக்கள் இசுரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்து நடத்தி வரும் இண்டிஃபதா போராட்டத்தைத்தான் இது நமக்கு நினைவூட்டுகிறது. சமூகம் தழுவிய ஆதரவோடு நடைபெற்று வரும் இப்போராட்டங்களை, இராணுவ அடக்குமுறையை மேலும் தீவிரப்படுத்துவதன் மூலம் ஒடுக்கிவிட முடியும் என ஆளுங் கட்சி காங்கிரசும், எதிர்க்கட்சியான பா.ஜ.க.-வும் ஒரேவிதமாக எண்ணுகின்றன.

ஆர்ப்பாட்டங்களின் மீது நடத்தப்படும் துப்பாக்கிச் சூட்டில், இதுவரை 60-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். தங்களைத் தற்காத்துக் கொள்ள இராணுவம்-துணை இராணுவப் படைகள் மீது கற்களை வீசியெறியும் இளைஞர்கள், மரண தண்டனைகூட விதிக்கப்படும் சாத்தியமுள்ள, ''அரசின் மீது போர் தொடுத்த'' குற்றப்பிரிவின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள். இந்த அடக்குமுறையை எதிர்த்து நிற்கும் நெஞ்சுரத்தையும் தியாக உணர்வையும் 200 ரூபாய் கூலிப் பணத்தால் ஊட்டிவிட முடியுமா? விடுதலை உணர்வால் உந்தித் தள்ளப்படும் அந்த இளைஞர்கள் தமது மனங்களிலிருந்து பயம் என்பதையே அகற்றி விட்டார்கள் என்கிறார், ஹுரியத் மாநாட்டு கூட்டணியைச் சேர்ந்த தலைவரான சையத் ஷா கீலானி.

காஷ்மீரில் ஒரு தற்காலிக அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்றால்கூட, ''ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தைத் திரும்பப் பெறுவது; இராணுவத்தையும், துணை இராணுவப் படைகளையும் திரும்ப அழைத்துக் கொள்வதோடு, காஷ்மீர் போலீசு துறையில் உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு நடவடிக்கை குழுவைக் கலைப்பது; மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளைத் தண்டிப்பது'' ஆகிய குறைந்தபட்ச அர

இந்து மதவெறிக் கும்பல் காஷ்மீர் மக்களின் மீது திணித்த பொருளாதார முற்றுகைக்கு எதிராக நடத்தப்பட்ட, எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை தாண்டும் போராட்டம். (கோப்புப் படம்)



**விடுதலை உணர்வால் உந்தித் தள்ளப்பட்டுப் போராட்டத்தில் குதித்துள்ள இளைஞர்கள் தமது மனங்களில் இருந்து பயம் என்பதையே அகற்றிவிட்டனர்.**



படிப்பகம்

சியல் கோரிக்கைகளை நிறைவேற்ற மைய அரசு முன்வர வேண்டும்.

ஆனால், மைய அரசோ, இந்த குறைந்தபட்ச அரசியல் கோரிக்கை களைக்கூட நிறைவேற்ற மறுக்கிறது. இதற்குப் பதிலாக, பொருளாதார சலுகை என்ற பெயரில் அஞ்சையும் பத்தையும் தூக்கியெறிந்து, இப் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்துவிடலாம் என இந்திய ஆட் சியாளர்கள் மனப்பால் குடிக்கின் றனர். விடுதலை உணர்வை பணத் தால் விலை பேசும் இந்திய அரசின் முட்டாள்தனமான ஆணவம் காஷ் மீரில் பலமுறை தோல்வி கண்டிருக் கிறது.

''காஷ்மீரில் ஒரு அடி மண்ணைக்கூட விட்டுக் கொடுக்க மாட்டோம்'' எனத் தேசிய வெறி யூட்டும் ஓட்டுக்கட்சிகள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என்ற பெயரில் இந்திய மண்ணைப் பன் னாட்டு நிறுவனங்களுக்கு பட்டா போட்டுக் கொடுக்கத் தயங்குவ தில்லை. இதனை ஒப்பிட்டுப் பார்த்தாலே ஆளும் கும்பலின் தேசியம் என்பது மாபெரும் மோசடி என்பதைப் புரிந்து கொண்டுவிட முடியும்.

இந்து தேசியவெறி கொண்ட ஓட்டுக்கட்சிகள், அவர்களை நத்திப் பிழைக்கும் தேசிய மாநாட்டுக் கட்சி போன்ற துரோகிகள், போலி மோதல் கொலைகள் மூலம் பணத்தையும் பதவியையும் அள்ளிக் கொள்ளத் துடிக்கும் காக்கிச் சட்டை கிரிமினல்கள் - ஆகியோர்தான் காஷ் மீர் இந்திய அரசின் காலனியாக நீடிப்பதால் இலாபமடையப்போ கும் பிரிவினர். போலி தேசியப் பெருமையில் மூழ்கிப் போயுள்ள பிற இந்தியர்களுக்கு ஆளும் கும் பலின் காஷ்மீர் கொள்கை எந்தப் பலனையும் அளிக்காது. மாறாக, முசுலீம் தீவிரவாதம் வளர்வதற்கும், பாகிஸ்தான் அதனைத் தூண்டிவிடு வதற்கும், இந்தியா-பாகிஸ்தான் இடையே தொடர்ந்து முறுகல் நிலை நீடிப்பதற்கும் ஆளும் கும் பலின் காஷ்மீர் கொள்கை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும்.

• குப்பன்

## சோராபுதின் போலி மோதல் கொலை:

# முசுலீம் பிணந்திண்ணும் மோடி அரசு!

ஐந்தாண்டுகளுக்கு முன்பு குஜ ராத் மாநிலத் தலைநகர் அகமதாபாத் புறநகர்ப் பகுதியில் சுட்டுக் கொல் லப்பட்ட சோராபுதின் ஷேக் என்ற முசுலீம் 'தீவிரவாதியின் ஆவி', அம் மாநில முதல்வர் நரேந்திர மோடியை மீண்டும் துரத்தத் தொடங்கியிருக்கிறது. மிரட்டிப் பணம்பறிப்பது, ஆயுதங்களைக் கடத்துவது போன்ற சட்டவிரோதச் செயல்களைச் செய்துவந்து உள்ளூர் தாதாவான சோராபுதின் ஷேக் நவம் பர் 26, 2005 அன்று சுட்டுக் கொல்லப் பட்டார். குஜராத் போலீசாரால் சோராபுதினோடு சேர்த்துக் கடத்தப் பட்ட அவரது மனைவி கவுசர் பீ 'காணாமல்' போனார்.

சோராபுதினின் சகோதரர் ருபாபு தின் இம்மோதல் கொலை பற்றி உச்ச நீதிமன்றத்திற்குக் கடிதம் எழு தியதையடுத்து, அக்கடிதத்தையே மனுவாக ஏற்றுக் கொண்ட உச்ச நீதி மன்றம் இது பற்றி விசாரிக்குமாறு குஜராத் அரசுக்கு ஜனவரி 21, 2007 அன்று உத்தரவிட்டது. மோடி அரசு ஒரு கேடி அரசு எனத் தெரிந்திருந்த நிலையிலும், விசாரணை பொறுப்பை குஜராத் அரசிடமே உச்ச நீதிமன்றம் ஒப்படைத்த பெருந்தன்மை நம்மை வியக்கத் தான் வைக்கிறது.

மோடி அரசு தனக்கு அளிக்கப் பட்ட இந்த வாய்ப்பை மிக நன்றா கவே பயன்படுத்திக் கொண்டது. ஒருபுறம் தனது சி.ஐ.டி. பிரிவு போலீசாரைக் கொண்டு விசாரணை என்ற நாடகத்தை நடத்திக் கொண்டே, மறுபுறம் சாட்சியங் களைக் குழிதோண்டிப் புதைக்கும் வேலையையும் திறம்படச் செய்தது.

உதாரணத்திற்குச் சொன்னால், இப்போலி மோதல் கொலையின் முக்கிய சாட்சியான சோராபுதினின் கூட்டாளி பிரஜாபதி கொல்லப்பட் டதைக் கூறலாம். தனது மனைவி யோடு ஆந்திராவில் இருந்து மகா ராஷ்டிராவிற்குச் சென்று கொண்டி ருந்த சோராபுதினை குஜராத், இரா சஸ்தான், ஆந்திர மாநிலப் போலீ சார் கூட்டணி அமைத்துக் கொண்டு கடத்தியபொழுது, பிரஜாபதியும் அவர்களோடு பயணம் செய்து வந் தான். சோராபுதினையும் அவரது மனைவி கவுசர்பீயையும் குஜராத்திற் குக் கடத்திய குஜராத் போலீசார், பிர ஜாபதியை இராசஸ்தான் போலீசாரி டம் ஒப்படைத்துச் சிறையில் அடைத்தனர்.

இப்போலி மோதல் கொலை விசாரணையைத் தலைமையேற்று நடத்திவந்த கீதா ஜோரி என்ற போலீசு அதிகாரி பிரஜாபதியை விசாரிப்பதற்கு அனுமதி கோரியவு டன், தீவிரவாதத் தடுப்புப் பிரிவில் பணியாற்றி வந்த டி.ஜி. வன்சாரா - சோராபுதினைச் சுட்டுக் கொன்ற போலீசு கும்பலின் மூளையாகச் செயல்பட்டவர் - குஜராத் மாநில எல்லைப் பிரிவுக்குத் திடீரென மாற் றப்பட்டார். வன்சாரா இடமாற்றம் செய்யப்பட்ட இரண்டாவது வாரத் திலேயே பிரஜாபதி, டிசம்பர் 28, 2006 அன்று குஜராத் - இராசஸ்தான் எல்லையையொட்டிய நகர் ஒன்றில் நடந்த போலி மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதுவொருபுறமிருக்க, ''விசா ரணையை முடக்கும் நோக்கத் தோடு தனக்கு குஜராத் அரசு நெருக் கடி தருவதாக'' விசாரணை அதிகாரி கீதா ஜோரி உச்ச நீதிமன்றத்திடம்



படிப்பகம்

www.padippakam.com

புகார் செய்தார். மோடி அரசோ இப்புகார் பற்றி அலட்டிக் கொள்ளாததோடு, தன் மீது புகார் கொடுத்த கீதா ஜோஹ்ரியை சி.ஐ.டி. பிரிவில் இருந்து தூக்கி யடித்தது.

இதன்பின், தங்களுக்குத் தலையாட்டுவார் என்ற எண்ணத்தில் ரஜ்னீஷ் ராய் என்ற அதிகாரியை சி.ஐ.டி. பிரிவின் துணைத் தலைவராக நியமித்தது, மோடி அரசு. ஆனால் ரஜ்னீஷ் ராய், கீதா ஜோரி ஏற்கெனவே தயாரித்து அளித்திருந்த அறிக்கையின் அடிப்படையில் குஜராத் தைச் சேர்ந்த டி.ஜி. வன்சாரா, ராஜ்குமார் பாண்டியன் மற்றும் இராசஸ்தானைச் சேர்ந்த தினேஷ்குமார் ஆகிய மூன்று போலீசு அதிகாரிகளையும் கைது செய்து சிறை யில் அடைத்தார். இதனையடுத்து ரஜ்னீஷ் ராயும் சி.ஐ.டி. பிரிவில் இருந்து தூக்கியடிக்கப்பட்டார். இப் படி பிரஜாபதி என்ற சாட்சி கொல்லப்பட்டதையும், விசாரணை அதிகாரிகள் பந்தாடப்பட்டதையும் உச்ச நீதி மன்றம் வேடிக்கை பார்த்ததேயொழிய, இப்போலி மோதல் கொலை பற்றிய விசாரணையை உடனடியாக குஜராத் அரசிடமிருந்து பறிக்கும் எந்த நடவடிக்கை யினையும் அப்பொழுதே எடுக்கவில்லை.

இதனிடையே கீதா ஜோஹ்ரிக்கும் குஜராத் அரசிற் கும் இடையே ஒரு சமரசம் ஏற்பட்டு, அவர் மீண்டும் சி.ஐ.டி. பிரிவிற்கு மாற்றப்பட்டு, சோராபுதின் வழக்கின் விசாரணை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். குஜ ராத் அரசின் வனத் துறையில் உயர் அதிகாரியாகப் பணி யாற்றி வந்த அவரது கணவர் மீதான ஊழல் குற்றச் சாட்டுக்களைக் கிடப்பில் போடுவது என்ற உடன்பாட் டின் அடிப்படையில் கீதா ஜோஹ்ரி, ‘‘சோராபுதின் கொலையில் அரசியல் தலைவர்களுக்குத் தொடர் பில்லை; போலீசார் பதவி உயர்வு மற்றும் பண வெகு மதிக்கு ஆசைப்பட்டு இக்கொலையைச் செய்ததாக’’

லஷ்கர்-இ-தொய்பாவைச் சார்ந்த தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்ட, இர்ஷத் ஜஹன் மற்றும் அவரது நண்பர்கள்.





குஜராத் போலீசாரால் போலி மோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட, சோராபுதின் ஷேக் மற்றும் அவரது மனைவி கவுசர் பீ.

அறிக்கை தயாரித்து உச்ச நீதிமன்றத்திடம் அளித்தார்.

அப்பொழுதே, சோராபுதினின் சகோ தரர் ருபாபுதின் விசா ரணை என்ற பெயரில் நடந்திருக்கும் இந்த மோசடிகளைக் குறிப் பிட்டு, உச்ச நீதிமன் றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனு விலேயே சோராபு தின் மற்றும் கவுசர் பீ கொலைகளுக்கும், குஜராத் அரசின் துணை உள்துறை அமைச்சர் அமித் ஷாவிற்கும் இருக்கும் தொடர்புகளையும் குறிப்பிட்டிருந்தார். குஜராத் அரசு தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் ஓட்டைகள் இருப்பதை ஒப்புக்கொண்ட உச்ச நீதிமன்றம், விசாரணையைத் தொடராமல் நிறுத்தி வைக்குமாறு அக்.1, 2008-இல் உத் தரவிட்டது. அதன் பின் 15 மாதங்கள் கழித்து, ஜனவரி 2010-இல்தான் இவ்வழக்கு விசாரணையை மையப் புல னாய்வுத் துறையிடம் மாற்றும் உத்தரவை அளித்தது.

இப்போலி மோதல் கொலை தொடர்பாக மையப் புலனாய்வுத் துறை நடத்தி வரும் மறுவிசாரணையில் மேலும் பல உண்மைகள் அம்பலமாகி வருகின்றன. குறிப்பாக, ராஜஸ்தானைச் சேர்ந்த மார்பிள் கல்லை வெட்டியெடுக்கும் சுரங்க அதிபர்களின் தூண்டுதலி னாலேயே, குஜராத் மற்றும் இராசஸ்தானைச் சேர்ந்த போலீசு அதிகாரிகளும் பா.ஜ.க. அமைச்சர்களான அமித்ஷா (குஜராத்) மற்றும் குலாப் சாந்த் கடாரியா (ரா ஜஸ்தான்) ஆகியோரும் கூட்டணி அமைத்துக் கொண்டு, மார்பிள் கல் முதலாளிகளிடமிருந்து 10 கோடி ரூபாய் பணம் பெற்றுக்கொண்டு, சோராபுதினையும் அவரது மனைவி கவுசர் பீயையும் குஜராத்திற்குக் கடத்தி வந்து, சோராபுதினைப் போலி மோதல் மூலமும், அவரது மனைவியை விஷ ஊசி போட்டும் தீர்த்துக் கட்டினர் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

• • •

குஜராத் சி.ஐ.டி. போலீசார் நடத்திய விசாரணை யிலேயே சோராபுதின் போலி மோதலில் கொல்லப்பட் டார் என்பது அம்பலமான பிறகும், குஜராத் அரசே உச்ச நீதிமன்றத்தில் சோராபுதினின் மனைவி கவுசர் பீ குஜ ராத் போலீசாரால் கொல்லப்பட்டதை ஒப்புக்கொண்ட பிறகும் நரேந்திர மோடி, ‘‘தனது அரசையும் குஜராத்தி யர்களையும் களங்கப்படுத்துவதற்காக காங்கிரசு செய் யும் சதி இது’’ எனப் பிரச்சாரம் நடத்தி வருகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

''போலி மோதல் கொலைகள் நடக்காத மாநிலங்களே இல்லாதபொழுது, குஜராத் மட்டும் ஏன் குறிவைக்கப் படுகிறது?'' என்ற கேள்வியை எழுப்பித் தனது பிரச் சாரத்தை நியாயப்படுத்தி வருகிறார், மோடி.

மோடியின் இந்த வாதம், அரைகுறையான உண்மை களைக் கூறித் தங்களை நியாயப்படுத்திக் கொள்ளும் பாசிஸ்டுகளின் உத்தியாகும். முதலாவதாக, மோடியின் குஜராத்தில் கடந்த எட்டு ஆண்டுகளில் பல மோதல் கொலைகள் நடந்திருந்தாலும், வெறும் இரண்டு வழக் குகள் மட்டுமே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. இரண்டாவதாக, மற்ற மாநிலங்களில் நடைபெறும் போலி மோதல் கொலைகள் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற பெயரில் நியாயப்படுத் தப்படுவதற்கு மேல், அக்கொலைகளுக்கு அரசியல் நியாயம் கற்பிக்கப்படுவதில்லை. ஆனால், குஜராத் திலோ ஒவ்வொரு போலி மோதல் கொலையும், நாட்டைப் பாதுகாக்கும் முசுலீம் தீவிரவாத ஒழிப்பு நட வடிக்கையாகச் சித்தரிக்கப்பட்டு, அதன் மூலம் மோடியை நாட்டையே காக்க வந்த இரட்சகனாகக் காட்டும் இந்து மதவெறிப் பிரச்சாரம் நடத்தப்படுகிறது. இந்த உண்மையை மூடிமறைத்துவிட்டு, மற்ற மாநிலங் களில் நடைபெறுவதைப் போலத்தான் குஜராத்திலும் போலி மோதல் கொலைகள் நடத்தப்படுவதாக மோடி கதையளப்பது கடைந்தெடுத்த பித்தலாட்டமாகும்.

மோடியை ஆதரிக்கும் சாக்கில், போலி மோதல் கொலைகள் மூலம்தான் இசுலாமிய பயங்கரவாதிகளை யும் கிரிமினல் மாஃபியா கும்பல்களையும் ஒழித்துக் கட்ட முடியும் என்று இந்து மதவெறி பாசிஸ்டுகளின் ஊதுகுழலான துக்ளக் ''சோ'' வாதிடுகிறார். ''சோ''வும் அவரை ஆதரிக்கும் கும்பலும் போலி மோதல் கொலை கள் தேசநலன்/பாதுகாப்பிற்காகவே நடத்தப்படுவதாக நியாயப்படுத்த முயன்றாலும், அவற்றின் பின்னணியில் வெவ்வேறு காரணங்கள் உள்ளன என்பது ஏற்கெனவே பல வழக்குகளில் அம்பலமாகியிருக்கிறது.



சி.பி.ஐ.-யால் கைது செய்யப்பட்டுள்ள குஜராத் துணை கமிசனர் சுபய் சடாசாமாவும் (இடது), உள்துறை இணை அமைச்சர் அமித் ஷாவும் சோராபுதினைக் கொண்டு தொழில் அதிபர்களை மிரட்டிப் பணம் பறிக்கும் ''தொழிலை'' நடத்தி வந்துள்ளனர்.

உதாரணத்திற்கு, குஜராத் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட 'தீவிரவாதி' சோராபுதின் வழக்கையே எடுத்துக் கொள்வோம். சோராபுதின் மார்பிள் சுரங்க முத லாளிகளின் நலனுக்காகத்தான் சுட்டுக் கொல்லப்பட்டா ரேயொழிய, தேச நலனுக்காக அல்ல என்பது இப் பொழுது நிரூபணமாகியிருக்கிறது. இந்த உண்மையான நோக்கம் வெளியே தெரிந்துவிடக் கூடாது என்பதற்கா கவே, உள்ளூர் தாதாவான சோராபுதினை முசுலீம் தீவிர வாதியாகவும், நரேந்திர மோடியைக் கொல்லும் நோக் கத்தோடு சோராபுதின் குஜராத்திற்குள் நுழைந்ததாகவும் கதை பின்னப்பட்டது.

அது மட்டுமல்ல, ஆயுதக் கடத்தல் பேர்வழி, தாவூத் இப்ராகிமின் கூட்டாளி என்றெல்லாம் இந்து மதவெறிக் கும்பலால் அன்று குற்றம் சுமத்தப்பட்ட சோராபுதினுக் கும் மோடிக்கு நெருக்கமான குஜராத் உள்துறை இணை அமைச்சர் அமித் ஷா மற்றும் போலீசு துணை கமிசனர் அபய் சுடாசாமா ஆகியோருக்கும் இடையே தொழில் உறவு (சுரங்க அதிபர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் அதி பர்களை மிரட்டிப் பணம் பறிப்பது) இருந்து வந்திருப் பது இன்று அம்பலமாகியிருக்கிறது. சோராபுதினைப் போலி மோதலில் சுட்டுக் கொன்றதன் மூலம் இக்கும் பல் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களைத் தட்டி யிருக்கிறது. ஒன்று, சுரங்க அதிபர்கள் அள்ளிக் கொடுத்த ''சுபாரி'' பணம்; மற்றொன்று, தங்களது இர கசியத்தைத் தெரிந்த கூட்டாளி ஒழிந்தான் என்ற நிம்மதி.

சோராபுதின் போலி மோதல் கொலை குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள போலீசு அதிகாரிகள் டி.ஜி.வன்சாரா (நடுவில்), ராஜ்குமார் பாண்டியன் (இடது) மற்றும் தினேஷ் குமார் (வலது).



**பாகிஸ்தானில் இருந்து ஏவிவிடப்படும் இசுலாமிய பயங்கரவாதத்தால் மோடியின் உயிருக்கு எப்போதுமே ஆபத்து இருப்பதாக பிரச்சாரம் நடத்தப்படுகிறது.**



படிப்பகம்

www.padippakam.com

**சோராபுதின் மார்பிள் சுரங்க முதலாளிகளின் நலனுக்காகத்தான் சுட்டுக் கொல்லப்பட்டாரேயொழிய, தேச நலனுக்காக அல்ல என்பது இப்பொழுது நிரூபணமாகியிருக்கிறது.**

அமித் ஷா கும்பலின் நிம்மதியை சோராபுதினின் தம்பி ருபாபுதின் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு கெடுத்துவிட்டது. அது மட்டுமல்ல, இக்கும்பலின் இரகசியங்களையெல்லாம் அறிந்த என். கே. அமின் என்ற போலீசு அதிகாரி ''அப்ரூவர்'' ஆக மாற சி.பி.ஐ.-யிடம் சம்மதம் தெரிவித்திருக்கிறார். இதனால், மோடி கும்பல் இந்த அதிகாரி நடத்திய பழைய போலி மோதல் கொலை வழக்கை விசாரணைக்காகத் தூசு தட்டி எடுத்திருக்கிறது. போலீசு அதிகாரிகளின் பதவி உயர்வுக்குப் பயன்படும் போலி மோதல் கொலைகள், அவர்களைப் பழி வாங்கவும் பயன்படுத்தப்படும் எனக் காட்டியிருக்கிறார், மோடி.

குஜராத்தில் நடந்த மற்றொரு போலி மோதலில் கொல்லப்பட்ட மகாராஷ்டிராவைச் சேர்ந்த இர்ஷத் ஜஹன், லஷ்கர்-இ-தொய்பாவைச் சேர்ந்த தீவிரவாதியா, இல்லை அப்பாவி கல்லூரி மாணவியா என்பது குறித்த விசாரணை இன்னும் முடிவடையவில்லை. எனினும், இந்து மத வெறிக் கும்பல், ''அவர் முசுலீம் தீவிரவாதிதான், அவர் சுட்டுக் கொல்லப்பட்டது நியாயம் தான்'' என்று மூர்க்கமாகப் பிரச்சாரம் நடத்தி வருகிறது. இது மட்டுமின்றி, சோராபுதின், இர்ஷத் ஜஹன் கொலைகளைக் காட்டி, பாகிஸ்தானில் இருந்து ஏவிவிடப்படும் இசுலாமிய பயங்கரவாதத்தால் மோடியின் உயிருக்கு எப்போதுமே ஆபத்து இருப்பதாகவும் பிரச்சாரம் நடத்தப்படுகிறது.



சோராபுதின் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, ''அப்ரூவர்'' ஆகச் சம்மதித்துள்ள போலீசு அதிகாரி என்.கே. அமின்.

மோடியும், பா.ஜ.க.வும் சோராபுதின் மற்றும் இர்ஷத் ஜஹன் போலி மோதல் கொலை வழக்குகளை மத்தியப் புலனாய்வுத் துறையும், உச்ச நீதிமன்றமும் விசாரித்து வருவதைக் காட்டி, ''முசுலீம் தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடி வரும் மோடியைக் கொலைகாரனாகக் காட்டும் நோக்கத்தோடு, காங்கிரசும் அதன் உளவு நிறுவனங்களும் கதைகட்டி விடுவதாகவும், நாட்டின் மிகப் பெரிய அபாயமான இசுலாமிய பயங்கரவாதத்தோடு காங்கிரசு ஓட்டுக்காகச் சமரசம் செய்து கொள்வதாகவும்'' குற்றஞ்சுமத்துகின்றனர்.

ஆனால், உண்மையில் சோராபுதின் போலி மோதல் கொலைக்கு எதிராக காங்கிரசு ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போட்டதில்லை. மேலும், அணுஉலை விபத்து கடப்பாடு மசோதாவை நிறைவேற்ற பா.ஜ.க., காங்கிரசிற்கு ஒத்துழைப்பு கொடுக்க சம்மதம் தெரிவித்துள்ளதற்கு ஈடாக, சோராபுதின் கொலை வழக்கில் மோடியை மாட்டி விடுவதில்லை என காங்கிரசு உறுதியளித்திருப்பதாக முலயம் சிங்கும் லல்லுவும் அம்பலப்படுத்தியுள்ளனர்.

இர்ஷத் ஜஹன் போலி மோதல் கொலை வழக்கிலோ காங்கிரசு இளைய பங்காளியாகவே செயல்பட்டிருக்கிறது. மகாராஷ்டிராவைச் சேர்ந்த கல்லூரி மாணவியான இர்ஷத் ஜஹன் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதி; அவர் மோடியைக் கொல்லும் நோக்கத்துடம் குஜராத்துக்கு வருவதாக குஜராத் அரசின் புலனாய்வுப் பிரிவிடம் போட்டுக் கொடுத்ததே காங்கிரசு அரசுதான். இப்போலி மோதல் கொலை வழக்கு அம்பலமாகி விசாரணைக்கு வந்த பின்னால், காங்கிரசு அரசு தான் அப்படிச் சொல்லவில்லை என்று பல்டி அடித்துவிட்டது என்பதுதான் உண்மை.

இந்தப் போலி மோதல் கொலைகள் குறித்து இவ்வளவு உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்த பிறகும், பா.ஜ.க.வும் மோடியும் கொஞ்சம்கூட அசராமல், சோராபுதின் மற்றும் இர்ஷத் ஜஹன் குறித்து பொய் மூட்டைகளையே உண்மையைப் போல கட்டமைத்து இந்து மத வெறிப் பிரச்சாரத்தை நடத்தி வர முடிகிறதென்றால், அதற்குக் காரணம் போலி மோதல் கொலைகள் குறித்தும், இசுலாமிய பயங்கரவாதம் குறித்தும் பெரும்பாலானவர்கள் இந்து மதவெறி பாசிச கும்பலின் கருத்துக்களையே கொண்டுள்ளனர் என்பதுதான்.

குறிப்பாக, மேல்தட்டு வர்க்கமும், நடுத்தர வர்க்கமும் போலி மோதல்கள் மூலம்தான் முசுலீம் தீவிரவாதத்தையும், கிரிமினல்களையும் ஒழித்துக்கட்ட முடியும் என்ற கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளன. இந்தக் கருத்துதான் ஒவ்வொரு போலி மோதல் கொலைக்கும் சமூக அங்கீகாரத்தை வழங்கி விடுகிறது.

போலி மோதல் கொலை வழக்குகளில் நியாயமும் நீதியும் கிடைக்க வேண்டும் என்றால், அதனை நடத்திய போலீசாரையும், அப்போலீசாரைப் பாதுகாக்கும் ஓட்டுக் கட்சிகளையும் நீதிமன்றங்களையும் எதிர்த்துப் போராடினால் மட்டும் போதாது; பொதுமக்கள் மத்தியில் 'மோதல்' கொலைகள் பற்றி உருவாகியிருக்கும் இந்த பாசிச கருத்தையும் எதிர்த்துப் போராடியாக வேண்டும்.

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

## நல்லகாமன் வழக்கு:

# தோல்வி நிலையென நினைத்தால்...

**போலீசு எஸ்.பி. பிரேம்குமாரின் தண்டனையை ரத்து செய்ததன் மூலம் குற்றம் இழைக்கும் போலீசு அதிகாரிகளை சட்டப்பூர்வமாகத் தண்டிக்கவியலாது என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறது, உச்சநீதி மன்றம்.**

முன்னாள் இராணுவ சுபேதார் நல்லகாமன் தொடுத்திருந்த வழக்கில் உயர் நீதிமன்றத்தால் ஒரு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த போலீசு எஸ்.பி பிரேம்குமாரை, 2.8.2010 அன்று, மாரக்கண்டேய கட்ஜு, சி.பி.தாகுர் ஆகியோரைக் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு விடுதலை செய்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய கைகளைத் தலைக்கு மேலே உயர்த்தி நீதிபதிகளுக்குக் கும்பிடு போட்டார், பிரேம்குமார்.

சட்டத்தின் மீது நம்பிக்கை வைத்து விடாப்பிடியாக நீதிமன்றங்களில் போராடி, வழக்குக்காக சம்பாதித்த பணம் அனைத்தையும் செலவிட்டு, சொத்துக்களை விற்று, உறவினர்களின் ஏச்சுக்கு ஆளாகி, நீதி கிடைக்கும் என்று 28 ஆண்டு காலம் காத்திருந்த நல்லகாமன் என்ற முதியவரின் நம்பிக்கை மீதும், நீதியின் மீதும் மண்ணள்ளிப் போட்டது நீதிமன்றம். பிரேம்குமாரின் கட்டப் பஞ்சாயத்துக்கு எதிராக 1982-இல் நல்லகாமன் தொடுத்த வழக்கு, 2010-இல் உச்ச நீதிமன்றத்தின் கட்டப் பஞ்சாயத்தால் முடித்து வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வழக்கு குறித்து ஏற்கெனவே சிலமுறை புதிய ஜனநாயகம் இதழில் எழுதியிருக்கிறோம். 1982-இல் மதுரை மாவட்டம் வாடிப்பட்டி கிராமத்தில் வீட்டைக் காலி செய்வதற்கான சிவில் வழக்கு ஒன்றில், ஒரு போலீசு அதிகாரிக்கு ஆதரவாக கட்டப் பஞ்சாயத்து செய்தார் அன்று வாடிப்பட்டி எஸ்.ஐ. ஆக இருந்த பிரேம்குமார். பணிய மறுத்த நல்லகாமனையும் அவரது மகனையும் மனைவியையும் ரத்தம் சொட்டச் சொட்ட அடித்து, சங்கிலியால் கட்டித் தெருவில் இழுத்துச் சென்றதுடன், அவர்கள் தன்னைக் கொல்ல முயற்சி செய்ததாக பொய்வழக்குப் போட்டு சிறையிலும் அடைத்தார். கொதித்தெழுந்த வாடிப்பட்டி மக்கள் பேரணி, கடையடைப்பு என்று போராடினர். -ற்றுக் கணக்கான மக்கள் அளித்த சாட்சிகளின் அடிப்படையில் ஆர்.டி.ஓ. அளித்த அறிக்கையை ஏற்று, பிரேம்குமார் மீது கொலை முயற்சி உள்ளிட்ட 7 குற்றப்பிரிவுகளின் கீழ் தமிழக அரசு வழக்கு பதிவு செய்தது. பிரேம்குமார் மீதும் தன்னைத் தாக்கிய 11 போலீசார் மீதும் நல்லகாமன் நீதிமன்றத்தில் தனிநபர் வழக்கு தொடுத்தார்.

உச்ச நீதிமன்றத்தின் வர்க்கப் பாசத்தால் விடுதலையடைந்து விட்ட பிரேம்குமார்.



தன் மீது தமிழக அரசே கிரிமினல் வழக்கு தொடுத்திருந்த நிலையிலும், தனது செல்வாக்கைப் பயன்படுத்தி டி.எஸ்.பி. யாகப் பதவி உயர்வு பெற்றார் பிரேம்குமார். சுமார் 20 ஆண்டு காலம் ஒரு வாய்தா தவறாமல், நல்லகாமன் நீதிமன்றத்தில் ஆஜராகிக் கொண்டிருக்க, பிரேம்குமாரோ நீதிமன்றத்தை எட்டிக்கூடப் பார்க்கவில்லை. உண்மை இவ்வாறிருக்க, 'நல்லகாமன் நீதிமன்றத்துக்கே வருவதில்லை என்றும், தன்னை வேண்டுமென்றே அலைக்கழிப்பதாகவும் தன் மீதான வழக்குகளைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும்' சென்னை உயர் நீதிமன்றத்தில் பொய்யாக ஒரு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தார் பிரேம்குமார். வழக்கு விவரங்களைத் துருவி ஆராய்ந்த நீதிபதி கற்பக விநாயகம், தனது தீர்ப்பில் (ஜூன்,2002) பிரேம்குமாரைப் பற்றி கீழ்க்கண்டவாறு கண்டனங்களைப் பதிவு செய்தார்:

''பிரேம்குமார் மீது 13 முறை பிடிவாரண்டு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. உயர் போலீசு அதிகாரி என்பதால் இவரைக் கைது செய்ய போலீசு முயற்சிக்கவே இல்லை. இவர் எப்படிப் பதவி உயர்வு பெற்றார் என்பதும் தெரியவில்லை. சட்டத்தின் மீதோ, உண்மையின் மீதோ பிரேம்குமாருக்கு கடுகளவும் மரியாதை இல்லை. இவர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்படுமானால், இப்படி ஒரு ஆளை போலீசு துறையில் வைத்திருந்ததே மிகப்பெரிய வெட்கக்கேடாக இருக்கும்.''

இந்தத் தீர்ப்பை நாளிதழ்களில் பார்த்த மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) வழக்குரைஞர்கள் நல்லகாமனைத் தொடர்புகொண்டு வழக்கை ஏற்று நடத்தினர். ''நல்லகாமன் பிரேம்குமாரை அடித்ததும் குற்றம், பிரேம்குமார் நல்லகாமனை அடித்ததும் குற்றம்'' என்று தீர்ப்பளித்த மதுரை விரைவு நீதிமன்றம்,



படிப்பகம்

www.padippakam.com

இருவருக்கும் தண்டனை விதிக்காமல் கண்டனம் மட்டும் செய்தது. இதற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் நல்லகாமன் செய்த மேல்முறையீட்டு வழக்கில் பிரபல மனித உரிமை வழக்குரைஞர் கே.ஜி.கண்ணபிரான் வாதாடினார். விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்த உயர் நீதிமன்றம், பிரேம்குமாரின் மீதான கண்டனத்தை, ஒரு மாத சிறைத்தண்டனை என்று மட்டும் உயர்த்தியது. இதனைத் தொடர்ந்து பிரேம்குமார் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

''நான் தஞ்சை மாவட்ட எஸ்.பி.யாக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். எனவே எனக்கு ஜாமீன் வழங்குவதுடன், எனது மேல்முறையீட்டையும் உடனே எடுத்துக் கொள்ளவேண்டும்'' என்று உச்சநீதிமன்றத்தில் பொய் வாக்குமூலம் தாக்கல் செய்து ஜாமீன் வாங்கினார், பிரேம்குமார். சாதாரணக் குற்றப் பிரிவுகளிலான (இ.பி.கோ. 323 ) இத்தகைய வழக்குகளில், மேல்முறையீட்டை அனுமதிக்காத உச்சநீதிமன்றம், போலீசு அதிகாரி என்பதால் கருணை காட்டி பிரேம்குமாரின் மனுவை ஏற்றது. அந்தக் கருணையின் தொடர்ச்சிதான் தற்போது உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கும் விடுதலை.

''குறிப்பிட்ட அந்த சம்பவத்தில் நல்லகாமன், பிரேம்குமார் ஆகிய இருவரையுமே குற்றவாளி என்று விசாரணை நீதிமன்றம் கூறியிருப்பது முரண்பாடானது. எனவே சந்தேகத்தின் பயனை அனைவருக்கும் வழங்கி அனைவரையும் விடுவிக்கிறோம்'' என்று கூறுகிறது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. ''ஒரு சம்பவத்தில் இரண்டு தரப்பினரும் எப்படிக் குற்றவாளிகளாக இருக்க முடியும்?'' என்பதுதான் உச்ச நீதிமன்றம் எழுப்பும் கேள்வி. ஆனால் ''ஒரு சம்பவத்தில் இரண்டு தரப்பினருமே நிரபராதிகளாக இருக்க முடியும்'' என்பதுதான் உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்புக்குப் பொருள். நீதிமன்றத்தையோ, நீதி வழங்கும் முறையையோ இதைவிடக் கேவலமான முறையில் யாரேனும் அவமதிக்க முடியுமா?

இந்தத் தீர்ப்புக்கான நியாயத்தை உச்ச நீதிமன்றம் விளக்கவில்லை. ஏனென்றால், இத்தீர்ப்பு உண்மை விவரங்களிலிருந்து பிறக்கவில்லை. ஒரு நாட்டாமையின் ஆதிக்கசாதிக் கண்ணோட்டம் அவன் வழங்கும் நீதியைத் தீர்மானிப்பதைப் போலவே, நீதிபதிகளின் வர்க்கப் பார்வைதான் இத்தீர்ப்பைத் தீர்மானித்திருக்கிறது. அவர்களுடைய பார்வையில் நல்லகாமனுக்கு நேர்ந்த கொடுமை என்பது ஆயிரக்கணக்கான மக்கள் மீது போலீசு அன்றாடம் இழைத்துவரும் மிகச் சாதாரணமான வன்முறை. சாட்சியங்களே இல்லாத போதும், தேசத்தின் கூட்டு மனச்சாட்சியை திருப்திப்படுத்துவதற்காக அப்சல் குருவுக்கு தூக்கு தண்டனை விதித்த உச்சநீதிமன்றம், சாட்சியங்களை ஒதுக்கிவிட்டு பிரேம்குமாரை விடுவித்திருப்பதில் வியப்பில்லை.

எனினும், இது பிரேம்குமாரின் வெற்றியல்ல. எந்த அதிகாரத்திமிர் பிரேம்குமாரை ஆட வைத்ததோ, அந்த அதிகார நாற்காலியின் மீது அழுந்தி உட்கார இயலாமல் 28 ஆண்டுகளாக தவிக்க வைத்ததும், அமைச்சர்கள் முதல் அவர்களது அல்லக்கைகள் வரையிலான அனைவரின் கால்களிலும் பிரேம்குமாரை விழவைத்ததும், கண்ணீர் விட்டுக் கதற வைத்ததும் நல்லகாமனின் வெற்றிகள்.

2004-இல் இவ்வழக்கின் விசாரணையின்போது மதுரை நீதிமன்ற வளாகத்தில் வக்கீல்களிடம் வம்பிழுத்து தரும அடி வாங்கினார் பிரேம்குமார். வழக்கை எதிர்கொள்ளத் தயார் என்று வக்கீல்கள் கூறியபோதும், புகார் கொடுக்கும் துணிவின்றி பிரேம்குமார் பின்வாங்கினாரே, அது விசாரணை முடியுமுன்னரே நல்லகாமன் பெற்ற வெற்றி.

**தீர்ப்பை மீளாய்வு செய்யுமாறு உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்யவிருக்கிறார் நல்லகாமன். அது, நீதியை வழங்குவதற்கு உச்சநீதிமன்றத்துக்கு அளிக்கப்படும் கடைசி வாய்ப்பு. நீதியைப் பெறுவதற்கான கடைசி வாய்ப்பு அல்ல.**



போலி மோதல் கொலைகள் முதல் ரெட்டி சகோதரர்களின் கொள்ளை வரை எதையும் தடுக்க முடியாத இந்நாட்டில், போலீசின் திமிரை, அவர்களுடைய மைதானமான நீதிமன்றத்தில், அவர்கள் வகுத்த ஆட்ட விதிகளுக்கு உட்பட்டே ஒடுக்கிக் காட்டியிருக்கிறார்களே மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்கள், அதனைத் தோல்வி எனக் கொள்ள முடியுமா?

வெல்வது அரிது என்று தெரிந்தே இறங்கிய மோதலில் தொடர்ந்தும் நின்று போராடியிருப்பது வெற்றியா, தோல்வியா? போராட்டம் என்பதன் பரிமாணத்தை வெற்றி அல்லது தோல்வி என்ற எடைக்கற்களால் அளந்து கூற முடியாது. ஏனென்றால், போராட்டம் என்பதுதான் வெற்றி - தோல்வியை எடைபோடுவதற்கான தராசு.

பின்குறிப்பு: தீர்ப்பை மீளாய்வு செய்யுமாறு உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்யவிருக்கிறார் நல்லகாமன். அது, நீதியை வழங்குவதற்கு உச்சநீதிமன்றத்துக்கு அளிக்கப்படும் கடைசி வாய்ப்பு. நீதியைப் பெறுவதற்கான கடைசி வாய்ப்பு அல்ல.

● சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

# தொடரும் அரசியல் கூத்துக்கள்

தமிழக சட்டப் பேரவைக்கான 2011 பொதுத் தேர்தல்களுக்கான அரசியல் கூத்துகள் களைகட்டத் தொடங்கி விட்டன. இப்போதே கூத்தாடிகள் மீதான கவர்ச்சியை ரசிகர்களிடையே பரப்பும் முக்கிய 'ஜன நாயகக் கடமை'யைப் பெருந்திரள் செய்தி ஊடகங்கள் பொறுப்புடன் தொடர்கின்றன. கூத்துக்குத் தேவையான கதை அமைப்புகள் - அரங்கக் காட்சிகள் தயாரிப்பில் ஓட்டுக் கட்சிகள் தீவிரமாகிவிட்டன.

கட்சிகளின் மேடைப் பேச்சாளர்களைத் தயாரிக்கும் முகமாக தொழிற்பட்டறைகளை அந்தந்த கட்சிகள் ஏற்பாடு செய்து தலைவர்களின் வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன. தலைவர்களின் ''மூஞ்சி''களோடு கட்சியின் தேர்தல் சின்னங்களையும் மக்கள் மனதில் பதிய வைப்பதற்கு ''ஃபிளக்ஸ்'' தட்டிகளும், சுவரொட்டிகளும், கொடிகளும், பதாகைகளும் பெரும் எண்ணிக்கையிலும் ''ராட்சத'' அளவிலும் அச்சிடுவதற்கும், தலைவர்களை வரவேற்பதற்கான சரவெடிகள் வாங்குவதற்கும் சிவகாசியில் ''ஆர்டர்கள்'' கொடுக்கப்பட்டு விட்டன. சீரியல் விளக்குகளால் மின்னுமாறு தலைவர்கள் மற்றும் சின்னங்கள் அமைப்பதற்கான தயாரிப்புகள் செய்கிறார்கள்.

ஒலி-ஒளிக் குறுந்தகடு, மின்னணுச் செய்தி ஊடகம், கைபேசி போன்ற அதிநவீன சாதனங்களைத் தங்கள் பிரச்சாரங்களுக்கு எப்படிப் பயன்படுத்துவது என்று கட்சிகளின் சிறப்புக் குழுக்கள் மண்டையைப் பிய்த்துக் கொள்கின்றன. வேட்பாளர்கள் தேர்வுக்கான கொள்கை முடிவுகள் வகுக்கப்படுகின்றன. அதற்காகத் தொகுதிவாரியாக முக்கியப் பிரமுகர்களின் பட்டியல்கள், அவர்களைப் பற்றிய மதிப்பீடுகள், வெற்றிவாய்ப்புகளை ஆராய்வதற்குக் கணினி முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

இவையெல்லாம் ஒருபுறம் நடக்க, தலைவர்களிடையே அனல் பறக்கும் அறிக்கைப் போர்களும் முத்திரை வசனங்களும் (பஞ்ச் டயலாக்) இப்போதே தொடங்கிவிட்டன. பெருநகரங்களில் போட்டி போட்டுக் கொண்டு மாறிமாறிக் கட்சிகளின் பேரணிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. தங்களுக்குத்தான் அதிக ஆதரவு என்று காட்டுவதற்காக ஆளுக்கு -று ரூபாயும் பிரியாணிப் பொட்டலம் வீசிக் காக்கைக் கூட்டங்களைப் போல மக்கள் ஈர்க்கப்படுகிறார்கள்.

தேர்தல் பிரச்சாரங்களின்போது மக்கள் கூட்டத்தை இழுப்பதற்காக சினிமா நடிகர்களுக்கு வலை வீசப்படுகிறது. ஓட்டுக்கட்சிகளிடையே கூட்டணி பேரங்கள் ஆரம்பிப்பதற்கு முந்தைய பணியாக நோட்டம் விடுவது, ஆழம் பார்ப்பது, தூது அனுப்புவது ஆகியன நடக்கின்றன.

இவையனைத்தும் பற்றிய நடப்பு விவரங்களை இங்கே தொகுத்துத் தரவில்லை. ஏனென்றால், நாளிதழ்கள், வாரம் இருமுறை கிசுகிசு ஏடுகள் முதல் வார இதழ்கள் முதலிய பத்திரிக்கைகளிலும் வானொளிகளிலும் இவை பற்றிய செய்திகள் நிரம்பி வழிகின்றன. ஓட்டுக்கட்சிகளின் இந்த அரசியல் கூத்துக்கள் எல்லாம் இன்றைய நவீன வசதிகள், சாதனங்களைப் பயன்படுத்தி நடக்கின்றனவே தவிர, புதியதல்ல; எண்பது ஆண்டுகளுக்கு முன்பு காலனிய காலத்தில் ஓட்டுக்கட்சி முறை புகுத்தப்பட்ட காலத்திலிருந்தே தலைமுறை தலைமுறையாக நடப்பவைதாம்.

ஆரியம் - திராவிடம், தேசியவாதம் - இனவாதம், சோசலிசம் - முதலாளித்துவம், இந்துத்துவம் - மதச் சார்பின்மை - சிறுபான்மை, தலித்தியம் - ஆதிக்க சாதியம் என்று சித்தாந்த கொள்கை முரண்பாடுகள் இருந்தாலும், அவற்றைக் கடந்து அரசியல் - தேர்தல் கூட்டணிகளைச் சந்தர்ப்பவாதமாக அமைத்துக் கொள்வதும், பதவிக்காகக் கட்சி மாறுவதும், ஆட்சிக் கவிழ்ப்பும், மைனாரிட்டி ஆட்சிகள் நடத்துவதும் - இவையெதுவும் புதிதில்லை.

இந்தக் கூத்துக்களையே மரபாகவும், விதியாகவும் மாற்றிவிடும் பல நியாயவாதங்களை ஓட்டுக்கட்சித் தலைவர்கள் வகுத்து நிலைநாட்டியும் விட்டார்கள். ''அரசியலில் எதுவும் நடக்கலாம்,'' ''அரசியலில் நிரந்தர நண்பர்களும் கிடையாது, நிரந்தர எதிரிகளும்

**ஈழத்தமிழர்களைக் கொன்று குவிப்பதில் ராஜபக்சேவுக்கு உடந்தையாயிருந்த காங்கிரசுடன் கூட்டணி அமைத்திருக்கும் திருமாவளவன்**





படிப்பகம்

www.padippakam.com

கிடையாது'', ''அரசியல் என்பதே எண்ணிக்கை விளையாட்டுதான்'', ''தொகுதி உடன்பாடு வேறு, அரசியல் கூட்டணி வேறு''என்று தங்கள் வசதிக்கேற்ப அரசியல் சூத்திரங்களை ஓதுகிறார்கள்.

சமுதாய ரீதியில் மிகவும் ஒடுக்கப்பட்ட தலித் மற்றும் இசுலாமிய மக்களின் மீட்புக்காக புதிதாக அவதாரம் எடுத்துள்ள தலைவர்களாகவும் தலித்திய - இசுலாமிய அறிவாளிகளாகவும் காட்டிக் கொள்ளும் திருமாவளவனும் பேராசிரியர் ஜவாகருல்லாவும் ஓட்டுக்கட்சிக் கூட்டணி அரசியல் சாக்கடையில் சங்கமமாகிய பிறகு, மேலும் புதிய நியாயவாதங்களையும் அதற்கான சூத்திரங்களையும் சொல்லத் தொடங்கியுள்ளனர். அரசியலை அரசியலாகத்தான் அணுக வேண்டும், கோட்பாடு, தர்க்கம், பகுத்தறிவு எல்லாம் அதற்குப் பொருந்தாது என்று உபதேசிக்கிறார்கள்.

பிரபாகரன் ''கெட்-அப்''பில் தோன்றி முழக்கமிடும் திருமாவளவன், ஈழத் தமிழர்களைக் கொன்று குவிப்பதில் ராஜபக்சேவுக்கு உடந்தையாயிருந்த காங்கிரசுடன் தேர்தல் கூட்டணி அமைத்துள்ளதை நியாயப்படுத்துகிறார். நாடு முழுவதும் இசுலாமியரைக் கொன்று குவித்த பா.ஜ.க.வுடனும், குறிப்பாக குஜராத்தில் அவர்களுக்கெதிராக பாசிச கொலைவெறியாட்டம் போட்ட மோடியுடனும் தோளோடு தோள் உரசும் ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைப்பதை ஜவாகருல்லா கும்பல் நியாயப்படுத்துகிறது.

தேர்தலுக்குத் தேர்தல் மாறி மாறி சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைக்கும் பச்சோந்தி ராமதாசு என்று கிண்டலடிக்கப்பட்டவர், இப்போது சீந்துவார் இல்லாமல் சாயம் போன ஓணான் நிலைக்குத் தள்ளப்பட்ட நிலையில் காங்கிரசு தலைமையில் மூன்றாவது அணி அமைக்க வேண்டும்; நடிகர் விஜயகாந்த் கட்சியுடன்கூடக் கூட்டணிக்குத் தயார் என்று நடுத்தெருவில் நின்று கூவுகிறார்.

இப்போது தேர்தல் கூட்டணிகளை அமைப்பது என்பது ஒவ்வொரு கட்சிக்கும் உள்ள வாக்கு வங்கியின் ஆதரவு சதவீதம், அதன் மீதான கூட்டல் - கழித்தல் என்ற எண்ணிக்கைக் கணக்காகிவிட்டது. அரசியல் என்பது ஆளும் கட்சிகளின் இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளை அம்பலப்படுத்துவதும் குற்றஞ்



இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் விழாவில் தமிழக முதல்வர் மு.கருணாநிதி மற்றும் அவரது பேரனும் மத்திய அமைச்சருமான தயாநிதி மாறன்.

சாட்டுவதும் எதிர்க்கட்சிகள் மீது ''நீங்கள் மட்டும் யோக்கியமா?'' என்ற கேள்வி எழுப்பி எதிர்க் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுவதும் என்றாகிவிட்டது.

மக்களை ஈர்ப்பதற்கு ஆளும் கட்சிகள் இலவசக் கவர்ச்சி அறிவிப்புகளை செய்வதும் (முன்பு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச எரிவாயு அடுப்பு, இனி காங்கிரீட் வீடு, விவசாயிக்கு பம்பு செட் ஆகியவை); அவற்றையும் ''போதாது, போலி'' என்று எதிர்க்கட்சிகள் குறைகூறுவதும் என்றாகி விட்டது. போலி கம்யூனிஸ்டுகள் தமது காலாவதியான கொள்கைகளையும் கைகழுவிவிட்டு, பல சமயங்களில் அரசியல் அனாதைகளாகிவிட்ட நிலையில், ஏதாவது ஒரு அணியில் ஒட்டிக் கொண்டு காலத்தைத் தள்ளுகின்றனர்.

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கத்தை ஓட்டுக்கட்சிகள் பெரும்பான்மையாக நேரடியாகவும், சில கட்சிகள் (போலி கம்யூனிஸ்டுகள், போலி சோசலிசக் கட்சிகள்) மறைமுகமாகவும் ஏற்றுக் கொண்டுவிட்டன. இதனால்தான் சிறுபான்மையாக உள்ள நிலையிலும் பா.ஜ.க., காங்கிரசு ஆட்சிகள் மாறி மாறி நீடிக்க முடிகிறது. நாட்டுக்கும் மக்களுக்கும் விரோதமான சட்டதிட்டங்கள் வெறியுடன் அமலாக்கப்படுகின்றன.



பா.ஜ.க. வோடு தோளோடு தோள் உரசும் ஜெயலலிதாவோடு கூட்டணி அமைக்கத் தயங்காத ஜவாகருல்லா

தொடர்ந்து மேற்கண்டவாறு பல அரசியல் கூத்துக்கள் அரங்கேற்றப்படுவதால், செய்தி ஊடகங்கள் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஓட்டுக்கட்சிகளின் ஊது குழல்களாகவும், வெறுமனே களியாட்ட வியாபாரிகளாகவும் செயல்படுவதன் காரணமாக மக்கள் ஒருவித மயக்கத்தில் ஆழ்த்தப்பட்டிருக்கிறார்கள். கணிசமான அளவு இலவசத் திட்டங்கள், ஓட்டுக்குப் பணம் ஆகியவற்றால் ஊழல் படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஓட்டுக்கட்சிகளில் ஏதாவது ஒரு கட்சிக்கோ, அணிக்கோ மக்கள் தொடர்ந்து வாக்களித்துக் கொண்டிருக்கிறார்கள்.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# நேபாள அரசியல் நெருக்கடி: குளிர்காயும் இந்தியா

**நேபாளத்தில் நீடித்துவரும் அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு, மாவோயிஸ்டுகளைத் தனிமைப்படுத்த முயலுகிறது, இந்தியா.**

**அ**ண்டை நாடான நேபாளத்தில், அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினரான நேபாள மாவோயிஸ்டு கட்சியைச் சேர்ந்த ராம் குமார் சர்மாவுக்கு கடந்த ஆகஸ்ட் மாதத் தொடக்கத்திலிருந்து தொலைபேசியில் கொலை மிரட்டல்கள் வந்து கொண்டிருந்தன. தலைநகர் காத்மண்டு-வில் இந்தியத் தூதரகம் நடத்திவரும் கேந்திரிய வித்யாலயா பள்ளியிலிருந்து அவரது மகள் நீக்கப்படுவார் என்றும், நாங்கள் குறிப்பிடுவது போல் பிரதமர் தேர்தலில் செயல்படாவிட்டால் உங்கள் உயிருக்கு ஆபத்து என்றும் தொலைபேசி வழியாக இந்திய உளவுத்துறை அதிகாரிகள் மிரட்டினர்.

ராம் குமார் சர்மா, முன்பு லோக்தாந்திரிக் என்ற மாதேசி பிராந்தியக் கட்சியில் இருந்தவர். பின்னர் மாவோயிஸ்டு கட்சியில் இணைந்த அவர், அதன் மத்திய கமிட்டி உறுப்பினராகவும் உயர்ந்துள்ளார். தற்போது நேபாளத்தில் நடந்துவரும் பிரதமர் தேர்தலில் மாவோயிஸ்டு வேட்பாளரான பிரசந்தாவை ஆதரிக்குமாறு நேபாள மாதேசி கட்சியினரிடம் கோரியதுதான் அவர் செய்த குற்றம். நேபாள பிரதமர் தேர்தலில் மாவோயிஸ்டு கட்சி வெற்றி பெறக் கூடாது என்பதே இந்தியாவின் நோக்கம். எனவேதான் இந்த மிரட்டல்.

கடந்த ஆகஸ்டு 7-ஆம் தேதியன்று தொலைக்காட்சிகளுக்கு பேட்டியளித்த ராம் குமார் சர்மா, இதனை ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். அதைத் தொடர்ந்து, பணம் கட்டிய பின்னர் திடீரென இடமில்லை என்று அவரது மகளை 11-ஆம் வகுப்பில் சேர்க்க மறுத்துள்ளது, பள்ளி நிர்வாகம். தனது உயிருக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு ராம் குமார் சர்மா அரசியல் நிர்ணய சபையிடம் கோரியுள்ளதோடு, நேபாள அரசாங்கத்திடமும் மனித உரிமை அமைப்புகளிடமும் முறையிட்டுள்ளார்.

இந்திய உளவுத் துறையினரும் இந்தியத் தூதரகத்தினரும் இவற்றை மறுத்த போதிலும், நேபாளத்தில் யாரும் இதை நம்பத் தயாராக இல்லை. ஏனெனில், நேபாளத்தின் உள்விவகாரங்களில் வெளிப்படையாகவே இந்தியா தலையிட்டு வருகிறது என்பது யாவரும் அறிந்த உண்மை.

''காந்திபூர்'', ''காத்மண்டு போஸ்டு'' முதலான நாளேடுகளை நடத்திவரும் நேபாளத்தின் பெரிய பத்திரிகைக் குழுமமான காந்திபூர் பப்ளிகேஷன்ஸ், இந்தியாவின் தலையீட்டை அவ்வப்போது விமர்சித்து எழுதி வந்தது. இதன் தொடர்ச்சியாக, கனடாவிலிருந்து கொல்கத்தா துறைமுகத்துக்கு கடந்த மே மாதத்தில் வந்த அந்நாளேட்டுக்கான செய்தித்தாள் காகிதம், இந்திய உளவுத் துறையால் நேபாளத்துக்கு அனுப்பப்படாமல் ஒரு மாதத்துக்கும் மேலாக முடக்கி வைக்கப்பட்டது. இதனால் அப்பத்திரிகைக் குழுமம் தொடர்ந்து நாளேடுகளை வெளியிட முடியாத நெருக்கடியில் சிக்கித் தவித்தது. இந்தியத் தூதர் ராகேஷ் சூட்-இடம் இப்பத்திரிகை நிறுவனத்தினர், தாங்கள் 'ஆக்கபூர்வமான' கட்டுரைகள் எழுதுவதாக உறுதியளித்த பின்னரே, பெட்டகங்கள் நேபாளத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் சிறப்புத் தூதரான ஷியாமா சரண், நேபாள அரசியல் நெருக்கடியைத் தீர்க்க ஆலோசனை கூறுவது என்ற பெயரில் நேபாளத்துக்கு வந்து பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்களைச் சந்தித்துள்ளார். மாவோயிஸ்டுகளை ஆதரிக்கக் கூடாது என்று அவர் பல கட்சிகளிடமும் எச்சரித்ததாக நேபாள ஊடகங்கள் அம்பலப்படுத்தி செய்திகளை வெளியிட்டன.

இந்திய உளவுத்துறையின் கொலைமிரட்டலை ஊடகங்களில் அம்பலப்படுத்திய மாவோயிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ராம்குமார் சர்மா.





படிப்பகம்

நேபாளத்தில் முடியாட்சிக்கு எதிரான பேரெழுச்சியைத் தொடர்ந்து, ஐ.நா.மேற்பார்வையில் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகி, அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடந்தது. அதில் அதிக இடங்களைக் கைப்பற்றிய மாவோயிஸ்டுகள் ஏப்ரல் 2008-இல் தமது தலைமையிலான புதிய இடைக்கால அரசாங்கத்தை நிறுவினர். நேபாளத்தில் மன்னராட்சி தூக்கியெறியப்பட்ட போதிலும், மன்னராட்சியால் உருவாக்கப்பட்டு, மன்னராட்சியைக் காத்துவந்த நேபாள இராணுவம் அப்படியே தக்கவைக்கப்பட்டது, நேபாள மக்கள் எழுச்சியின் பலவீனமானமாகும். மன்னராட்சியின் கட்டுப்பாட்டில் நேபாளத்தில் தேர்தல்கள் நடந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரமில்லாத அரசாங்கங்கள்கூட, இராணுவத்தின் துணையுடன் ஒவ்வொருமுறையும் கலைக்கப்படுவதும் கவிழ்க்கப்படுவதும் ஏற்கெனவே நடந்துள்ளதால், இனி நேபாள இராணுவம் குடியாட்சிக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும் என்று மாவோயிஸ்டுகள் அறிவித்தனர்.



பிரதமர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட்டு பெரும்பான்மை கிடைக்காமல் தோல்வியடைந்த மாவோயிஸ்டு கட்சியின் தலைவர் தோழர் பிரசந்தா மற்றும் நேபாள காங்கிரசு கட்சியின் துணைத்தலைவர் பௌதேல்.

ஆனால், அமைதி ஒப்பந்தத்திற்கு எதிராகவும், புதிய இடைக்கால அரசின் ஒப்புதலோ, உத்தரவோ இல்லாமலும் மன்னராட்சியின் கீழிருந்த நேபாள இராணுவத்தின் தளபதியான ருக்மாங்கத் கடுவால், இந்தியாவின் ஆசியுடன் நேபாள இராணுவத்தில் 2800 பேரை தன்னிச்சையாகச் சேர்த்தார். பல இராணுவ அதிகாரிகளுக்குப் பதவி நீட்டிப்பு செய்தார். இது சட்டவிரோதமானது என்று மாவோயிஸ்டுகளின் அரசாங்கம் பிறப்பித்த உத்தரவை அவர் உதாசீனம் செய்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்துக்குக் கட்டுப்பட மறுத்து, சட்டவிரோதமாகச் செயல்படும் இத்தலைமைத் தளபதியைப் பதவி நீக்கம் செய்ய மாவோயிஸ்டுகளின் அரசாங்கத்தின் பிரதமரான பிரசந்தா உத்தரவிட்டார். இருப்பினும், போலி கம்யூனிஸ்ட் கட்சியான மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நேபாள அதிபர் ராம்பரண் யாதவ், சட்டவிரோதமான வழியில் பிரதமர் பிரசந்தாவின் உத்தரவை ரத்து செய்து, இராணுவத் தலைமைத் தளபதி பதவியில் நீடிக்க உத்தரவிட்டார்.

நேபாள அரசியல் கட்சிகள், நேபாள இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து இந்தியாவின் ஆதரவுடன் திரைமறைவில் ஆட்சிக் கவிழ்ப்பு சதியில் ஈடுபடுவதைக் கண்ட மாவோயிஸ்டுகள், கடந்த 2009-ஆம் ஆண்டு மே மாதத்தில் இடைக்கால அரசிலிருந்து பதவி விலகுவதாக அறிவித்தனர். நேபாள இராணுவத் தளபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குக் கட்டுப்பட்டவரா, அல்லது அரசுக்கு மேலான அதிகாரம் கொண்டவரா? என்ற கேள்வியை நாட்டின் முன்வைத்து, குடியாட்சியின் உயரதிகாரத்தை நிலைநாட்ட அரசாங்கத்துக்கு வெளியே மக்களைத் திரட்டிப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

மாவோயிஸ்டுகள் பதவி விலகிய பிறகு, நேபாளத்தின் போலி கம்யூனிஸ்ட் கட்சியான மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியும் நேபாள காங்கிரசும் கூட்டணி அரசை நிறுவின. மா-லெ கட்சியின் மாதவ குமார் நேபாள் பிரதமராகப் பொறுப்பேற்றார். இந்த அரசாங்கமோ வெளிப்படையாகவே இந்திய மேலாதிக்கத்தின் கைக்கூலி அரசாகவே செயல்பட்டது. அதன் துரோகங்கள்-சதிகளை எதிர்த்து நாடாளுமன்றப் புறக்கணிப்பு, தெருப்போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள் -என மாவோயிஸ்டுகள் தொடர்ந்து போராடி வந்தனர்.

ருக்மாங்கத் கடுவால், குருங்: நேபாள மக்கள் குடியாட்சியின் உயரதிகாரத்துக்குக் கட்டுப்பட மறுக்கும் முன்னாள், இந்நாள் இராணுவத் தலைமைத் தளபதிகள்.



நேபாள எழுச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் பதவிக் காலம் கடந்த மே 28- ஆம் தேதி முடிவடைந்திருக்க வேண்டும். இக்காலத்திற்குள் இந்த அவை அரசியல் சட்டத்தை எழுதி முடித்திருக்க வேண்டும். ஆனால் நேபாள காங்கிரசு, போலி கம்யூனிஸ்ட்



படிப்பகம்

www.padippakam.com

**அமைதி ஒப்பந்தத்தைச் சீர்குலைத்து, தமது வர்க்க நலன்களுக்கு ஏற்ப நேபாளத்தின் பிற்போக்கு கட்சிகளும் புரட்டல்வாதக் கட்சிகளும் சந்தர்ப்பவாதமாக நடந்து கொண்டு தொடர்ந்து துரோகமிழைத்து வருகின்றன.**

மா-லெ கட்சி மற்றும் பிற கட்சிகள் தமது வர்க்க நலன் காரணமாக நேபாளத்தின் எதிர்கால அரசியல் சட்டம் என்னவாக இருக்க வேண்டும் என்பதில் மாவோயிஸ்டுகளுடன் முரண்பட்டு நிற்கின்றன. இக்கட்சிகள் முதலாளித்துவ ஜனநாயக அரசியல் சட்டங்களைக்கூட ஏற்கத் தயாராக இல்லை. இவற்றாலும், திரைமறைவில் நடந்த இந்தியாவின் மேலாதிக்க சதிகளாலும் அரசியல் நிர்ணய சபையில் அரசியல் சட்டங்களை இயற்றும் பணி நிறைவேறவில்லை.

இதனால் அரசியல் நிர்ணயசபையின் காலம் முடிவடைவதையொட்டி நெருக்கடி தீவிரமானது. பின்னர், கடைசி நேரத்தில் மூன்று பெரிய கட்சிகளான நேபாள ஐக்கியப் பொதுவுடமைக் கட்சி(மாவோயிஸ்ட்), நேபாள ஐக்கியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) மற்றும் நேபாள காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பொதுக் கருத்துக்கு வந்தன. அதன்படி, அரசியல் நிர்ணய சபையை மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பது, 2006-ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட அமைதி நடவடிக்கைக்கான ஒப்பந்தத்தை நிறைவேற்ற முழு ஒத்துழைப்பை அளித்து பொதுக் கருத்தின் அடிப்படையிலான தேசிய அரசை நிறுவுவது, மாதவ குமார் நேபாளை பிரதமர் பொறுப்பிலிருந்து விலக்குவது - ஆகிய மூன்று முடிவுகளை அறிவித்தன. இருப்பினும், அரசியல் நிர்ணய சபை நீட்டிக்கப்பட்ட மறுநாளே மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியும் நேபாள காங்கிரசும் தமது பழைய ஆட்டத்தைத் தொடர்ந்தன.

13 மாதங்கள் பதவியில் இருந்த பிரதமர் மாதவ குமார் நேபாள் கடந்த ஜூன் 30-ஆம்தேதி பதவி விலகி, அடுத்த பிரதமர் பதவியேற்கும்வரை தற்காலிகப் பொறுப்பில் இருந்த நிலையில், ஜூலை 21-ஆம் தேதி பிரதமர் பதவிக்கான தேர்தல் நடந்தது. பிரதமராக நிறுத்தப்படும் வேட்பாளர் வெற்றிபெற 600 பேர் கொண்ட நேபாள நாடாளுமன்றத்தில் 301 வாக்குகள் தேவை. மாவோயிஸ்டுகள் 237 எம்.பி.க்களைக் கொண்டுள்ளனர். நேபாள காங்கிரசு 114 எம்.பி.க்களையும் மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட் கட்சி 109 எம்.பி.க்களையும் கொண்டுள்ளன. இரு பெரும் கட்சிகளான மாவோயிஸ்டு கட்சியும் நேபாள காங்கிரசு கட்சியும் பிரதமர் பதவிக்கு தமது வேட்பாளர்களை அறிவித்தன. போலி கம்யூனிஸ்டு கட்சியான மா-லெ கட்சி, பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சி வேட்பாளரை ஆதரிப்பதாக எழுத்து பூர்வமாக தெரிவித்தால் மட்டுமே தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்தது. அவ்வாறு ஆதரவு கிடைக்காததால் அக்கட்சி போட்டியிடவில்லை.

மாவோயிஸ்டு கட்சி சார்பில் போட்டியிட்ட பிரசந்தாவும் நேபாள காங்கிரசு கட்சி சார்பில் போட்டியிட்ட அக்கட்சியின் துணைத் தலைவரான ராமச்சந்திர பௌடேலும் பெரும்பான்மை பெற முடியாமல் தோல்வியடைந்தனர். பிரசந்தாவுக்கு 242 வாக்குகளும் பௌடேலுக்கு 124 வாக்குகளும் கிடைத்தன. இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள மாதேசி கட்சிகளும் இதர சிறிய கட்சிகளும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தன. மா-லெ கட்சி நடுநிலை வகித்தது.

யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் போனதால், அடுத்த கட்டமாக மீண்டும் ஜூலை 23-ஆம் தேதியன்று பிரதமர் பதவிக்கான மறுதேர்தல் நடந்தது. அப்போதும் இதே அளவில்தான் பெரிய கட்சிகளின் வலிமை இருந்தது. மீண்டும் ஆகஸ்ட் 2, 6, 23 - ஆகிய தேதிகளில் அடுத்தடுத்து தேர்தல்கள் நடந்த போதிலும் யாருக்கும் பெரும்பான்மை இல்லாமல் ஏறத்தாழ இதே நிலைமைதான் நீடித்தது. இப்போது மீண்டும் ஆறாவது முறையாக செப்டம்பர் 5-ஆம் தேதியன்று தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் நெருக்கடியைத் தீர்க்க இந்திய 'ஞானத்தந்தை'யின் உபதேசம்: நேபாள மாவோயிஸ்டுக் கட்சித் தலைவர்களான பிரசந்தா மற்றும் பாபுராம் பட்டாராயுடன் விவாதிக்கும் மன்மோகன் சிங்கின் சிறப்புத் தூதர் சியாம் சரண்.



இதற்கிடையே, ஐ.நா.வின் அமைதி நடவடிக்கைக்கான அரசியல்பணித் திட்டக் குழுவின் (UNMIN) கண்காணிப்புக் காலமும் வரும் செப்டம்பர் 15-ஆம் தேதியுடன் முடிவடைவதால், இக்குழுவை நீட்டிக்கக் கோருவதா, வேண்டாமா என்பதையொட்டி மாவோயிஸ்டுகளுடன் இதர அரசியல் கட்சிகள் முரண்பட்டு நிற்கின்றன.

ஐ.நா. குழு கடந்த 2007 ஜனவரி முதலாக நேபாளத்தில் இயங்கி வருகிறது. மாவோயிஸ்டுகளின் செம்படையையும் நேபாள இராணுவத்தையும் இது கண்காணித்து வந்தது. ஓராண்டு காலத்துக்கு இப்பணி இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் நேபாளத்தில் புதிய அரசியல் சட்டம் நிறைவேறுவதில் தாமதமானதால்,



படிப்பகம்

www.padippakam.com

நேபாள அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் இக்குழுவை தொடர்ந்து நீட்டித்து வந்தது.

தற்போது நேபாள இராணுவத்தின் புதிய தலைமைத் தளபதியான சத்ரமான்சிங் குருங், ஐ.நா.வின் கண்காணிப்புக் குழு இனி அவசியமில்லை என்கிறார். மேலும், நேபாள இராணுவம் என்பது ஐ.நா. கண்காணிப்பின் கீழ் இல்லை என்றும், நேபாள இராணுவம் புதிதாக ஆளெடுப்பையும் ஆயுதக் குவிப்பு செய்வதையும் ஐ.நா. குழு எதிர்ப்பதற்கு எவ்வித உரிமையுமில்லை என்றும் அவர் கொக்கரிக்கிறார்.

ஐ.நா.கண்காணிப்புக் குழுவை நீட்டிப்பதா, வேண்டாமா என்பதை நேபாளத்தின் குடியாட்சியும், குடியாட்சியின் முக்கிய அங்கமான நாடாளுமன்றமும்தான் முடிவு செய்யவேண்டுமே தவிர, நேபாள இராணுவம் அல்ல என்கின்றனர், மாவோயிஸ்டுகள். அமைதி நடவடிக்கைகள் நிறைவேறும்வரை ஐ.நா.குழு நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். ஆனால், நேபாள அரசியல் கட்சிகள் இந்த விவகாரத்திலும் நேபாள இராணுவத் தளபதியின் முடிவை ஆதரித்து, மாவோயிஸ்டுகளுடன் முரண்பட்டு நிற்கின்றன.

அமைதி ஒப்பந்தத்தைச் சீர்குலைத்து, தமது வர்க்க நலன்களுக்கு ஏற்ப நேபாளத்தின் பிற்போக்கு கட்சிகளும் புரட்டல்வாதக் கட்சிகளும் சந்தர்ப்பவாதமாக நடந்து கொண்டு தொடர்ந்து துரோகமிழைத்து வருகின்றன. அரசியல் நிர்ணய சபையில் தனிப்பெரும் கட்சியான மாவோயிஸ்டு கட்சிக்கு அதிகாரமிக்க பதவிகளைத் தர இக்கட்சிகள் மறுக்கின்றன. மன்னராட்சியின் ராணுவத்தையே தற்போதைய நேபாளத்தின் இராணுவம் என்றும், மாவோயிஸ்டுகளின் 19,600 பேர் கொண்ட செம்படையை அதனுடன் இணைக்கமுடியாது என்றும் இவை வாதிடுகின்றன. ஐ.நா.மேற்பார்வையில் செயல்படுத்தப்படும் அமைதி ஒப்பந்தத்தை மீறி, இப்போது இக்கட்சிகளின் ஆதரவோடு நேபாள இராணுவத்துக்கு ஆளெடுப்பதும் ஆயுதங்களைக் குவிப்பதும் நடக்கத் தொடங்கி விட்டன. இச்சட்டவிரோதச் செயலை அம்பலப்படுத்தி, தாங்களும் செம்படைக்கு ஆளெடுப்பை நடத்தப் போவதாக மாவோயிஸ்டுகள் அறிவித்துள்ளனர். அவ்வாறு செய்தால் இராணுவம்-போலீசை ஏவி தடுத்து நிறுத்துவோம் என்று எச்சரிக்கிறது, நேபாளஅரசு

மன்னராட்சிக்கு எதிரான எழுச்சி உச்சநிலையை அடைந்த போது, மன்னராட்சி இனியும் நீடிக்க முடியாமல் முட்டுச் சந்துக்கு வந்தபோது, மாவோயிஸ்டுகளுடன் கூட்டணி கட்டிக் கொண்ட நேபாள அரசியல் கட்சிகள், இன்று அதை முறித்துக் கொண்டு மாவோயிஸ்டுகளுக்கு எதிராக நிற்பதையும், நிலைமை உச்ச கட்டத்தை எட்டிவிட்டதையும் இவையனைத்தும் நிரூபித்துக் காட்டுகின்றன. ''மாவோயிஸ்டுகளை நாடாளுமன்ற ஜனநாயகக் கட்சியாக ஏற்க வேண்டுமானால், செம்படையைக் கலைக்க வேண்டும். போர்க்குணமிக்க இளம் கம்யூனிஸ்டு கழகத்தையும் கலைத்து விட வேண்டும். மன்னராட்சிக்கு எதிரான மக்கள் யுத்தக் காலத்தில் செம்படை கைப்பற்றிக் கொண்டு கூலி-ஏழை விவசாயிகளிடம் விநியோகித்துள்ள நிலப்பிரபுக்களின் நிலங்களையும் வீடுகளையும் திரும்ப ஒப்படைக்க வேண்டும். இவையனைத்தையும் நிறைவேற்றாதவரை புதிய அரசியல் சட்டத்தை நிறைவேற்ற இயலாது'' என்று இக்கட்சிகள் பிரகடனப்படுத்தியுள்ளன.



அமைதி ஒப்பந்தத்தைச் சீர்குலைக்கும் அரசியல் கட்சிகளையும் இந்திய மேலாதிக்கத் தலையீட்டையும் எதிர்த்து மாவோயிஸ்டுகள் தலைநகர் காத்மண்டுவில் நடத்திய போராட்டம்.

இக்கட்சிகளின் துரோகத்தை அம்பலப்படுத்தி ''நாட்டுப்பற்றுகொண்டோரும் இடதுசாரிகளும் ஜனநாயகக் குடியரசை ஆதரிப்போரும் அணிதிரள்க!'' என்ற மைய முழக்கத்தின் அடிப்படையில் மாவோயிஸ்டுகள் ஐக்கிய முன்னணியைக் கட்டியமைத்துப் போராடவிழைகின்றனர். நேபாளத்தில் தேசிய-ஜனநாயக கூட்டுத்துவ மக்கள் குடியரசை நிறுவவும், அதை அரசியல் நிர்ணயசபையில் சட்டமாக நிறைவேற்றவும் கடுமையாக முயற்சித்து வருகின்றனர்.

2009-இல் குடியாட்சியின் உயரதிகாரத்தை நிலைநாட்டக் கோரி மாவோயிஸ்டுகள் பதவி விலகிய பிறகு, மாவோயிஸ்டுகள் தலைமையில் எந்தவொரு கூட்டணி அரசும் அமையக் கூடாது; இதர கட்சிகளின் தலைமையில் அரசு அமைந்தாலும் அதில் மாவோயிஸ்டுகளைக்

**சுதந்திரமாக-சுயாதிபத்திய உரிமையுடன் தனது சொந்த அரசியல் சட்டத்தை நேபாளம் உருவாக்கிக் கொள்ளக்கூடாது என்பதுதான் இந்தியா மற்றும் உலகெங்குமுள்ள பிற்போக்கு சக்திகளின் நிலைப்பாடாக உள்ளது.**



படிப்பகம்

www.padippakam.com

கூட்டணி சேர்க்கவும் கூடாது என்பதுதான் இந்திய மேலாதிக்கவாதிகளின் நோக்கம். இந்தியாவின் மேலாதிக்க நலன்களுக்கு எதிராக, சுதந்திரமாக-சுயாதிபத்திய உரிமையுடன் தனது சொந்த அரசியல் சட்டத்தை நேபாளம் உருவாக்கிக் கொள்ளக்கூடாது என்பதுதான் இந்தியா மற்றும் உலகெங்குமுள்ள பிற்போக்கு சக்திகளின் நிலைப்பாடாக உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, மீண்டும் கம்யூனிச சித்தாந்தம் தலைதூக்கக் கூடாது என்ற வெறியோடு அமெரிக்கா தலைமையிலான உலக முதலாளித்துவம் நேபாள உள்விவகாரங்களில் அதீத அக்கறை காட்டி தலையீடு செய்து வருகின்றது. இதனால்தான் மக்களிடம் செல்வாக்கிழந்துள்ள போதிலும், நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் அல்லாத இதர அரசியல் கட்சிகளை இந்தியாவும் உலக முதலாளித்துவமும் முட்டுக் கொடுத்து தூக்கி நிறுத்துகின்றன. இதனால்தான் நேபாளத்தில் நிலவி வரும் நாடாளுமன்ற முட்டுக்கட்டை முடிவுக்கு வராமல், மீண்டும் புதிய நெருக்கடிகளும் இழுபறிகளுமாகத் தொடர்கிறது.

வரலாற்று ரீதியாகவும் பூகோள ரீதியாகவும் இந்தியாவுடன் பின்னிப் பிணைந்துள்ள சிறிய அண்டை நாடுகளின் சுதந்திரம்-சுயாதிபத்தியம் என்பனவெல்லாம் இந்தியாவின் நலன்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றும், அவற்றை அடிமை நாடுகளாகக் கருதி தலையிட்டு மேலாதிக்கம் செய்வதையும் தனது இயல்பான நடவடிக்கையாகவே இந்தியா கருதுகிறது. இதற்கேற்ப நாட்டு மக்களிடமும் இம்மேலாதிக்கத்தை நியாயப்படுத்தும் கருத்தை ஊட்டி வளர்த்துள்ளது. இந்தியாவின் தலையீடு தெற்காசிய வட்டாரத்திலும் குறிப்பாக, நேபாளத்திலும் மேலும் மூர்க்கமாகி வருவதையும், இந்தியாவின் மேலாதிக்க நலன்களுக்கு ஏற்ப ஒரு பொம்மை அரசை நிறுவி, மாவோயிஸ்டுகளைத் தனிமைப்படுத்தும் உத்தியுடன் இந்தியா கீழ்த்தரமாக முயற்சித்து வருவதையும் நேபாள நிலைமைகள் உணர்த்துகின்றன.

# செல்போன் பெருகியது; வறுமை ஒழிந்தது!

## -செட்டிநாட்டு சிதம்பரத்தின் அபாரக் கண்டுபிடிப்பு!

ஐ.நா. அவையின் அறிக்கையின் படி, பசியால் வாடும் 88 நாடுகளின் பட்டியலில் இந்தியா 65- ஆவது இடத்தில் இருக்கிறது. இந்தியாவில் 37 கோடி நபர்களுக்குக் கழிப்பிட வசதி இல்லை. 5 வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளில் 40 சதவீதத்தினர் சத்தான உணவு கிடைக்காமல் நோஞ்சான்களாக உள்ளனர். இவை இந்திய மக்களின் ஏழ்மையையும், அவல நிலையையும் காட்டும் புள்ளி விவரங்கள்.

ஆனால், ஒரே ஒரு புள்ளி விவரத்தை மட்டும் தந்து "இந்தியாவில் வறுமையே இல்லை" என்று சொல்லி அசத்தி இருக்கிறார், முன்னாள் நிதியமைச்சரும், இந்நாள் உள்துறை அமைச்சருமான செட்டிநாட்டு சிதம்பரம். தில்லியில் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் காங்கிரசு மாணவர் அமைப்பின் கூட்டத்தில் பேசும்போது, "நாடெங்கும் 60 கோடி பேரிடம் செல்போன் இருக்கும் நிலையில், இந்தியாவில் 77 சதவீத மக்கள் வறுமையில் உள்ளார்கள் என்பதை எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும்?" என்று கேட்டுள்ளார், ப.சிதம்பரம். இந்தியர்கள் கைகளில் இருக்கும் செல்போன்களின் எண்ணிக்கையால் இந்தியாவின் வறுமைக் கோட்டையே ஒரே நிமிடத்தில் அழித்துவிட்டார், அவர். பின்னே, ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் படித்த வல்லுநர் அல்லவா?

இந்தியாவில் 77 சதவீதம் பேர் நாளொன்றுக்கு ரூ.20 மட்டுமே வருவாய் ஈட்டுகின்றனர் எனும் விவரத்தைத் தந்தது, பாகிஸ்தான் அரசு அல்ல. எந்த அரசில் அமைச்சராக சிதம்பரம் இருக்கிறாரோ, அந்த மத்திய அரசின் தேசிய மாதிரி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில், மத்திய அரசால் அமைக்கப்பட்ட அமைப்பு சாராத் தொழில்களுக்கான தேசிய ஆணையம்தான் இந்த விவரத்தை வெளியிட்டது. அரசே ஒத்துக் கொண்ட இந்திய வறுமை பற்றிய புள்ளி விவரத்தை மறுதலிக்கிறார், இந்தப் பொருளாதாரப் புலி.

இந்த ஹார்வர்டு பொருளாதார மேதை சொன்ன செல்போன் எண்ணிக்கை பற்றிய வாதம், எவ்வாறு வக்கிரமானது என்பதை "சன்ஹதி" எனும் இணைய தளம் விளக்கி எழுதியுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் செல்போன்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்திருக்கிறது என்பது உண்மைதான். வோடஃபோன் நிறுவன அறிக்கையே இதனை உறுதி செய்கிறது. "ஒருவரிடம் செல்போனில் ஒரு நிமிடத்துக்குப் பேசுவதற்கு 1998-இல் ரூ.15.30 -ஆக இருந்த கட்டணம், 2010-இல் 68 பைசாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், மிகக் குறைந்த கட்டண அளவில் முன் கூட்டியே பணம் செலுத்திப் பேசும் (ப்ரீபெய்ட்) வசதிகளும், செல்போன் கருவியின் விலை ஆயிரம் ரூபாய்க்கும் கீழே இறங்கியதும், புது இணைப்பை வாங்கும் கட்டணம் குறைக்கப்பட்டதுமே செல்போன் சந்தை விரிவடைந்ததற்கான காரணம்" என்கிறது அந்த அறிக்கை. இதைத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்டுள்ள பட்டியலும் உறுதிப்படுத்துகிறது.

இது மட்டுமல்லாமல், செல்போன்களுக்கு அறிமுகப்படுத்தப்



படிப்பகம்

www.padippakam.com





கட்டணம் குறைக்கப்பட்டதால், செல்போன்களைப் பயன்படுத்தும் ஏழைகளான உதிரித் தொழிலாளர்கள்.

பட்ட மாதத் தவணை முறை, ஏழை மக்களின் வருமானத்துக்கு ஏற்புடையதாக இருந்தது. ப்ரீபெய்ட் திட்டத்தில் வாழ்நாள்வரைத் திட்டமும் (லைப்டைம்), ஒரே குழுமத்துக்குள் பேசினால் இலவசம் எனும் திட்டமுமே செல்போனை அனைவர் கைகளிலும் கொண்டு வந்தது. வோடஃபோன் அறிக்கையே, குறைந்தபட்சம் இணைப்பைத் தொடர இம்மக்கள் ரூ.10 செலுத்தினால் போதும் என்று சொல்லியிருக்கிறது.

கிராமப்புறத்தைவிட, நகர்ப்புறங்களில் செல்போனின் பரவல் 6 மடங்கு அதிகமென்றும், ஒட்டுமொத்த செல்போன் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கையில் நகரத்தினர் மட்டும் 80 சதம் என்றும் வோடஃபோனின் அறிக்கை சொல்கிறது. இவர்கள் தோராயமாக ஒருநாளைக்கு ரூ.20க்கும் குறைவாகவே (இருவர் இணைப்பு வைத்திருக்கும் குடும்பங்கள்) பேசுவதில் செலவிடுகின்றனர் என்றும் அந்த அறிக்கை சொல்கிறது.

செல்போன் கட்டண விகிதம் 10 சதம் அதிகரித்தால் கூட 23 சதவீத வாடிக்கையாளர்கள் இணைப்பைப் புறக்கணித்து விடுவர் என்கிறது அவ்வறிக்கை. தேவையின் அடிப்படையில் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் செல்போன்களை வைத்திருந்தாலும், ஒரு சிறு கட்டண உயர்வு கூட அவர்களின் செல்போன் பயன்பாட்டைக் குறைத்துவிடும் என்பது, பல செல்போன் நிறுவனங்கள் ஒத்துக் கொண்டிருக்கும் உண்மை.

உதிரித் தொழில்களில் ஈடுபடும் பெரும்பான்மை ஏழைகள் கவனமாகவும் சிக்கனமாகவும் செலவு செய்வர்கள். இதில் ஒரு பகுதியினர், செல்போன் இணைப்புகளுக்கான கட்டணம் குறைக்கப்பட்டதால், அதை உபயோகப்படுத்தத் தொடங்கியுள்ளனர். அதுவும் கூட, தமது வேலை சார்ந்த தேவைகளுக்கு மட்டும்தான் செல்போனை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர்.( இது குர்கானில் உள்ள அமைப்பு சாராத் தொழிலாளர்களின் நிலை பற்றி அண்மையில் வெளிவந்த ஆய்வுக் குறிப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது).

சிதம்பரம் சொல்வதைப் போல செல்போன் எண்ணிக்கையை வைத்து வறுமை இல்லை என்று முடிவுக்கு வருவதானால், தில்லிப் பெருநகரில் ஏழைகளே இல்லை என்று சொல்லிவிடலாம். ஏனெனில், இந்தியாவில் செல்போன் பெருக்கம் அதிகமாக இருப்பது தில்லியில்தான். 2007-இன் இறுதியில் பாகிஸ்தானில்தான் செல்போன் வைத்திருப்போர் விகிதம் (அப்போதே 50 சதவீதம்), இந்தியாவை விட அதிகமாக இருந்தது. இதன்மூலம் இந்தியாவை முந்திக்கொண்டு பாகிஸ்தான் வறுமையை ஒழித்துவிட்டது என்ற முடிவுக்கு வரமுடியுமா? ஆப்பிரிக்க நாடுகளில் மட்டும் 60 கோடி செல்போன் இணைப்புகள் உள்ளன. அதனால் அங்கு வறுமை ஒழிந்துவிட்டது எனச் சொல்ல முடியுமா?

சில செல்போன் நிறுவனங்கள் இணைப்பு பெற்ற பின், அதைத் தொடராமல் காலாவதியான இணைப்புகளையும்கூட கணக்கில் சேர்த்து தமது நிறுவனத்துக்கு அதிக வாடிக்கையாளர்கள் இருப்பதாகக் கணக்கு காட்டுகின்றன. சில மேட்டுக்குடியினர் தனது தனிப்பட்ட உபயோகத்துக்கென பத்துக்கும் மேற்பட்ட இணைப்புகளைக் கொண்டிருக்கின்றனர். சில நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு தாமே செல்போன் வாங்கிக் கொடுத்து வேலை வாங்குகின்றன. இவற்றையும் செல்போன் நிறுவனங்கள் தனிப்பட்ட பயனாளர்களின் கணக்கில் சேர்த்துக் காட்டுகின்றன. எனவே, செல்போன் நிறுவனங்கள் காட்டும் இத்தகைய கணக்குகளும் புள்ளி விவரங்களும் மிகைப்படுத்தப்பட்டவையாக உள்ளன. இருப்பினும், இப்புள்ளி விவரங்களைக் காட்டி ''செல்போன் குடியரசாக'' இந்தியா மாறிவிட்டது என்றும்,

**இந்தியர்கள் கைகளில் இருக்கும் செல்போன்களின் எண்ணிக்கையால் இந்தியாவின் வறுமைக் கோட்டையே ஒரே நிமிடத்தில் அழித்துவிட்டார் ப.சிதம்பரம்.**



படிப்பகம்

www.padippakam.com

**அனைவர் கையிலும் இன்று செல்போன் இருப்பதற்குக் காரணமே, கடந்த பத்தாண்டுகளில் பெருமளவில் குறைக்கப்பட்டிருக்கும் கட்டணம்தான் என்பதைப் பாமரர்கள் கூட ஒத்துக் கொள்வர்.**

வறுமை ஒழிந்து நாடு முன்னேறிவிட்டதாகவும் சிதம்பரத்தைப் போலவே ஊடகங்களும் சித்தரிக்கின்றன.

புள்ளிவிவரக் கணக்குகள் ஒருபுறமிருக்கட்டும். மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமை எவ்வாறு இருக்கிறது? விவசாயத்தின் அழிவினால், கிராமப்புற மக்கள் வாழ்விழந்து நகரங்களை நோக்கிப் பிழைப்பு தேடி ஓடி வருகின்றனர். நகரங்களில் இன்றைய சூழலில் அதிகளவு வேலை கிடைப்பது அமைப்புசாராத் தொழில்துறையில்தான். இந்தியாவில் அமைப்பு சாரா தொழிலாளர்களே 93 சதவீதமாகப் பெருமளவில் உள்ளனர். நகரங்களில் கட்டிட வேலை, உதிரியான தொழில்கள் செய்வோருக்கும், வேலைதேடும் இளைஞர்களுக்கும் செல்போன்கள் தவிர்க்கவியலாத தேவையாகி விட்டது. நான்கைந்து வீடுகளைப் பெருக்கிப் பாத்திரம் கழுவும் வேலை செய்யும் பெண்களுக்குக் கூட, இவர்களைப் பணிக்கு அமர்த்தியிருப்பவர்கள் அழைப்பதற்கும், கட்டளை இடுவதற்கும் செல்போன் இன்று அத்தியாவசியமாகி விட்டது.

மாதச் சம்பளத்துக்குச் சிறுவர்களை வீடுகளிலிருந்து பள்ளிக்கு ஏற்றிச் செல்லும் ஆட்டோ ஓட்டுநர்கள், மாதம் இரண்டாயிரம், மூவாயிரம் சம்பளத்துக்காக வீடு தோறும் ஏறி இறங்கி நுகர்பொருட்கள் விற்கும் விற்பனையாளர்கள், வீடுதோறும் தண்ணீர்க் குடுவைகள் விநியோகிப்போர் -என எல்லோருக்கும் அத்தியாவசியமாகிவிட்ட இந்த நவீனக் கருவி அனைவர் கையிலும் இன்று இருப்பதற்குக் காரணமே, கடந்த பத்தாண்டுகளில் பெருமளவில் குறைக்கப்பட்டிருக்கும் கட்டணமே என்பதைப் பாமரர்கள் கூட ஒத்துக் கொள்வர். இதனால் அவர்களுக்கு சராசரியாக மாதம் ரூ.200 செலவாகின்றது. இதற்காக அவர்கள் ஒருவேளை தேநீரைக் குறைத்துக் கொள்கின்றனர். செல்போன் கட்டணம் அதிகமாகி விட்டால், ஒரு வேளை உணவைக்கூட குறைக்கும் நிலையில்தான் அவர்கள் வாழ்க்கை உள்ளது.

சென்னை போன்ற பெருநகரங்களிலும் சிறு நகரங்களிலும் பெருகி வரும் சேவைத்துறை சார்ந்த சிறு நிறுவனங்களில் வேலை கிடைக்க வேண்டுமானால் செல்போனும், மோட்டார் சைக்கிளும் வைத்திருப்பது முன்நிபந்தனை ஆக்கப்பட்டிருப்பதும், அந்த வேலையில் கிடைக்கும் குறைந்தபட்ச சம்பளமே மூவாயிரம் ரூபாய்தான் என்பதும் 'உலகப் பொருளாதார மேதை' சிதம்பரத்துக்குத் தெரியாதா? அந்த வேலைகள் செய்து வரும் இளைஞர்கள் என்ன, வறுமைக்கோட்டுக்கு மேலுள்ளவர்களா?

எண்பதுகளில் வறுமையை ஒழிப்போம் என்று காங்கிரசார் முழக்கமிட்டார்கள். தொண்ணூறுகளில் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு மாறிய பின்னர், அரசின் நலத் திட்டங்களை உலக வங்கிக் கட்டளைப்படி ஒழித்துக் கட்ட ரேசன் அட்டைகளை பச்சை என்றும், சிவப்பென்றும் வகைப்படுத்தி வறுமையை அளவிட்டுப் புள்ளிவிவர மோசடி செய்து ஏழைகளின் எண்ணிக்கையை குறைத்தார்கள். கூடிய விரைவில் செல்போன் எண்ணிக்கையைக் கூட இவர்கள் அளவுகோலாக்கி, இந்தியாவில் ஏழைகளே இல்லை என்று சொல்லி, சுருக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நலத் திட்டங்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாகக் கைகழுவவும் செய்வார்கள்.




அரசு தொலைபேசி நிறுவனமான பி.எஸ்.என்.எல்.-இன் கட்டணக் குறைப்பு விளம்பரம்.

கடந்த பத்தாண்டுகளில், ஆண்டொன்றுக்கு இந்திய மக்கள் உண்ணும் உணவின் மொத்த அளவு, 1940-களில் வங்கப் பஞ்சத்தின்போது இருந்த அளவிற்குத் தாழ்ந்திருப்பதாகப் பொருளாதார மேதை அமர்த்யா சென் குறிப்பிட்டிருப்பதும் உண்மை. கிலோ ஒரு ரூபாய்க்கு கிடைக்கும் புளுத்த அரிசியை வாங்கித்தான் தமிழ் நாட்டின் பெரும்பாலான ஏழைகள் வயிற்றை நிறைக்கின்றனர் என்பதும் உண்மை. இன்று 60 கோடி பேரிடம் செல்போன்கள் உள்ளன என்பதும் உண்மை. ஏழை மக்களின் கையிலுள்ள செல்போன்களைக் காட்டி, இந்தியாவில் வறுமை இல்லை என வக்கிரமாகச் சொல்லும் சிதம்பரத்தை நாட்டு மக்கள் இன்னமும் விட்டு வைத்துள்ளார்கள் என்பதும் உண்மை.

• கதிர்



படிப்பகம்




ஓசூரில்...

# இனவெறி பாசிச ராஜபக்சே கும்பலுக்கும் இந்திய மேலாதிக்கத்துக்கும் எதிராக...

## தமிழகத்திலும் இலண்டனிலும் ஆர்ப்பாட்டங்கள்

இலங்கையில் ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்த இனவெறி பயங்கரவாத ராஜபக்சே கும்பல், இப்போது ஈழத் தமிழ் பகுதிகளை ஆக்கிரமித்து இராணுவ முகாம்களை நிறுவி சிங்களக் குடியேற்றத்தை நடத்தி வருகிறது. முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் விடுவிக்கப்பட்டு மீள்குடியமர்த்தப்படவில்லை. சிறையிடப்பட்டுள்ள அரசியல் கைதிகளும் ஊடகவியலாளர்களும் இன்னமும் விடுவிக்கப்படவுமில்லை.

ஈழப்போரைத் துணைநின்று வழிநடத்தி போர்க்குற்றவாளி ராஜபக்சே கும்பலை ஆதரித்து நிற்கும் இந்திய மேலாதிக்க அரசோ,ஈழத்தமிழரின் 'மறுவாழ்வு'க்கு நிதியளித்து மேற்பார்வையிட்டு வருவதாகக் கூறிக்கொண்டு இன்னொருபுறம், வளர்ச்சித் திட்டம் என்கிற பெயரில் ஈழத் தமிழ்ப்பகுதிகளை ஆக்கிரமிக்கக் கிளம்பியுள்ளது. இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் கைகாட்டும் இடங்களை ராஜபக்ச அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கிறார். ராஜபக்சே கைகாட்டும் இடங்களில் இந்திய அரசு ஈழத் தமிழர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப் போகிறது.

இத்தகைய சூழலில், தமிழின அடையாளத்தையே அழித்து ஆதிக்கம் செய்யத் துடிக்கும் போர்க்குற்றவாளி ராஜபக்சே கும்பலைத் தண்டிக்கக் கோரியும், இந்திய மேலாதிக்க அரசின் சூழ்ச்சிகள்-சதிகளை தோலுரித்துக் காட்டியும், இலங்கை இனவெறி பாசிச அரசுக்கும் அதனைப் பாதுகாக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிராக அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தையும் ஜனநாயக சக்திகளையும் அணிதிரண்டு போராட அறைகூவியும் ஆகஸ்ட் 21 அன்று தமிழகமெங்கும் ம.க.இ.க, வி.வி.மு, பு.மா.இ.மு, பு.ஜ.தொ.மு, ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தின. சென்னை, திருச்சி, கோவை, நாமக்கல்-பள்ளிப்பாளையம், ஓசூர், தஞ்சை, வேலூர், கடலூர் - எனத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் கொட்டும் மழையிலும் விண்ணதிரும் முழக்கங்களுடன் உணர்வு பூர்வமாக நடந்த இந்த ஆர்ப்பாட்டங்களை, திரளான உழைக்கும் மக்கள் வரவேற்று ஆதரித்தனர்.

இதே நாளில் ''புதிய திசைகள்'' எனும் ஈழத் தமிழர் அமைப்பு சார்பாக பல்வேறு அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு இலண்டனில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சுமார் மூன்று மணி நேரம் இலண்டன்-வெஸ்ட்மினிஸ்டரில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தவரும் புரட்சிகர-ஜனநாயக சக்திகளும் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் முன்னணியாளர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் கண்டன உரையாற்றினர்.

ஏகாதிபத்தியவாதிகளும் மேலாதிக்கவாதிகளும் இனவெறி பாசிஸ்டுகளுமான எதிரிகள் ஓரணியில் திரண்டு நிற்கும் இன்றைய உலகமயக் காலகட்டத்தில், போராடும் சக்திகள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என்ற உணர்வூட்டிய இந்த ஆர்ப்பாட்டமும் அதற்கான முயற்சியும், ஈழத் தமிழர்களிடையே உவப்பூட்டிப் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது. போராட்டக் குரல் கண்டங்களைக் கடந்து எங்கும் எதிரொலித்தது.

- பு.ஜ.செய்தியாளர்கள்.




கோவையில்...




இலண்டனில்...

www.padippakam.com

## நகரமயமாகும் தமிழகம்:

# நரகத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சல்

**இலவசத் திட்டங்களின் பேரிரைச்சல்; நகரமயமாக்கத்தின் ஒளிவெள்ளம்– இவற்றின் பின்னே சத்தமின்றிக் கொன்றொழிக்கப்படுகிறது தமிழகத்தின் விவசாயம்.**

நிலத்தடியில் நீர் இல்லாத பூமி. நினைத்த நேரத்தில் கண்ணாமூச்சி காட்டும் மின்சாரம். இவற்றுக்கிடையில் சிக்கித்தவிக்கும் விவசாயிகளுக்கு கருணாநிதி அறிவித்திருக்கும் சுதந்திர தினப் பரிசு - இலவச மின்சார மோட்டர் பம்புசெட்டுகள்!

குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற திணைகள் மருவி அனைத்தும் பாலையையாய் மாறிக்கொண்டிருக்கும் தமிழகத்தில், தமிழ் மரபின் பெருமையை நினைவூட்டுவதற்காக எம்.எஸ்.சாமிநாதனின் பொறுப்பில் கருணாநிதி அமைக்கவிருக்கும் அருங்காட்சியகங்களுக்குப் பெயர் - ஐந்திணைப் பூங்காக்கள்!

இருபது ஆண்டுகளில் தமிழகத்தின் பயிரிடும் பரப்பு 90 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 70 இலட்சம் ஹெக்டேராகக் குறைந்து கொண்டே வந்தபோதிலும், அதனினும் வேகமாகக் கிராமப்புற உழைப்பாளர்களின் எண்ணிக்கை வீழ்ந்து வருவதனால், விதைப்புக்கும் அறுப்புக்கும் புழக்கத்துக்கு வந்து கொண்டிருக்கும் எந்திரங்கள்!

விவசாயத்தின் அழிவும், சூறைக்காற்றாய் சுழன்றடிக்கும் நகரமயமாக்கமும், தமிழகத்தின் கிராமத்து இளைஞர்களை வாரிக்கொண்டு வந்து நகர்ப்புறத்தில் குவித்துக் கொண்டிருக்க, உறுதியற்ற ஓலைக் குடிசைகளை அகற்றி விட்டு ஊரகப் பகுதிகளில் கருணாநிதி கட்டித் தரவிருக்கும் 'உறுதியான' கான்கிரீட் வீடுகள்.

மன்மோகன் சிங் அரசால் தொடுக்கப்படும் புதிய தாராளவாதக் கொள்கைகளின் தாக்குதலும், அதன் கூட்டணிக் கட்சியாகவும் கூட்டுப் பங்குக் கம்பெனியாகவும் விரிவடைந்து வரும் திருக்குவளை முன்னேற்றக் கம்பெனியின் சாம்ராச்சிய நலன்களும், ''ஒரு ரூபாய் அரிசி-கலர் டிவி'' யில் தொடங்கி, பிற ஆளும் வர்க்கக் கட்சிகளே அசந்து வாய்பிளக்கும் வண்ணம் மக்கள் மீது அடுக்கடுக்காக கருணாநிதி எய்து வரும் இலவச ஏவுகணைகளும், தமிழகம் முன்னேறுகிறதா, பின்னேறுகிறதா என்று புரிந்து கொள்ள முடியாத புதிரானதொரு சித்திரத்தைத் தோற்றுவிக்கின்றன.

ஸ்டார் ஹெல்த் இன்சூரன்சுக்குப் பாலிசிதாரர்கள், தனியார் மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் என்ற இரண்டு மாங்காய்களை வீழ்த்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கும் 'கல்'லின் பெயர் கலைஞர் காப்பீடு. உலக வங்கியின் ஆணைக்கு இணங்க நாளை இலவச மின்சாரத்தை ஒழித்துக் கட்டுவதற்காக இன்று ஏவப்படும் ஆயுதத்தின் பெயர் இலவச மின் மோட்டார். விவசாயிகள் நகர்ப்புறத்திலேயே குடியேறிவிடுவதைத் தடுக்க, அவர்களுடைய ஒரு காலை இழுத்து கிராமப் புறத்தில் உறுதியாகக் கட்டிப்போடுவதற்கு கான்கிரீட் வீடுகள்.

கான்கிரீட் வீடுகளை உருவாக்கப்போகும் கட்டுமானக் கம்பெனிகள், சிமென்டுக் கம்பெனிகள் யார்? மின்சார மோட்டார்களை வழங்கப்போகும் கம்பெனி எது? எடைக்கு எடை அரசு மானியத்தை வாங்கிக் கொண்டு, நோக்கியா, ஹூண்டாய், செயின்ட் கோபெய்ன் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தளபதிகளுக்கும் கனிமொழிகளுக்கும் அழகிரிகளுக்கும் வழங்கியிருக்கும் பங்குப் பத்திரங்களின் எடை எவ்வளவு? இந்த உண்மைகளை யாரும் எக்காலத்திலும் அறிய இயலாது.

கொள்ளையில் கூட்டுக் குடும்பமாகவும், பங்கு பிரிப்பதில் தனிக் கம்பெனிகளாகவும் பிரிந்தும் இயங்கும் திருக்குவளைக் கொள்ளைக் கூட்டத்தின் ஆதாயத்தையும், தனியார்மய-தாராளமயக் கொள்கைகள் தரகு முதலாளிகளுக்கு வாரி வழங்கும் இலாபத்தையும், 'இலவசத் திட்டங்கள்' என்ற இனிப்பு மிட்டாய்களுக்கு உள்ளே ஒளித்து வழங்குகின்ற கலையில், கலைஞர் டாக்டர் பட்டம் பெற்றுவிட்டார். டாக்டர் புரட்சித் தலைவி உள்ளிட்ட பிற எதிர்க்கட்சி 'டாக்டர்கள்' செய்வதறியாமல் திகைக்கிறார்கள்.

தங்களுடைய முன்னேற்றம் மற்றும் தரகு முதலாளிகளின் முன்னேற்றத்தின் விளைபொருளாக தமிழகமும் முன்னேறித்தான் ஆகவேண்டும் என்று மு.க.ஸ்டாலின் கருதுவதால், ''தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக ஆக்காமல் ஓயமாட்டேன்'' என்று சூசகமாகச் சபதம் செய்கிறார்.

மொத்த மாநில உற்பத்தியில் (GSDP) தொழில்துறையின் பங்கு மிக அதிகமாக இருக்கும் மாநிலமான



படிப்பகம்

www.padippakam.com

மகாராட்டிரத்துக்கு அடுத்தபடி இரண்டாவது இடத்தை தமிழகம் பிடித்திருப்பதாகவும், தொழில்துறை வேலைவாய்ப்பின் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தை எட்டியிருப்பதாகவும், சிறப்புச் சலுகைகள் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் தமிழகம் ஈர்த்திருக்கும் அந்நிய முதலீடு ரூ.60,000 கோடி என்றும், ஆக்ஸ்போர்டு அனலடிக்காவின் ஆய்வின்படி அந்நிய முதலீட்டாளர்களைப் பெரிதும் கவர்ந்திழுக்கும் மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம்தான் என்றும், பெருமை பொங்கப் பேசியிருக்கிறார் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் (எகனாமிக் டைம்ஸ், மார்ச், 10, 2010). இந்தியத் தரகுமுதலாளிகள் சங்கமான எஃப்.ஐ.சி.சி.ஐ. வெளியிட்டிருக்கும் 'சாதகமான தமிழகம்' (Advantage Tamilnadu) என்ற -லை வெளியிட்டு தளபதி ஆற்றிய உரை இது என்பது குறிப்பிடத்தக்கது.



ஒரகடம் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைந்துள்ள அமெரிக்காவைச் சேர்ந்த சான்மினா-எஸ்.எச்.ஐ என்ற மின்னணுப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையைத் திறந்து வைக்கும் தமிழகத் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின்.

மருமகனின் பெருமைக்கு அடித்தளம் அமைத்தவர் மாமன் மாறன்தான் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. வாஜ்பாயி அரசில் அவர் வர்த்தகத் துறை அமைச்சராக இருந்தபோதே இதற்கான வழியை வகுத்து விட்டார். 2005-இல் மைய அரசின் சிறப்புப் பொருளாதார மண்டலச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னரே, 2003-ஆம் ஆண்டிலேயே சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கான கொள்கையை வகுத்த மாநிலம் தமிழகம். சென்னைக்கு அருகில் உள்ள மகிந்திரா உலக நகரம்தான் இந்தியாவில் இயங்கத் தொடங்கிய முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம்.

தமிழகத்தில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் 50 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுடன், அமையஇருப்பனவற்றையும் சேர்த்து, மொத்தம் 139 சி.பொ.மண்டலங்களுக்கான பணிகளைத் தீவிரமாக முடுக்கி விட்டிருக்கிறது தி.மு.க அரசு. இவற்றுக்காக விவசாயிகளிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்தி ஒப்படைக்கும் பணி தமிழக அரசுக்குச் சொந்தமான சிப்காட், டிட்கோ ஆகிய நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்நிறுவனங்கள் இதுவரை சுமார் 25,000 ஹெக்டேர் நிலத்தை விவசாயிகளிடமிருந்து வாங்கியிருக்கின்றன. விவசாய விளைபொருளை அரசாங்கம் கொள்முதல் செய்வதைத்தான் உலக வர்த்தகக் கழகத்தின் விதிகள் தடை செய்திருக்கின்றன என்பதால், விளைநிலத்தையே கொள்முதல் செய்யும் நடவடிக்கையில் அரசு முழுமூச்சாக இறங்கியிருக்கிறது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மட்டுமின்றி, நீர்வளமிக்க பகுதிளை பண்டைக்காலத்தில் அக்கிரகாரங்களும் சர்வமானியங்களும் பிரம்மதேயங்களும் ஆக்கிரமித்ததைப் போல, இன்று ஆற்றங்கரைகள், ஏரிக்கரைகளை அடுக்கு மாடி அபார்ட்மென்டுகளும், பெரும் பணக்காரர்களுக்கு மட்டுமே உரிய மதில்சூழ் குடியிருப்புகளும் (Gated communities) ஆக்கிரமித்து வருகின்றன.

விளைநிலங்களை ஆக்கிரமித்து முடிவின்றி விரிந்து கொண்டே செல்லும் நகரங்கள், நட்சத்திர கேளிக்கை விடுதிகள், கட்டுமானத் தொழிலின் பேய்ப்பசிக்குத் தீனி போடுவதற்காகப் பெருகிவரும் செங்கல் சூளைகள், நெடுஞ்சாலைகளின் ஓரத்தில் சீரான இடைவெளியில் விளைநிலங்களை வளைத்துப் போட்டிருக்கும் மெட்ரிக் பள்ளிகள், சுயநிதிக் கல்லூரிகள் - என தமிழகத்தின் விளைநிலங்கள் வெகுவேகமாக விழுங்கப்படுகின்றன.

2001-ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி நகரமயமாக்கத்தில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடத்தில் இருந்தது. அன்றைய கணக்கின்படியே தமிழ்நாட்டின் மக்கட்தொகையில் 44.04% நகரமயாகியிருந்தது. இன்று அது 50 விழுக்காட்டையும் விஞ்சியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

போராட்டமோ இரைச்சலோ இல்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமான சில எதிர்ப்புகளுடன், விவசாயத்திலிருந்து நெட்டித் தள்ளப்பட்டு, விதி விட்ட வழி என்று நகர்ப்புறங்களை நோக்கி மவுனமாக நகர்ந்து கொண்டிருக்கிறார்கள் தமிழக விவசாயிகள். சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காகவும் பன்னாட்டு நிறுவனங்களுக்காகவும் விவசாய நிலத்தைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு, பிற மாநிலங்களில் தோன்றியதைப் போன்ற தன்னெழுச்சியான எதிர்ப்பை தமிழக விவசாயிகளிடம் நாம் காணமுடியவில்லை.

**தமிழக விவசாயிகளை கிராமங்களிலிருந்து வெளியேற்றுவதற்கு, சல்வாஜூடும் போன்ற ஆயுதம் தரித்த கூலிப்படைகள் தேவைப்படவில்லை. புதிய பொருளாதாரக் கொள்கை அமைதி வழியில் அதனைச் சாதித்திருக்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com

இந்த எதிர்ப்பின்மைக்குக் காரணம், தொழில்மயம் எனும் முன்னேற்றப் பாதையில் செலுத்தப்படுகிறோம் என்று விவசாயிகள் கொண்டிருக்கும் நம்பிக்கையல்ல; விவசாயம் இனி நமக்கு சோறு போடாது என்ற அவநம்பிக்கை. எகனாமிக் அண்டு பொலிட்டிகல் வீக்லி வார இதழில் (பிப்ரவரி, 6, 2010) எம்.விஜயபாஸ்கர் எழுதியுள்ள ஒரு ஆய்வுக்கட்டுரை, தமிழகத்தில் நாம் காணும் இந்நிகழ்ச்சிப்போக்கின் பின்புலத்தை ஆராய்வதுடன், அவசியமான பல தரவுகளையும் வழங்குகிறது.

• • •

நீர்வளமும் இரு போகம் அல்லது முப்போக விளைச்சலும், வேலைவாய்ப்புக்கு விவசாயம் தவிர வேறு தொழிலற்ற சார்பு நிலையும் கொண்ட சிங்கூர், நந்திகிராமம் போன்ற பகுதிகளின் சிறு- நடுத்தர விவசாயிகளும், முதலாளித்துவச் சந்தையின் சூறையாடலுக்கு நேரடியாக ஆட்படாமல், காடுகளையும் தற்சார்பு விவசாயத்தையும் இன்னமும் சார்ந்திருக்கும் சட்டீஸ்கர், ஜார்கண்ட் பழங்குடி மக்களும் தமது நிலத்தை விட்டு வெளியேற மறுக்கிறார்கள். புதிய தாராளவாதக் கொள்கையினால் ஊனும் உதிரமும் உறிஞ்சி எடுக்கப்பட்ட விதர்பாவின் பருத்தி விவசாயிகளோ வெளியேறும் வழி தெரியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள். பாசன வசதி இன்றி, நிலத்தடி நீரின்றி, பம்புசெட்டுக்கு மின்சாரமின்றி, அரசுக் கொள்முதல் இன்றி, விளைவித்த பொருளுக்கு விலையும் இன்றி விவசாயத்தில் நிற்கவும் முடியாமல் காலை எடுக்கவும் முடியாமல் கடந்த 20 ஆண்டுகளாகவே தவித்துக் கொண்டிருந்த தமிழக விவசாயிகள், மெல்ல மெல்ல விவசாயத்திலிருந்து வெளியேறி வருகிறார்கள்.

தமிழக விவசாயிகளை கிராமங்களிலிருந்து வெளியேற்றுவதற்கு, சல்வாஜூடும் போன்ற ஆயுதம் தரித்த கூலிப்படைகள் தேவைப்படவில்லை. 1990-களின் துவக்கம் முதல் அமல்படுத்தப்பட்டு வரும் புதிய பொருளாதாரக் கொள்கைகள் அமைதி வழியில் அதனை சாதித்திருக்கின்றன.

நாடு முழுவதும் நிகழ்ந்து வரும் விவசாயத்தின் அழிவு என்ற நிகழ்ச்சிப்போக்கில் தமிழகம் பிடித்திருக்கும் முதலிடம், தற்போது நிகழ்ந்துவரும் நகரமயமாக்கத்திற்கு முக்கியமான அடித்தளமாக அமைகிறது. 1993-94-இல் தமிழகத்தின் மொத்த மாநில உற்பத்தியில் (GSDP) விவசாய வருவாயின் பங்கு 24.82%. 2005-ஆம்

**கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கும் இந்தச் சாலைகள், விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கின்றன.**



ஆண்டில் இது 13.3% என வீழ்ந்தது. இந்திய மாநிலங்களிலேயே மொத்த உற்பத்தியில் விவசாயத்தின் பங்கு ஆகக் குறைவாக இருக்கும் மாநிலம் கேரளம். தமிழகம் அதற்கு அடுத்த இடத்தில் இருக்கிறது. புவியியல் அமைப்பிலும் பயிரிடும் பரப்பிலும் தமிழகத்தோடு எவ்விதத்திலும் ஒப்பிட முடியாத கேரளத்துடன் கடைசி இடத்திற்குத் தமிழகம் போட்டி போடுகிறது.

2002-03 கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் சராசரியாக ஒரு உழவனின் குடும்பம் விவசாயத்தில் முதலீடு செய்த தொகை ஆண்டொன்றுக்கு ரூ. 8597. விளைபொருளை விற்று எடுத்த தொகை ரூ. 7908. அந்த விவசாயியின் குடும்பம் ஒரு ஆண்டு முழுவதும் தன் நிலத்தில் சிந்திய வியர்வைக்கும் உழைப்புக்குமான ஊதியம் இதில் கணக்கிடப்படவில்லை. அவை அனைத்தும் விழலுக்கு இறைத்த நீர். இந்தப் புள்ளி விவரத்தின்படி ஒரு விவசாயக் குடும்பம், ஊதியமே இல்லாமல் ஒரு ஆண்டு காலம் உழைத்திருப்பதுடன், கையிலிருந்து சுமார் 700 ரூபாயையும் விவசாயத்தில் தொலைத்திருக்கிறது.

நட்டமடைந்த இந்தத் தொகையை அவர்கள் ஈட்டியது எப்படி? ஒரு ஆண்டுகாலம் அந்தக் குடும்பம் உண்டு, உயிர்வாழ்ந்தது எப்படி? சராசரியாக ஒரு இந்திய உழவனின் குடும்பம் ஈட்டுகின்ற ஆண்டு வருவாயில் 45% விவசாயத்திலிருந்து பெறப்படுகிறது என்கிறது அனைத்திந்தியக் கணக்கீடு. ஆனால் தமிழகத்திலோ ஒரு உழவன் தனது ஆண்டு வருமானத்தில் 30 விழுக்காட்டை மட்டுமே விவசாயத்திலிருந்து பெறுகிறான். விவசாயம் சாராத பிற தொழில்களில் ஈடுபட்டுத்தான் ஒரு தமிழக விவசாயி தனது ஆண்டு வருமானத்தின் 70 விழுக்காட்டை ஈட்டி வருகிறான்.

கடன்பட்ட விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கையில் நாட்டிலேயே முதல் இடத்தில் ஆந்திரம் இருக்கிறது. தமிழகம் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. தமிழகத்தின் 75% கிராமப்புறக் குடும்பங்கள் கடன் வலையில் சிக்கியிருக்கின்றன. புதிய தாராளவாதக் கொள்கை விவசாயத்தின் மீது தொடுக்கும் தாக்குதல் நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்குப் பொதுவானதாக இருந்தாலும், தமிழக விவசாயியைக் கடனில் அமிழ்த்துவதில் தண்ணீர் முக்கியப் பாத்திரமாற்றுகிறது.

தமிழகத்தின் தற்போதைய மொத்தப் பாசனப்பரப்பில் 44% கிணற்றுப் பாசனத்தை நம்



படிப்பகம்

www.padippakam.com

பியே இருக்கிறது. பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து 1970 முதல் நாடெங்கும் பரவிய 'பம்புசெட் புரட்சி'யிலும், அனைத்திந்திய அளவில் ஆந்திரத்துக்கு அடுத்தபடி இரண்டாவது இடத்தில் தமிழகமே இருக்கிறது. பாசனப் பராமரிப்பு மற்றும் மேலாண்மைப் பணிகளிலிருந்து அரசு விலகிக் கொண்டதன் விளைவாக, விவசாயத்துக்குத் தேவையான தண்ணீரைப் பெறுவது விவசாயியின் சொந்தப் பொறுப்பாக மாற்றப்பட்டுவிட்டதனால் தமிழகத்தில் தற்போது இயங்கும் விவசாய பம்புசெட்டுகள் 19 இலட்சம். இவற்றில் 15 இலட்சம் பம்புசெட்டுகள் சிறு விவசாயிகளுக்குச் சொந்தமானவை (தினமணி, 17.8.2010). ஏற்கெனவே வற்றிவரும் நிலத்தடி நீரை, நகரமயமாக்கம் மற்றும் தொழில்மயமாக்கம் தோற்றுவித்துள்ள வகைதொகையற்ற நிலத்தடி நீர்க் கொள்ளை மேலும் தீவிரப்படுத்தியிருப்பதால், பல இடங்களில் 1000 அடிக்கும் கீழே சென்று கொண்டிருக்கும் கிணறுகள் விவசாயிகளைக் கடன் குழியில் தள்ளுவதில் பெரும் பாத்திரம் ஆற்றியிருக்கின்றன.




அனைத்திந்தியப் புள்ளிவிவரப்படி 1991-இல் விவசாயக் கடன்களில் 75% வங்கிகளின் மூலம் பெறப்பட்டவையாக இருந்தன. கடந்த 20 ஆண்டுகளில் வங்கிகள் விவசாயிகளைப் புறக்கணித்து வருவதால், கந்துவட்டிக்காரர்களின் பிடி அதிகரித்திருக்கிறது. விதை, உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட விவசாய உள்ளீடு பொருட்களின் விலை பன்மடங்கு அதிகரித்த போதிலும், விவசாய விளைபொருட்களின் விலையை அதற்கேற்ப உயர்த்த அரசு மறுப்பதும், தானியக் கொள்முதலிலிருந்து அரசு படிப்படியாக விலகிக் கொண்டு வருவதும் விவசாயிகள் மீதான கடன் சுமையை அதிகரிப்பதில் பெரும் பாத்திர மாற்றியிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை, மொத்த தானிய விளைச்சலில் ஆறில் ஒரு பகுதியை மட்டுமே அரசு கொள்முதல் செய்வதால், விவசாயிகளின் மீது கந்துவட்டி, கமிசன் மண்டிக்காரர்களின் பிடி மேலும் இறுகியிருக்கிறது.

நம்ப வைத்துக் கழுத்தறுக்கும் முதலாளித்துவச் சந்தையின் சூதாட்டத்தில், ''இந்த முறை விலை கிடைக்கும், அடுத்த முறை விலை கிடைக்கும்'' என்று நம்பிச் சூதாடி மென்மேலும் கடன் வலையில் சிக்கிய தமிழக விவசாயிகள், இந்தச் சூதாட்டத்திலிருந்து விலகுவதற்கே திரௌபதையைப் பணயம் வைக்கிறார்கள். கடனிலிருந்து தப்ப நிலத்தை விற்கிறார்கள்.

நிலமற்ற விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கையிலும் ஆந்திரமும் தமிழகமுமே முன்னணியில் இருக்கின்றன. 2003-04 கணக்கீட்டின்படி இந்திய அளவில் நிலமற்ற விவசாயக் குடும்பங்கள் கிராமப்புற மக்கள் தொகையில் 31%. தமிழகத்திலோ நிலமற்ற விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 55.43%. விவசாயத்தின் அழிவு, நிலமற்ற கூலி விவசாயிகளை மட்டுமின்றி, சிறு விவசாயிகளையும் கூட நகர்ப்புறங்களை நோக்கி விரட்டுகிறது.

1990-களின் பிற்பகுதியில் தொடங்கி இன்றுவரை விவசாயத்தில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை தொடர்ச்சியாக வீழ்ந்து வரும் மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம் மட்டும்தான். ஐந்தாண்டுகளுக்கு முந்தைய கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் கிராமப்புற ஆண் உழைப்பாளர்களில் 40% பேர் விவசாயம் அல்லாத தொழில்களிலேயே ஈடுபட்டு வருகின்றனர். மாநிலத்தின் மொத்த வேலைவாய்ப்பில் விவசாயத்தின் பங்கு மிகவும் குறைவாக இருக்கும் மாநிலம் கேரளம். தேசிய அளவில் தமிழ்நாடு அதற்கு அடுத்த இடத்தில் இருக்கிறது.

பிற மாநிலங்களைக் காட்டிலும் பரவலான அளவில் நகரங்களையும் சிறு நகரங்களையும் பெற்றிருக்கிறது தமிழகம். ஒரு சதுர கி.மீ க்கு 0.68 கி.மீ நீள சாலை என்பது இந்திய சராசரியாக இருக்கும் நிலையில், தமிழகத்திலோ இது 1.6 கி.மீ ஆக இருக்கிறது. கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கும் இந்தச் சாலைகள், விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கின்றன. தனது மறைமுகச் சுரண்டலால் நிலவளத்தைப் பறித்துக் கொண்ட முதலாளி வர்க்கம், விற்பதற்கு உழைப்பைத் தவிர வேறு ஏதுமற்றவர்களாகப் பரிதவிக்கும் இந்த மனிதவளத்தை, சாலைகள் எனும் கால்வாய்கள் வழியே நகர்ப்புறத்தை நோக்கிப் பாய்ச்சுகிறது.

'சாதகமான தமிழகம்' என்ற இந்தியத் தரகு முதலாளிகளின் கணிப்பில் தவறில்லை. தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் பாதகமாக இருந்தால் மட்டுமே ஒரு கொள்கை முதலாளி வர்க்கத்துக்குச் சாதகமாக அமைய முடியும் என்ற உண்மையை மறைத்து, எல்லா வர்க்கங்களுக்கும் தன்னுடைய அரசு தந்தை வழிப் பரோபகாரியாக விளங்குவதைப் போன்றதொரு பிரமையை கருணாநிதி தோற்றுவிக்கிறாரே, அதனைப் புரிந்து கொள்ளாமல் மயங்குவதில்தான் தமிழகத்தின் தவறு இருக்கிறது.

**(தொடரும்)**

● மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

# நீதிபதிகள்:

# ஊழல் பெருச்சாளிகள்!

**ஊழல் குற்றம் சுமத்தப்பட்ட நீதிபதிகளைத் தப்பவைப்பதில்தான் நீதிமன்றங்கள் முனைப்புக் காட்டுகின்றன.**

உ.பி. மாநிலத்தின் காசியாபாத் மாவட்டக் கருவூல அதிகாரிகளும் நீதிபதிகளும் கூட்டுச் சேர்ந்து, கடைநிலை அரசு ஊழியர்களின் சேமநல நிதியிலிருந்து ரூ.34.56 கோடியைச் சட்டவிரோதமாக மோசடி செய்து சுருட்டி ஏப்பம் விட்டனர். கருவூல அதிகாரியான அஷுடோஷ் அஸ்தானா என்பவனுடன் சேர்ந்து போலி ஆவணங்களைத் தயாரித்து, நீதிபதிகளும் கருவூல அதிகாரிகளும் இம்மோசடிக்கு உடந்தையாக இருந்து பணத்தைப் பங்குபோட்டுக் கொண்டுள்ளனர். 2001-இலிருந்து 2008-வரை நடந்துள்ள இந்த மோசடி மெதுவாகக் கசிந்து ஏப்ரல் 2008-இல் அஸ்தானா கைது செய்யப்பட்டான். அவனுடைய வாக்குமூலத்தின் அடிப்படையில் 82 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீதிபதிகளுக்கு உரிய கப்பம் செலுத்தியதோடு, அவர்களுக்கு விலையுயர்ந்த பரிசுப் பொருட்களையும் அஸ்தனா அளித்துள்ளான். இதற்கான ரசீதுகளும் அஸ்தானாவிடம் இருந்துள்ளன. தனது வாக்குமூலத்தில் அவன் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி தாருண் சட்டர்ஜி, தற்போது ஓய்வு பெற்றுள்ள சுபாஷ் அகர்வால், சந்த் நிகாம் உள்ளிட்ட அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள் - என 33 நீதிபதிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளான். ஆனாலும், இந்நீதிபதிகள் குற்றவாளிகளாக வழக்கில் சேர்க்கப்படவில்லை. நீதிபதிகள் கூட்டுச் சேர்ந்து நடத்திய இம்மோசடி தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி நகர்சிங் யாதவ் என்ற வழக்குரைஞரும் காசியாபாத் வழக்குரைஞர்கள் சங்கமும் உயர் நீதிமன்றத்தை அணுகின. அம்மனுவை உ.பி.யின் அலகாபாத் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்ததால், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

இந்தியத் தலைமை நீதிபதியாக ஜே.எஸ்.வர்மா இருந்தபோது, நீதிபதிகளுக்கான நன்னடத்தை விதிகள் வகுக்கப்பட்டு, நீதிபதிகள் தமது சொத்துக் கணக்கை தலைமை நீதிபதியிடம் அளிக்க வேண்டும் என்றும் இந்த விவரங்கள் இரகசியமாக வைக்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், நீதிபதிகளைச் சொத்துக் கணக்கு காட்டச் சொல்வது சுயமரியாதைக்கு இழுக்கு என்றும், நீதிபதிகளின் செயல்பாடுகள் குறித்த விவரங்களைப் பெற தகவல் அறியும் உரிமைச் சட்டம் பொருந்தாது என்றும் அன்றைய இந்தியத் தலைமை நீதிபதியாக இருந்த கே.ஜி.பாலகிருஷ்ணன் கூறினார்.

அப்பேர்பட்ட கே.ஜி.பாலகிருஷ்ணன் தலைமையிலான உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட அமர்வின் முன் 2008-ஆம் ஆண்டு ஜூலையில் காசியாபாத் நீதிபதிகளின் ஊழல் வழக்கு விசாரணைக்கு வந்தது. விசாரணைக்காகக் கேட்க விரும்பும் கேள்விகளை சி.பி.ஐ. அதிகாரிகள் எழுத்து மூலம் தர வேண்டும் என்றும், அதற்குக் குற்றம் சாட்டப்பட்ட நீதிபதிகள் எழுத்து மூலம் அளிக்கும் பதில்களின் அடிப்படையிலேயே விசாரணையைத் தொடர வேண்டும் என்றும் இந்த உச்ச நீதிமன்ற அமர்வு கருத்து தெரிவித்தது.

நீதிபதிகளுக்கு இப்படிச் சலுகை அளிப்பதற்கு மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் பிரசாந்த் பூஷண் கடும் ஆட்சேபணை தெரிவித்தார். இதை ஏற்க மறுத்த கே.ஜி.பாலகிருஷ்ணன், தன்னுடைய நிர்வாக

கடைநிலை அரசு ஊழியர்களின் சேமநலநிதியை மோசடி செய்து ஏப்பம் விட்ட கருவூல அதிகாரி அஷுடோஷ் அஸ்தானா. அஸ்தானாவுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ளையைப் பங்கு போட்டுக் கொண்ட உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி தாருண் சட்டர்ஜி, அலகாபாத் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.கே.சிங்.





படிப்பகம்

ரீதியான உத்தரவைக் கேள்விக் குள்ளாக்கினால், இவ்வழக்கை விசாரணை செய்யும் அமர்வில்தான் பங்கேற்க முடியாது என்று ஆத்திரத்தைக் கக்கி அதிலிருந்து வெளியேறினார். மூத்த உச்ச நீதிமன்ற நீதிபதியான பி.என்.அகர்வாலும் இந்த அமர்விலிருந்து விலகிக் கொண்டார்.

தொழிலாளர்கள் மற்றும் கடைநிலை அரசு ஊழியர்களின் வைப்பு நிதியைக் கையாடல் செய்து ஏப்பம் விட்ட அநீதிபதிகளின் மீது இந்நீதிபதிகளுக்கு ஆத்திரம் வரவில்லை. மாறாக, ஊழல் நீதிபதிகளுக்கு சலுகை அளிக்கக்கூடாது என்றதும் ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. அந்த அளவுக்கு வர்க்கப் பாசமும் இனப் பாசமும் இந்நீதிபதிகளிடம் பொங்கி வழிந்தது.

அதன் பிறகு, செப்டம்பர் 2008-இல் டி.கே.ஜெயின் தலைமையிலான புதிய அமர்வின் மேற்பார்வையில் சி.பி.ஐ. விசாரணை நடந்து, முன்னாள் அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதிகளான ஆர்.பி.யாதவ், ஆர்.என்.மிஸ்ரா, ஏ.கே.சிங் மற்றும் மூன்று மாவட்ட நீதிபதிகளின் மீது சி.பி.ஐ. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. குற்றவாளிகளான நீதிபதிகளில் மூன்று பேர் பணியிடமாற்றம் செய்யப்பட்டதைத் தவிர, வேறு எந்த தண்டனையும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. இதற்கிடையே இவ்வழக்கின் முக்கிய சாட்சியான அஸ்தானா, அக்டோபர் 2009-இல் உ.பி.யின் தஸ்னா மாவட்டச் சிறைச்சாலையில் மர்மமான முறையில் மாண்டு போனான். நீதிபதிகளும் அதிகாரிகளும் இதர முக்கிய சாட்சியங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் மிரட்டி விசாரணையை இழுத்தடித்து வந்ததால், 17 நீதிபதிகள் மீதான குற்றச்சாட்டுக்கு எவ்வித ஆதாரமுமில்லை என்று சி.பி.ஐ. தெரிவிக்க வேண்டியதாயிற்று.

நத்தை வேகத்தில் இந்த விசாரணை நகர்ந்து வந்த நிலையில், தற்போதைய காசியாபாத் மாவட்ட நீதிபதியான விஷ்ணு சந்திர குப்தா, வழக்கு கோப்புகளையும் வாக்குமூலக் குறுந்தகடுகளையும் உள்ளூர் போலீசாரிடம் ஒப்படைக்குமாறும், அவர்களுடன் இணைந்து விசாரணை நடத்துமாறும் சி.பி.ஐ. அதிகாரிகளிடம் கடந்த ஜூலை 26-ஆம் தேதி கூறி, வழக்கை திசை திருப்பி முடக்க முயற்சித்துள்ளார். இதையறிந்த அட்டர்னி ஜெனரல் கூலம் வாகன்வாதி, உடனடியாக வழக்கு விசாரணையை காசியாபாத்துக்கு வெளியே டெல்லியில் வைத்து நடத்துமாறும், இல்லையேல் நீதிபதிகளே இவ்விசாரணையை நீர்த்துப்போகச் செய்து விடுவார்கள் என்றும் வலியுறுத்தியுள்ளார்.



**ஊழல்-முறைகேடுகளில் ஈடுபட்டாலும், நீதிபதிகளைக் கேள்விக்கிடமற்ற புனிதமானவர்களாக சட்டமும் ஆளும் வர்க்கங்களும் தீவிரமாகப் பாதுகாத்து வருகின்றன.**

உயர் நீதிமன்ற - உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டு அம்பலமானால், எப்படியெல்லாம் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அதை மூடி மறைத்துத் தப்பிக்க முயற்சிப்பார்கள் என்பதற்கு காசியாபாத் நீதிபதிகளின் ஊழல் வழக்கே சான்று கூறப் போதுமானது. குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் அவ்வளவு சுலபமாக இந்தக் கண்ணியவான்களைத் தண்டித்துவிட முடியாது. நீதிபதிகள் தண்டிக்கப்பட்டால் நீதித்துறையின் மீதான மக்களின் நம்பிக்கையே கேள்விக்குள்ளாகிவிடும் என்று கூறி, நீதிபதிகளைக் கேள்விக்கிடமற்ற புனிதமானவர்கள் என்று சட்டமும் ஆளும் வர்க்கங்களும் தீவிரமாகப் பாதுகாத்து வருகின்றன.

உச்ச நீதிமன்ற நீதிபதி இராமசாமியின் ஊழல், கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி சௌமித்ரா சென் ஊழல், பஞ்சாப் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஊழல், தமிழகத்தின் மோசடி நீதிபதி தினகரனின் நில ஆக்கிரமிப்பு, தனக்கு வேண்டியவர்களுக்குச் சாதகமாக நீதிபதிகள் உத்தரவிடுவது, தீர்ப்பு வழங்குவது-என அடுத்தடுத்துப் பல ஊழல்களும் முறைகேடுகளும், இந்நீதிபதிகள் குடித்துவிட்டு கும்மாளம் போட்ட விவகாரங்களும் அம்பலமான போதிலும் எந்த நீதிபதியும் தண்டிக்கப்பட்டதாக வரலாறில்லை.

அதேசமயம், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி கபாடியா, ஸ்டெர்லைட் நிறுவனத்தில் பங்குகள் வைத்திருப்பதை அம்பலப்படுத்தி ''தெகல்கா'' வார இதழுக்குப் பேட்டியளித்த உச்ச நீதிமன்ற வழக்குரைஞரான பிரசாந்த் பூஷண் மீதும், ''தெகல்கா'' இதழின் ஆசிரியர் மீதும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. 2007-இல் தலைமை நீதிபதியாக இருந்த சபர்வால், தனது மகன்களது கூட்டாளிகள் கட்டும் பேரங்காடியின் வியாபாரம் பெருகுவதற்காக டெல்லியில் பல்லாயிரக்கணக்கான சில்லறை வியாபாரிகளை அடித்து விரட்ட உத்தரவிட்டார். இதை அம்பலப்படுத்தி செய்தி வெளியிட்ட ''மிட் டே'' என்ற நாளேட்டின் பத்திரிகையாளர்களும் கேலிச்சித்திர ஓவியரும் நீதிமன்ற அவமதிப்பு செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு 4 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்திய நீதித்துறைதான் இந்தியக் குடிமகனின் கடைசி நம்பிக்கை என்று ஆளும் வர்க்கங்களும் ஊடகங்களும் சித்தரித்து வருகின்றன. ஆனால், கிரிமினல் - ஊழல் - மோசடி அநீதிபதிகளிடம் நாம் இனியும் நம்பிக்கை வைக்க முடியாது என்பதையே பெருகிவரும் நீதித்துறை ஊழல்களும் மோசடிகளும் நிரூபித்துக் காட்டுகின்றன.

● தனபால்



படிப்பகம்

www.padippakam.com

## காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி:

# ஊழலுக்குக் கவசமாகும் 'தேசிய கவுரவம்'!

**ஊழல் செய்வதற்காகவே விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன என்பது பாமரனுக்கும் புரிந்துவிட்டது.**

பல தலைமுறைகளாக ஊழலிலே ஊறித்திளைத்த காங்கிரஸ் கொள்ளைக் கூட்டம், அடுத்த மாதம் நடைபெறவுள்ள காமன்வெல்த் போட்டிகளின் சந்து பொந்துகளில் எல்லாம் புகுந்து கீழ்த்தரமாகப் பொறுக்கித் தின்றிருப்பது இப்போது சந்தி சிரிக்கிறது.

சென்ற ஆண்டு ஒலிம்பிக் போட்டியை சீனா நடத்தியதைத் தொடர்ந்து, இந்தியாவிலும் அதைப் போன்றதொரு போட்டியை நடத்தி அந்நிய முதலீடுகளை ஈர்க்கப் போவதாக ஆட்சியாளர்கள் கூறிவந்தார்கள். அதன்படி, 40 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், வரும் அக்டோபர் 3-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதிவரை காமன்வெல்த் நாடுகளின் போட்டிகளை டெல்லியில் நடத்தவிருக்கிறார்கள். இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகளை செய்வதற்கென அமைப்புக் கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதன் தலைவராக சுரேஷ் கல்மாடி என்ற முன்னாள் காங்கிரசு அமைச்சர் நியமிக்கப்பட்டார். இந்தப் போட்டிகளுக்காக நவீன விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளங்கள், விளையாட்டு வீரர்கள் தங்கும் குடியிருப்புகள் போன்றவற்றைப் புதிதாகக் கட்டுவது, ஏற்கெனவே உள்ள விளையாட்டு அரங்கங்களைச் சர்வதேச தரத்திற்கு நவீனப்படுத்துவது எனப் பல வேலைகள் தொடங்கி நடந்து வருகின்றன.

இந்தத் திட்டங்களின் எல்லா இடங்களிலும் வகைதொகையின்றி, அரசியல்வாதிகளும் அதிகார வர்க்கமும் உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகளும் கூட்டுச் சேர்ந்து ஊழல் செய்துள்ளது அம்பலமாகி வருகிறது. சென்ற மாதத்தில் இவர்களது ஊழல் வெளிப்படாத நாளே இல்லை என்று கூறும் அளவிற்கு தினந்தோறும் ஏதாவதொரு திட்டத்தில் ஊழல் நடந்திருப்பது அம்பலமாகியது.

பிரிட்டனின் முன்னாள் காலனி நாடுகள் அதனிடமிருந்து 'சுதந்திரம்' பெற்ற பின்னரும், எஜமான விசுவாசத்துடன் அமைத்துள்ள கூட்டமைப்புதான் காமன்வெல்த் என்பதாகும். காலனிய அடிமைத்தனத்தின் மிச்சசொச்சமாக விளங்கும் காமன்வெல்த்தின் தலைமைப் பீடமான பிரிட்டிஷ் பேரரசியின் முன்னிலையில் நடைபெற்ற 'காமன்வெல்த் சுடர்' ஊர்வலத்தை அகன்ற திரையில் காட்டவும், அந்த ஊர்வலத்திற்கு கார்களை வாடகைக்கு எடுக்கவும், ஏ.எம்.பிலிம்ஸ், ஏ.எம்.கார்ஸ் ஆகிய பிரிட்டிஷ் நிறுவனங்களுடன் பல கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டன. ஆனால், அது போன்ற நிறுவனங்கள் எதுவும் உண்மையில் இல்லை. இந்தியாவில் இவர்கள் கொடுத்திருந்த முகவரியும் போலியானது. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக பிரிட்டனில் உள்ள இந்திய தூதரகம் அனுப்பியது போன்றதொரு போலியான சிபாரிசுக் கடிதத்தை அதிகாரிகளே உருவாக்கி ஏமாற்றியுள்ளனர். பிரிட்டிஷ் பேரரசியே தனது அதிருப்தியைத் தெரிவிக்குமளவுக்கு இந்த ஊழல் சில்லறைத்தனமாக நடந்துள்ளது.

நாட்டிலுள்ள தனியார் மற்றும் அரசு நிறுவனங்களிடம் இவ்விளையாட்டுப் போட்டிக்கு விளம்பரம் திரட்டித் தரவும், விளம்பரக் கட்டணத்தை வசூலிக்கவும் ஸ்போர்ட்ஸ் அண்ட் மேனேஜ்மென்ட் என்ற ஆஸ்திரேலிய நிறுவனம் அமர்த்தப்பட்டது. இந்நிறுவனம் இதுவரை ஒரு விளம்பரதாரரைக் கூடப் பிடித்து தரவில்லை. அரசு நிறுவனங்கள் அரசு விழாக்களுக்கு விளம்பரம் தருவதென்பது வழக்கமான செயல்தான். இந்திய அரசுத் துறை நிறுவனங்கள் தாமே முன்வந்து வழங்கிய கோடிக் கணக்கான விளம்பரதாரர் தொகையில் 23 சதவீதத்தை, செய்யாத வேலைக்குத் தரகுப் பணமாக இந்த நிறுவனத்திற்குத் தரவேண்டும்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஊழல் நாயகன் சுரேஷ் கல்மாடி.





படிப்பகம்

www.padippakam.com

நாக்பூரில் புதிதாக ஒரு விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ஆன செலவு 84 கோடி ரூபாய்தான். ஆனால், டெல்லி நேரு விளையாட்டரங்கை 'மேம்படுத்த' மட்டும் 669 கோடி ரூபாய் செலவழித்துள்ளனர். இவ்வாறு 'மேம்படுத்தப்பட்ட' அரங்கத்தின் கூரை, அண்மையில் பெய்த லேசான மழைக்கே ஒழுக ஆரம்பித்துவிட்டது. இதேபோன்று இன்னும் 17 அரங்கங்களை பல ஆயிரம் கோடிகளில் 'மேம்படுத்தி'யுள்ளனர்.

''டிரெட் மில்'' என்னும் உடற்பயிற்சி சாதனத்தின் அதிகபட்ச விலையே ரூபாய் மூன்று லட்சம்தான். ஆனால், அதனை 9.75 லட்சத்திற்கு வாடகைக்கு எடுத்துள்ளனர். 10,000 ரூபாய் மதிப்புள்ள ஏர் கூலரை 40,000 ரூபாய்க்கும், ரூ.25,000 மதிப்புள்ள கணினியை 89,052 ரூபாய்க்கும் வாடகைக்கு எடுத்துள்ளனர். கையை சுத்தம் செய்ய சோப்புக் கலவையை உமிழும் சாதனத்தின் விலையே 450 ரூபாய்தான். இதனை 3,397 ரூபாய்க்கு வாடகைக்கு எடுத்துள்ளனர். குடைகளை 6,000 ரூபாய்க்கு வாடகைக்கு எடுத்த அநியாயம் குறித்து கேட்ட பொழுது, அக்குடைகளெல்லாம் 'தனிச் சிறப்பானவை' என்று கூச்சநாச்சமின்றிப் புளுகுகின்றனர். 50 முதல் 100 ரூபாய் மதிப்புள்ள கழிவறைக் காகிதச் சுருளை, 3,757 ரூபாய்க்கு வாங்கியுள்ளனர். அவற்றில் 'தனிச் சிறப்பாக' ஏதேனும் இருக்குமோ என்னவோ?

இதேபோல முக்கிய பிரமுகர்கள் அமரும் சோபா செட்டுகள், குளிர்சாதன எந்திரங்கள், கார்கள் என பலவற்றை அவற்றின் சந்தை விலையை விட பல மடங்கு கூடுதலான விலைக்கு வாடகைக்கு எடுத்துள்ளனர். தொடக்கவிழாவின் போது ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சும் ஹீலியம் பலூனுக்கு அன்றைய ஒருநாள் வாடகையாக ரூ.50 கோடி வாரியிறைக்கப்பட்டுள்ளது. ஆனால், அது அரங்கத்தின் பாதியளவுக்குத்தான் ஒளியை உமிழும் என்று தொழில்நுட்பவாதிகளே அம்பலப்படுத்துகின்றனர்.

2003-இல் திட்டமிடப்பட்ட போது, இப்போட்டியை நடத்த மொத்தத்தில் ரூ.1,899 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால், எல்லா அதிகாரிகளும் முதலாளிகளும் போட்டி போட்டுக் கொண்டு பணத்தைச் சுருட்டியதால் தற்போது செலவு மதிப்பீடு 35,000 கோடிகளில் வந்து நிற்கிறது. வேலைகள் எதுவும் முடிந்தபாடாய் இல்லை என்ற நிலையில், திட்டமிட்டதைவிட 1575% செலவு அதிகரித்துவிட்டது. இதனை ஈடுகட்ட டெல்லி மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட நிதிகள் இதற்குத் திருப்பி விடப்பட்டுள்ளன. ஆதரவற்ற முதியவர்களுக்கான 171 கோடி, தாழ்த்தப்பட்டவர்களுக்கான 744 கோடி நிதி ஒதுக்கீடு ஆகியன காமன்வெல்த் போட்டிகளுக்கு செலவு செய்யப்பட்டன. இதுதவிர, மெட்ரோ ரயில் திட்டத்திற்கென டெல்லி அரசு கொடுக்க வேண்டிய 5,000 கோடி ரூபாய், பல்வேறு கலாச்சார அமைப்புகளுக்கான டெல்லி அரசின் நிதி ஒதுக்கீட்டில் 14 கோடி ரூபாய் - என பிற நலப்பணிக்களுக்கான நிதிகள் காமன்வெல்த்தில் கரைக்கப்பட்டுவிட்டன.



காமன்வெல்த் ஊழல்-மோசடியை அம்பலப்படுத்தி நடந்த -தன போராட்டம்.

இந்த விளையாட்டுப் போட்டியை நடத்த தனியாக ஒரு நகரத்தை உருவாக்காமல், தெற்கு டெல்லியை ஆட்சியாளர்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர். இதற்காக தெற்கு டெல்லியில் நீண்டகாலமாகக் குடியிருந்து வரும் சேரிவாழ் மக்களை, நகரை அழகுபடுத்துவது என்ற பெயரில் விரட்டியடித்துள்ளனர். இதன் மூலம் டெல்லி பெருநகரத் திட்டத்தை தெற்கு டெல்லிவரை விரிவுபடுத்தி மேட்டுக்குடியினர் ஆதாயமடைந்

தேசத்தின் பெருமையா? வக்கிரமா?: காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிக்காக தெற்கு டெல்லியில் இடிக்கப்பட்ட ஏழைகளின் குடியிருப்புகள். வீடிழந்து விரட்டப்படும் ஏழைக் குடும்பங்கள்.







படிப்பகம்

www.padippakam.com

துள்ளனர். விளையாட்டுப் போட்டிகளை ஒட்டி கட்டப்படும் வீடுகளை, போட்டிகள் முடிந்த பின்னர் கைப்பற்றிக்கொள்ள இப்போதே போட்டாபோட்டியும் ஊழல்களும் பெருகி, வெளியே கசியத் தொடங்கிவிட்டன.




இலஞ்ச ஒழிப்புத் துறை, இதுவரை நடத்திய விசாரணை மூலம் 16 திட்ட ஏற்பாடுகளில் முறைகேடுகள் நடந்துள்ளதை உறுதி செய்துள்ளது. இது மட்டுமின்றி, கணக்கு தணிக்கை அதிகாரியின் இடைக்கால அறிக்கையும் ஊழல் மோசடிகள் நடந்துள்ளதை நிலைநாட்டியுள்ளது. இருப்பினும், ஊழல் வெளியாகி இத்தனை நாட்களாகியும் சுரேஷ் கல்மாடி இன்னும் பதவியில் நீடிக்கிறார். ஊழல்-செய்தவர்களுக்கு 'கடும்' தண்டனை கொடுக்கப்படும் என்று மன்மோகன் சிங் சவடால் மட்டும் அடிக்கிறார். இவை ஒருபுறமிருக்க, போட்டியில் விளையாட்டு வீரர்களைச் சேர்த்துக் கொள்ள இலஞ்சம் வாங்குவது, வீராங்கனைகளுக்கு பாலியல் நிர்ப்பந்தங்கள் கொடுப்பது என பல வழிகளிலும் அதிகார வர்க்க ஊழலும் மோசடியும் அட்டூழியங்களும் நடக்கின்றன.

கும்பி கூழுக்கு அழும்போது கொண்டைக்குப் பூ வைத்த கதையாக, நாட்டின் பெரும்பான்மை மக்கள் ஒரு வேளைச் சோறின்றி வாடும் போது ரூ.40 ஆயிரம் கோடி செலவில் இதுபோன்ற ஆடம்பர விழாக்கள் நடத்துவதென்பதே மிகவும் வக்கிரமானது. இந்த விழாவின் பெயரில் அதிகாரிகள் பொறுக்கித் தின்பதற்கு டெல்லிவாழ் ஏழை உழைக்கும் மக்களும், பல மாநிலங்களைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்களும் தமது வாழ்வைப் பறிகொடுத்துள்ளதுதான், இதை விட வக்கிரமானது. காமன்வெல்த் போட்டிக்காக டெல்லியை அழகுபடுத்துகிறேன் என்று கூறிக் களமிறங்கிய முதலமைச்சர் ஷீலா தீட்சித், டெல்லியிலுள்ள 60,000 பிச்சைக்காரர்களை விரட்டியடித்தார். சேரிகளை இடித்துத் தரைமட்டமாக்கி இலட்சக்கணக்கான ஏழை மக்களை வீடற்ற அனாதைகளாக, கடுங்குளிரில் அல்லாடவிட்டார். இனி, டெல்லியில் திருடர்களும் ஊழல் பேர்வழிகளுமான முதலாளிகளும் ஓட்டுப் பொறுக்கிகளும் இருக்கலாம். ஆனால் பிச்சைக்காரர்களும் ஏழைகளும் இருக்க முடியாது என்றாகிவிட்டது.

காமன்வெல்த் போட்டிக்காக டெல்லியின் உள்கட்டுமானத்தை மேம்படுத்தும் கட்டுமானப் பணிகளை ஒப்பந்தமெடுத்து ஊழல் செய்தவர்கள், இன்னொரு பக்கம் பீகார், ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களில் இருந்து 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களை அற்ப கூலிக்கு வரவழைத்து, கொத்தடிமைகளாகக் கசக்கி பிழிந்து வேலை வாங்கியுள்ளனர். சந்தை விலையை விட அதிக விலைக்குப் பொருட்களை வாடகைக்கு எடுத்தவர்கள், தொழிலாளர்கள் தங்குவதற்கு வீடுகள் கூடக் கொடுக்காமல் பிளாஸ்டிக் தார்பாயிலும் தகரக் கொட்டைகளிலும் மொத்தமாக அடைத்ததால், தொற்று நோய் தாக்கி இதுவரை -று பேருக்கும் மேல் பலியாகியுள்ளனர். கட்டுமானப் பணிகளில் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து தரப்படாத நிலையில் ஏற்பட்ட விபத்துகளிலும், தரக்குறைவான பொருட்களால் கட்டப்பட்ட பாலங்கள், கட்டுமானங்கள் இடிந்து விழுந்த சம்பவங்களிலும் -ற்றுக்கணக்கில் தொழிலாளர்கள் கேள்வி கேட்க நாதியின்றி கொல்லப்பட்டுள்ளனர். இதே போன்ற விபத்துகளின் காரணமாக மெட்ரோ ரயில் திட்டப் பணியில் மட்டும் 90-க்கும் மேலான தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர்.

காமன்வெல்த் விளையாட்டில் கரைபுரண்டோடும் ஊழலைப் பற்றிப் பேசினாலே, விளையாட்டுப் போட்டியால் இந்தியாவின் பெருமிதம் உயரும்போது, ''ஊழலைப் பற்றிப் பேசி தேசத்தின் கவுரவத்தைக் குலைக்காதீர்கள்'' என்று ஆளும் வர்க்கத்துக்கு ஆதரவாகத் 'தேசபக்தி' கூச்சல் போடுகின்றனர். காங்கிரசு முன்னாள் அமைச்சரான மணிசங்கர் அய்யர் இந்த ஊழல்களைப் பற்றி வாய்திறந்தவுடனேயே, இதை காங்கிரசும் பா.ஜ.க.வும் ஊடகங்களும் கண்டிக்கின்றன. மேட்டுக்குடி இந்தியாவின் பிரச்சினை என்று வரும் போது இங்கே கட்சி வேறுபாடுகள் கூட மறைந்து போகின்றன. பொதுவில் காமன்வெல்த், ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் என்றாலே ஊழலும் முறைகேடுகளும் நடப்பது சகஜம்தான் என்று சாதாரணமாக எடுத்துக் கொள்கின்றனர். நல்லபடியாக போட்டி நடக்கட்டும், ஊழலை பிறகு விசாரித்து முடிவு செய்வோம் என ஊழலுடன் ஒத்துப்போக வைக்கும் கண்ணோட்டம்தான் ஆளும் வர்க்கங்களாலும் ஊடகங்களாலும் பரப்பப்பட்டு வருகிறது.

'தேசியப் பெருமித' போதையில் இந்த அயோக்கியத்தனத்தை நாம் அங்கீகரிக்கப் போகிறோமா? கூச்சநாச்சமின்றி சில்லறைத்தனமாக நடந்துள்ள இந்த ஊழல் மோசடிகளையும், குடிசைவாழ் மக்களை கட்டாயமாக வெளியேற்றிவிட்டு ஆக்கிரமிக்கும் அட்டூழியத்தையும், கூலித் தொழிலாளர்களின் உதிரத்தை உறிஞ்சும் கொத்தடிமைத்தனத்தையும் நாம் இன்னமும் சகித்துக் கொண்டிருக்கத்தான் போகிறோமா?

● மணி

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி


தண்ணீர் தனியார்மயத்துக்கு எதிராக பொலிவியாவின் கோச்சபம்பா நகர மக்கள் நடத்திய மாபெரும் எழுச்சி.

தண்ணீர் தனியார்மயத்தை நிபந்தனையாகக் கொண்டுள்ளன. இதன்படி, தண்ணீர், சுகாதாரம் முதலான மக்களின் அடிப்படைத் தேவைகளை அரசாங்கம் செய்து தர வேண்டியதில்லை என்பதுதான் உலக வங்கி மற்றும் உலக வர்த்தகக் கழகத்தின் விதி.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, உலகில் நடந்த எல்லா வன்முறைப் படுகொலைகளையும் விட தண்ணீர் தொடர்பான நோய்களால் இறந்துபோனவர்களின் எண்ணிக்கையே அதிகம். ஆண்டுதோறும் தூய குடிநீர் கிடைக்காமலும் சுகாதார வசதி இல்லாமலும் உலகெங்கும் ஐந்து வயதுக்கும் குறைவான 21 இலட்சம் குழந்தைகள் மாண்டு போகின்றன. மிகக் கொடிய இருபெரும் நோய்களான எயிட்ஸ் மற்றும் மலேரியாவினால் கொல்லப்பட்டவர்களை விட, தூய குடிநீர் கிடைக்காமல் நோய் தாக்கி மாண்டவர்களின் எண்ணிக்கை அதிகம்.

ஐ.நா.வின் கணக்கீட்டின்படி, உலகில் ஏறத்தாழ 200 கோடி மக்கள் தண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்படுகின்றனர். உலகின் 88 கோடியே 40 இலட்சம் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லை. 260 கோடி மக்களுக்குக் கழிப்பறை வசதி இல்லை. உலகின் வளரும் நாடுகளிலுள்ள ஏறத்தாழ 40 % மக்களுக்கு முற்றாக இத்தகைய வசதிகள் இல்லை. ஐ.நா. மதிப்பீட்டின்படி, 2025-ஆம் ஆண்டுக்குள் உலகில் 48 நாடுகள் குடிநீர் பற்றாக்குறையால் தவிக்க நேரிடும். ஏற்கெனவே ஆயிரக்கணக்கான கிராமங்கள் நீரின்றி மக்கள் வெளியேறும் போக்கு பல ஆப்பிரிக்க நாடுகளிலும், ஈரான், சீனா மற்றும் பாகிஸ்தானிலும் நிகழ்ந்து வருகிறது. இவர்கள் ''தண்ணீர் அகதிகள்'' என்று குறிப்பிடப்படுகின்றனர்.

இந்தியாவில் 1985-இல் குடிநீர் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை 750. இது 1995-இல் 65,000 கிராமங்களாக அதிகரித்து விட்டதாக அரசாங்கமே ஒப்புக் கொள்கிறது. இந்தியாவில் பாதிக்கும் மேற்பட்ட நதிகள் மற்றும் ஏரிகளின் நீர் மாசுபட்டுள்ளது. அந்நீரைக் குடிக்கவோ குளிக்கவோ பயன்படுத்த முடியாது. நாட்டின் மூன்றில் இரு பங்கு மக்களுக்குப் போதுமான சுகாதார வசதிகள் கிடையாது. இந்தியாவில் நடந்து வரும் தண்ணீர் வியாபாரத்தின் ஓராண்டு மதிப்பு ஏறத்தாழ 10 ஆயிரம் கோடி ரூபாய் என்கிறது ஒரு ஆய்வு. தண்ணீர் தனியார்மயத்தை உள்நாட்டில் தீவிரமாகச் செயல்படுத்திவரும் இந்திய அரசு, உலக அரங்கில் தண்ணீர் மட்டுமின்றி, பல்வேறு மனித உரிமை விவகாரங்களில் முற்போக்கு நாடகமாடிக் கொண்டு பித்தலாட்டம் செய்து வருகிறது.


கோகோகோலாவினால் பாலைவனமாகிவிட்ட கேரளத்தின் பிளாச்சிமடாவில், அவ்வாலையை மூடக்கோரி மக்கள் நடத்தும் போராட்டம்.

தண்ணீர் மனித இனத்தின் அடிப்படைத் தேவை. ஆனால், அந்தத் தேவை என்பது உங்களது வாங்கும் சக்தியைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. எனவே அது விற்பனைக்கானது. மாறாக, உரிமை என்பது நீங்கள் பெற்றே ஆகவேண்டிய விசயம். அதை வியாபாரப் பொருளாக்க முடியாது. இத்தனை காலமும் வெறுமனே அடிப்படைத் தேவை என்று குறிப்பிட்டு வந்த ஐ.நா.மன்றம், இப்போது தண்ணீர் என்பது மனித இனத்தின் அடிப்படை உரிமை என்று ஏற்றுக் கொண்டுள்ளது.

தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், உலக நாடுகளைக் கட்டுப்படுத்தாத வெறும் காகிதத் தீர்மானம் தான். கட்டுப்படுத்தும் என்றால் இத்தனை நாடுகள் இத்தீர்மானத்தை ஆதரிக்குமா என்று உறுதியாகச் சொல்ல முடியாது. எனினும், பெயரளவிலான இத்தீர்மானத்தைக் கூட ஏகாதிபத்திய தண்ணீர் ஏகபோக நிறுவனங்கள் எதிர்த்து நின்று சதி செய்கின்றன. இது நடைமுறைக்கு வந்துவிட்டால் ஆபத்து என்று அலறுகின்றன. மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று பிற நாடுகளில் தலையீடு செய்யும் ஏகாதிபத்தியங்கள், மிகச் சாதாரண தண்ணீர் பெறும் உரிமையை நிலைநாட்டக் கோரும்போது, அதை நிராகரித்து எதிராக நிற்கின்றன. மனித உரிமை என்றெல்லாம் தமது ஆதிக்க நலன்களிலிருந்துதான் ஏகாதிபத்திய நாடுகள் கூச்சலிடுகின்றனவே தவிர, மக்கள் நலனிலிருந்து அல்ல.

மனித இனம் குடிக்கத் தண்ணீர்கூட கிடைக்காமல் செத்து மடிந்தாலும் பரவாயில்லை, தண்ணீர் ஏகபோக நிறுவனங்களின் கொள்ளை லாபத்துக்கும் சூறையாடலுக்கும் எவ்வித சிறு இடையூறும் நேரக்கூடாது என்பதுதான் ஏகாதிபத்தியவாதிகளின் நியாயவாதம். இதுதான் பெருமையாகப் பீற்றிக் கொள்ளப்படும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் மகிமை!

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# போபால்:
## கொலைகார
# 'டௌ'-வே வெளியேறு!

## ம.க.இ.க - வி.வி.மு - பு.மா.இ.மு - பு.ஜ.தொ.மு

**ஆகஸ்ட்-15**
**சென்னை**

# முற்றுகை



போபால் என்பது பழங்கதை அல்ல
இன்றும் தொடரும் தொடர்கதை!

சயனேட் என்பது புகையல்ல
மறுகாலனியாக்க கொடும்பகை!

போபால் என்பது கண்ணீரல்ல-
புதிய ஜாலியன்வாலா பாக்!

போபால் என்பது மரணம் அல்ல
புரட்சிப்போரின் புதிய துவக்கம்!









